# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 03 திங்கட்கிழமை (17.01.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 052


# வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்து விசேட கவனம் செலுத்துகிறது அரசு

## யாழ். சங்குப்பிட்டிப் பாலத்தை திறந்துவைத்து தமிழில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 17

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்து அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. பாலங்கள் மாத்திரமின்றி நெடுஞ்சாலை, கல்வி அபிவிருத்தி, சுகாதார வசதிகள், வீடமைப்பு, மின் விநியோகம் உட்பட அனைத்து வசதிகளையும் அரசு பெற்றுக்கொடுக்கும். இதற்கென கோடிக்கணக்கான ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(27ஆம் பக்கம் பார்க்க)



மன்னார் - யாழ்.ஏ32 வீதியிலுள்ள கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் திறந்து வைத்த பின்னர் பாலத்தினூடாக மக்களுடன் பயணிக்கிறார். ஜனாதிபதிக்கு இரு மருங்கிலும் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷவும் டக்ளஸ் தேவானந்தாவும் காணப்படுகின்றனர்.

## சங்குப்பிட்டி பாலத் திறப்பு விழாவுக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு இல்லை

கொழும்பு, ஜன.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட யாழ்.சங்குப்பிட்டி பாலத்தின் திறப்பு விழாவில் கலந்துகொள்ள தமக்கு அழைப்புக் கிடைக்கவில்லை என்று அதிருப்தி வெளியிட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், அழைப்பிதழ் கிடைத்திருந்தால் கலந்துகொள்வது தொடர்பில் தீர்மானித்திருப்போம்

(27ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-தமிழ்க் கூட்டமைப்பு 2ஆம் கட்டப்பேச்சு 21இல்

கொழும்பு, ஜன. 17

அரசு - கூட்டமைப்பு இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசும் கூட்டமைப்பும் கடந்த 10ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தியமை தெரிந்ததே.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பக் கட்டப் பேச்சுகளை நடத்துவதற்காக மூன்று

(27ஆம் பக்கம் பார்க்க)

## வேட்புமனு திகதி பிற்போடல் குறித்து தேர்தல் ஆணையாளர் இன்று ஆராய்வு

### மாவட்டத் தேர்தல் அதிகாரிகளுடன் பேச்சு

கொழும்பு, ஜன். 17

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த நிலையில், அனைத்து மாவட்டங்களிலுள்ள தேர்தல் ஆணையாளர்கள், பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி இச்சந்திப்பு கொழும்பிலுள்ள தேர்தல் செயலகத்தில்

(27ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆஸ்பத்திரி ஊழியர் மினிபஸ் மோதி உயிரிழப்பு

### நாவற்குழியில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.17

நாவற்குழி பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர் அந்த இடத்திலேயே மரணமானார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அந்தோனி வேதநாயகம் (வயது 59) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நாவற்குழியில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் வசித்து வந்த இவர் விடுமுறை நாளான நேற்று தனது வீட்டைப் பார்க்கச் சென்றிருந்தார். அங்கிருந்து கைதடி நோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே விபத்துக்குள்ளானார்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் தமிழ்க் கட்சியினர் இணைந்து போட்டியிடுவதா? இல்லையா?

### 19ஆம் திகதி தெரியுமென்கிறார் சிவாஜிலிங்கம்

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கூட்டணியாய் போட்டியிடுவதா இல்லையா என்று இந்த வாரம் புதன்கிழமைக்குப் பின் தெரியவரும்.

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான சிவாஜிலிங்கம் கூறினார்.

இதுதொடர்பாக அவர் நேற்று 'உதயன்'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பாக எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு

(27ஆம் பக்கம் பார்க்க)


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....

சொல்பெக் EW 050

Hayleys

021 2221292

சபரிமலை யாத்திரிகர்களே!

சபரிமலை செல்ல இருக்கும் யாத்திரிகர்களே மிகவும் குறைந்த கட்டணங்களில் விமானப் பயணச் சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
METRO TRAVELS & Tours (pvt) Ltd.,
No. 62/33, Stanly link Road,Jaffna.
Tel.: 0215673555, 0215673666
Fax: 0212220404

இன்னும் நான்கு நாட்கள்

JAFFNA International 2011 TRADE FAIR 2nd Edition

ஜனவரி 21, 22, 23 திகதிகளில்

உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச் செய்வோம்.

Online உதயன்

www.onlineuthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்: 021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222




# இந்திய விமானப் படைத் தளபதி வந்தார் பாக்.தளபதி அடுத்த வாரத்தில் வருவார்

கொழும்பு, ஜன. 17

இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் பிரதீப் வசந்த் நாயக் நான்கு நாள் பயணமாக இன்று கொழும்பை வந்தடைந்தார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை நண்பகல் வந்தடைந்த அவரை இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் றொஷான் குணதிலக மற்றும் உயர்நிலை அதிகாரிகள் வரவேற்றனர்.

இலங்கையில் தங்கியிருக்கும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் முப்படைகளின் தளபதிகள், ஆகியோரை இந்தியத் தளபதி சந்தித்துப் பேசவுள்ளார். இலங்கை விமானப்படையின் முக்கிய தளங்களுக்கும் சென்று பார்வையிடவுள்ளார்.

குறிப்பாக இந்தியா வழங்கிய வான் பாதுகாப்பு ரேடர்கள் பொருத்தப்பட்டுள்ள இடங்களுக்கும் அவர் சென்று பார்வையிடத்திட்டமிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களில் இந்திய இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகள் இலங்கை வந்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே விமானப்படைத் தளபதி தற்போது வந்துள்ளார்.

**கடந்த சில மாதங்களில் இந்திய இராணுவம் மற்றும் கடற்படைத் தளபதிகள் இலங்கை வந்திருந்தனர். அதன் தொடர்ச்சியாகவே விமானப் படைத் தளபதி தற்போது வந்துள்ளார்.**

இதேவேளை, பாகிஸ் தானிய இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்பக் பர்வேஸ் கயானியும் இந்த வாரம் இலங்கை வரவுள்ளார். மூன்று நாள் பயணமாக அவர் எதிர்வரும் புதன் கிழமை கொழும்பை வந்தடைவார்.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளபதிகளைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக இவர் கலந்துரையாடவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ. எனப்படும் பாகிஸ்தானின் உள்ளக புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் நாயகமாக இவர் முன்னர் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## குதூகலம்



சங்குப்பிட்டிப் பாலத்தில் கூடியிருந்த மக்களுக்கு கைலாகு கொடுத்து மகிழும் மஹிந்த.

# அதி நவீன சொகுசு ரயில்கள்

கொழும்பு, ஜன. 17

சீனாவிலிருந்து இலங்கை அரசு அதி சொகுசு ரயில்களை கொள்வனவு செய்யவிருக்கிறது என இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சீனாவிலிருந்து இரண்டு அதிசொகுசு ரயில்களை இரு மாத காலத்திற்குள் இறக்குமதி செய்யவுள்ளது என ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுமக்கள் அவரது திருமணங்களையோ அல்லது பிறந்தநாள் நிகழ்வுகளையோ இந்த இறக்குமதி செய்யப்படும் ரயில்களினுள் நடத்திச் செல்லும் வண்ணமும் இவற்றுள் சொகுசு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, பொதுமக்களின் நலன் கருதி இந்த ரயில் சேவைக்கான அட்டவணை அனைத்துப் பிரதான ரயில் நிலையங்களையும் உட்படுத்தியதாக் இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்

# வடக்கில் சுயேச்சைகள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தவில்லை

யாழ்ப்பாணம், ஜன.17

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை எந்தவொரு சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

4 மாநகர சபைகள், 28 பிரதேச சபைகளுக்கு இம்முறை வடமாகாணத்தில் தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்காக இந்த மாதம் 6ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்த முடியும்.

இருந்தபோதும் இதுவரை எந்தவொரு சுயேச்சைக் குழுக்களும் யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியிலோ அல்லது வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியிலோ போட்டியிடுவதற்காகக் கட்டுப்பணம் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனதா விமுக்திப் பெரமுன (ஜே.வி.பி), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பன நியமனப் பத்திரங்களைப் பெற்றுச் சென்றுள்ளன.

கடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் அதிக எண்ணிக்கையான சுயேச்சைக் குழுக்கள் வட மாகாணத்தில் போட்டியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

# அத்தியாவசிய பொருள் விலை கட்டுப்பாடு

கொழும்பு, ஜன.17

பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்வதைத் தடுக்கும் திட்டமொன்றாக ஐந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, பருப்பு, சீனி, நெத்தலிக் கருவாடு மற்றும் பால்மாக்கள் ஆகியவற்றுக்கு விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கு அரசு ஆயத்தமாகி வருவதாகத் தெரிய வருகின்றது.

விசேட பொருளாதாரச் சிரமங்களால் அவதிப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் சந்தையில் அவை இலகுவாகக் கிடைக்கச் செய்வதற்கும் அவற்றின் விநியோகத்தை நேர்சீராக்குவதற்கும் தற்போது செயற்றிட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது.

அதேபோன்று மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் மீன் பிடிக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு மேற்கொண்டுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ள அவர் அத்திட்டத்தின் வெற்றிகரமான பெறுபேற்றுடன் மீனின் விலையும் பெருமளவில் குறைவடை யும் எனவும் தெரிவித்தார். (ஒ-22)

# நிகழ்வுகள்

## இன்றும்

### கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2011 ஆம் ஆண்டிற்குப் புதிய மாணவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

இங்கு 9 பாடநெறிகளுக்காக 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை 112 மாணவர்கள் மட்டுமே பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மிகுதி மாணவர்கள் இவ்வாரத்துக்குள் பதிவுகளை மேற்கொள்ளத் தவறின் காத்திருப்போர் பட்டியலிலிருந்து புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். மேலும் ஆங்கில பாட நெறிக்கான நேர்முகப்பரீட்சை விரைவில் இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ற-100)

### பொருள்கள் வழங்கலும் கௌரவிப்பும்

ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் வழங்கும் நிகழ்வும், கௌரவிப்பு நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எ.விநாயகமூர்த்தி கலந்துகொள்வார்.

பாடசாலை அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்தவர்கள் விவரம் வருமாறு -

அ.விநாயகமூர்த்தி - 150,000, ஈ. சரவணபவன் - 100,000, மாவை சேனாதிராஜா - 50,000. (ற)


### நாளை தேர்த் திருவிழா

காரைநகர், ஜன.17

காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலின் வருடாந்த தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கும். மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

இவ்வாலயப் பெருந்திருவிழா கடந்த 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெற்று வருகின்றது. (ற-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திறந்து வைத்த 288 மீற்றர் நீளமான கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தின் கண்கவர் தோற்றம்.

# மரக்கறி வியாபாரத்தில் படையினர் பொதுமக்களை ஏமாற்றும் நாடகம்

## சாடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 17

''மரக்கறி வியாபாரத்தில் படையினர் ஈடுபட்டிருப்பதன் மூலம் மரக்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியாது. வெறும் 14 லொறிகளில் மரக்கறிகளை விற்று எவ்வாறு விலையைக் கட்டுப்படுத்த முடியும்'' - என்று ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. அநுரகுமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று பத்தரமுல்லையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு, படையினரை இப்போது மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுத்தியுள்ளது. இதன் மூலம் மரக்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறி நாட்டு மக்களை ஏமாற்றுகிறது.

தம்புள்ளையிலிருந்து மாத்திரம் தினமும் கொழும்புக்கு மரக்கறி லொறிகள் 500 வருகின்றன. இதேபோல் ஏனைய இடங்களில் இருந்தும் கொழும்புக்கு மரக்கறி லொறிகள் வருகின்றன.

ஆனால், படையினர் கொழும்பில் 14 இடங்களில் 14 லொறிகளில் மாத்திரம் மரக்கறி வியாபாரம் செய்கின்றனர். படையினர் விற்பனை செய்யும் மரக்கறிகளின் விலையில் எதுவித மாற்றமுமில்லை.

லொறி வாடகை, எரிபொருள் மற்றும் கூலியாள்களின் சம்பளம் போன்ற செலவுகளை உள்ளடக்கித்தான் தம்புள்ளையில் இருந்து கொழும்புக்குக் கொண்டுவரப்படும் மரக்கறிகளின் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஆனால், படையினர் அரசின் லொறிகளைப் பயன்படுத்துகின்றனர். எரிபொருள்களின் செலவும் அரசால் செலுத்தப்படுகின்றது. படையினருக்கு சம்பளமும் அரசால் செலுத்தப்படுகின்றது. அப்படியாயின், மரக்கறிகளின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், நிலைமை அவ்வாறில்லை.

இது மக்களை ஏமாற்றும் செயல். 14 லொறிகளில் மாத்திரம் மரக்கறி விற்பனை செய்து எப்படி விலையைக் கட்டுப்படுத்த முடியும்? மரக்கறிகளின் விலைகளைக் கட்டுப்படுத்தும் முறை இதுவல்ல - என்றார்.

# வெள்ளத்தால் கண்ணிவெடி அபாயம் எதுவும் இல்லை

## இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜன. 17

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக அப் பிரதேசங்களில் அகற்றப்படாத நிலையிலுள்ள கண்ணிவெடிகள் நிலத்தின் மேற்பரப்புக்கு வந்து வெடிக்கும் அபாயம் இல்லை.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய மெதவல நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக அகற்றப்படாத கண்ணிவெடிகள் நிலத்தின் மேற்பரப்புக்கு வருகின்றன என்றும், இதனால் வெள்ளம் காரணமாக பாதிப்படைந்த மக்கள் மேலும் பாதிப்படைவதற்கான சாத்தியம் இருக்கின்றது என்றும் நேற்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இதுதொடர்பாக இராணுவப் பேச்சாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கில் தற்போது நூற்றுக்கு 95 சதவீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதனால் இவ்வாறானதொரு அபாய நிலை அங்கு இடம்பெறுவதற்கு சாத்தியமில்லை.

கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுள்ள இடங்களிலேயே மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர். அதேவேளை, கடந்த வருடத்தில் கண்ணி வெடி வெடித்து பாதிப்புக்குள்ளான சம்பவங்கள் ஒன்றேனும் கிழக்கில் இடம்பெறவில்லை - என்றார் பிரிகேடியர்.

# கூட்டணி வேட்பாளர்: தெரிவு ஆரம்பம்

வலி. வடக்கு, ஜன.17

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வலி. வடக்குக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்துள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையிலான வேட்பாளர் தெரிவுக் குழுவினர் இந்த நடவடிக்கையை துரிதமாக மேற்கொண்டிருந்தனர்.

வலி.வடக்குப் பிரதேச சபைக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் மற்றும் கலந்துரையாடல் மல்லாகத்தில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ஆண்கள், பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து ஏனைய பிரதேச செயலகங்களுக்கான வேட்பாளர் தெரிவு இடம்பெறும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் த.கஜன் தெரிவித்தார். (ஒ-86)

# யாழ். நகரில் நேற்றைய தினம் விமரிசையான பட்டிப் பொங்கல்



யாழ்ப்பாணம்,ஜன.17

தமிழர்களின் பாரம்பரிய திரு நாள்களில் ஒன்றான தைப் பொங்கலுக்கு மறுநாள் பட்டிப் பொங்கல் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் குடாநாட்டில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாழ். நகரின் சத்திரச் சந்தியில் அமைந்துள்ள ஞான வைரவர்,ஆலயத்தில் பட்டிப்பொங்கல் கோமாதா உற்சவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டிதர் க.பேரின்ப நாயகம் தலைமையில் நடைபெற்றன. பசுக்கள், இடபங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஞான வைரவர் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த பசுக்களின் ஊர்வலம் யாழ். பஸ்நிலையம், ஆஸ்பத்திரி வீதி, மின்சார நிலையவீதி ஊடாக நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அறநெறிப் பாடசாலைகளின் பிள்ளைகள் உட்பட இந்து சமயத்தவர்கள், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சின்மயானந்த சுவாமிகள், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (201-7)

# இந்திய கோழி இறைச்சிக்கு 'ஹலால்' வரி இல்லையென புகார்

கொழும்பு, ஜன. 17

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோழி இறைச்சி ஹலால் முறைப்படி அறுக்கப்பட்டதல்ல. எனவே முஸ்லிம்கள் இக்கோழி இறைச்சியை கொள்வனவு செய்வது குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

ஐ.தே.கட்சியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை எதிர்க் கட்சித் தலைவரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றபோதே மேல் மாகாண ஐ.தே.கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அரசு இப்போது கோழி இறைச்சி விலையின் உயர்வைத் தடுக்க இந்தியாவிலிருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்துள்ளது. இந்தக் கோழி இறைச்சி ஹலால் முறைப்படி அறுக்கப்பட்டதல்ல. இதுகுறித்து முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இதேவேளை, அரசு பெல்ஜியம் ஹம்கோ டம்கோ என்ற இறைச்சி உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திடமிருந்து கோழி இறைச்சியை இறக்குமதி செய்ய இலங்கை நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஹம்கோ டம்கோ கம்பனி பன்றி இறைச்சி வகைகளையும் ஏற்றுமதி செய்கிறது. இது குறித்தும் முஸ்லிம்கள் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ-சி)

# மாற்றுவலுவுடையோரும் கையாளத்தக்க ரயில் நிலையங்களே வடக்கில் அமையும்

நாவற்குழி, ஜன.17

வடக்கிற்கான ரயில் நிலையங்கள் நிர்மாணிக்கப்படும் போது மாற்று வலுவுள்ளோர் உள்நுழையக்கூடியவாறு நிர்மாணிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் அங்கவீனமுற்றோர் தேசிய செயலகப் பணிப்பாளர் எம்.டி.சி. ஜயமானே .

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

ஓமந்தை முதல் காங்கேசன் துறை வரையிலான ரயில்வேப் பாதைகளும் நிலையங்களும் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஓமந்தை ரயில் நிலையத்தில் மாற்று வலுவுள்ளோர் முச்சக்கர வண்டி, சக்கரநாற்காலி ஆகியவற்றின் ஊடாக உள் நுழையக் கூடிய தான வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல கண்பார்வையற்றோர் வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் இடத்தை அடையாளம் காணக் கூடியதாக நில அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மதவாச்சி தொடக்கம் தலைமன்னார் வரையில் புனரமைக்கப்படவுள்ள ரயில்வே வழித்தடத்திலும் மேற்படி நிலையங்கள் இவ்வாறு அமைக்கப்படவுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகளுக்காக இலங்கை ரயில்வே திணைக்களத்துடனும் வேலை ஒப்பந்தக்காரர்களுடனும் இணைந்து இயங்க உள்ளோம்.

சகல ரயில் நிலையங்களும் மாற்று வலுவுள்ளோர் உள் நுழையக் கூடியதாக விரைவில் மாற்றப்படுமென்றும் அவர் மேலும்தெரிவித்தார். (201-121)

# இம்முறை தேர்தல் செலவு ரூபா 50 கோடி

இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் 235 பிரதேச சபைகளின் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக சராசரியாக 50 கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் என்று தேர்தல் திணைக்களம் எதிர்பார்க்கின்றது. பெரும்பாலும் இத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாத நடுப் பகுதியில் இடம்பெறக் கூடுமெனவும் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, பிரதேச சபைகளின் தேர்தலை நடத்துவது சம்பந்தமான தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தலைமையில் ஆலோசனைகளை வழங்கும் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடாகியுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கு [illegible] செயலாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர் என்று தேர்தல் [illegible] (ஒ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தினால் கண்ணிவெடி அபாயம்

கொழும்பு, ஜன. 17

கிழக்கு மாகாணத்தில் பல பகுதிகள் நீரினால் மூழ்கியுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிலக்கண்ணி வெடி அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் என்பன இந்த அச்சுறுத்தலை விடுத்துள்ளன.

இது தொடர்பில் வெள்ளம் ஏற்பட்டுள்ள பகுதிகளின் இராணுவ கட்டளை மையங்களுக்கு எச்சரிக்கை செய்யுமாறு இராணுவத் தலைமையகம் நேற்று முன்தினம் அறிவுறுத்தியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களும் அவர்களுக்கு நிவாரணங்களை வழங்கி வருபவர்களுக்கும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் நிலக்கண்ணி வெடிகளால் மக்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என இராணுவ பேச்சாளர் உதய மெதவெல தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களே அதிக அளவில் வெள்ளத்தினால் பாதிப்படைந்துள்ளன.

எனினும், அங்கு 90 சதவீதமான நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். எனினும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வெள்ளம் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் இந்த கண்ணி வெடி அச்சுறுத்தல் அதிகமாக காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது மழையுடனான காலநிலை குறைவடைந்துள்ள போதும் அச்சுறுத்தல் இன்னும் குறையவில்லை என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

(ம)

# பண்டாரவளைப் பிரதேச சபைத் தலைவர் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டார்

கொழும்பு,ஜன.16

பண்டாரவளை பிரதேச சபையின் தலைவர் சமிந்த விஜேசிறி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமிந்த விஜேசிறி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு, பிரதேச சபைத் தலைவராகத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பீரஸின் ஆலோசனைக்கு அமையத் தாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டதாக சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை பிரதேச சபைத் தலைவர் சமிந்த நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து, கட்சிக்கான ஆதரவினை நேரடியாக வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்தி நாட்டுக்கு சுபீட்சத்தை ஏற்ப டுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சமிந்த குறிப்பிட்டுள்ளார்.(சி)

# புதிய ஆண்டில் மொழிச் சிக்கல்களை நீக்கிவிடும் செயற்றிட்டம் அறிமுகம்

கொழும்பு, ஜன.17

அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் முயற்சிகளில்போது மக்களுக்கு மொழிச் சிக்கல்கள் ஏற்படுவதைத் தவிர்த்து விடுவது தொடர்பாக இந்த ஆண்டில் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மக்கள் சேவைகளை வழங்கும் அனைத்து அலுவலங்களிலும் காட்சிப்படுத்தப்படும் பெயர்ப்பலகைகள் அறிவித்தல்கள் போன்றவை சிங்களம் ,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் காட்சிப்படுத்தப்படல், சிங்களம், தமிழ் மொழிகளில் கரும மாற்றும் ஆற்றல் கொண்ட உத்தியோகத்தர்களை அனைத்து சேவை நிலையங்களிலும் பணியில் அமர்த்தல், விண்ணப்பப் பத்திரங்கள் மற்றும் வெளியீடுகள் போன்றவை தாம் விரும்பும் மொழியில் பெறத்தக்க விதத்திலான முறைமையொன்றைக் கட்டமைத்தல் என்பன அந்தச் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தப் புதிய ஆண்டில் அமைச்சின் செயற்பாடுகள்தொடர்பான அறிவித்தலொன்றை வெளியிட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் மொழிகள் தொடர்பான முரண்பாட்டைக் குறைத்து தமது மொழிகளிலேயே தமது கருமங்களை நிறைவு செய்து கொள்ளும் வாய்ப்பை நடைமுறையில் கொண்டுவரவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் மொழிகளைக் கற்பிக்கும் மையங்களை நிறுவி மக்களுக்கு சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பயிற்சி வழங்கத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-22)

# பங்களாதேஷ் பிரஜைகளுக்கு அபராதம்

கொழும்பு, ஜன.17

விசா அனுமதியின்றி இலங்கையில் தங்கியிருந்த பத்து பங்களாதேஷ் பிரஜைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் தலா 50,000 ரூபா அபராதம் செலுத்த வேண்டும் என்றும், அத்துடன் ஆறுமாத கால சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் கண்டி நீதிவான் லலித் ஏக்க நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

1998ஆம் ஆண்டு 45ஆம் இலக்க இலங்கைக் குடிவரவு - குடியகல்வு சட்டத்திற்கு முரணான வகையில் குறித்த பங்களாதேஷ் பிரஜைகள் செயற்பட்டுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆபிரிக்கநாடொன்றில்வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் நோக்கில் தாம் இலங்கை வந்தனர் என பங்களா தேஷ் பிரஜைகள் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஊடாக செல்வதற்காக இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் பிரஜைகள் சுற்றுலா விசாக்களின் மூலம் இலங்கைக்கு விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.(சி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பொங்கல் விழாவில் ஜனாதிபதி தரப்போகும் இனிப்புச் செய்தி என்ன?

இன்று பொங்கல் திருநாளின் மூன்றாம் நாள், தேசிய தினமாக இன்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் வருகையோடு பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

தமிழ் - சிங்கள புதுவருடத்தின்போது சிங்கள மக்கள் கொண்டை கெவுன், பயத்தம்பணியாரம் மற்றும் முக்கிய பலகாரமாக பாற்சோறு தயாரித்து ஊர் உறவுகளோடு பகிர்ந்துண்டு மகிழ்வார்கள். பாற் சோற்றுக்கு தொடுபொருளாகத் தேங்காய்ச் சம்பல் ருசிகரமாய் இருக்கும்.

அதேபோல்தான் தமிழர்கள் பொங்கலின்போது பிரதானமாகச் சர்க்கரைப் பொங்கலும் அதனுடன் புக்கையும் பொங்குவார்கள். புக்கைக்குத் தொடு பொருளாக அனேகமாக இஞ்சிசேர்த்த தேங்காய்ச்சம்பல் இருக்கும். இதுவே பலகாய்கறிகள் சேர்ந்த சாம்பாருடன் காலை உணவாகவும் அமையும்.

எதுவானாலும் இந்தப் பெருநாள் களின்போது இனிப்பினை சுவைப்பது என்பது பிரதான அம்சம் ஆகும். வருடம் முழுவதுமே மக்களின் வாழ்க்கை இனிப்பாக - இன்பமாக இருக்க வேண்டும் என்பதே இதன் தாற்பரியமாம்.

இந்தவகையில் இன்று குடாநாட்டில் தமிழ் மக்களுடன் பொங்கல் இனிப்பினைப் பகிர்ந்துகொள்ள விருக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொடிய போரின் விளைவுகளை எதிர்கொண்டு மீண்டுள்ள தமிழ் மக்களுக்கு இனிப்பான செய்தியொன்றை அல்லது பலவற்றை அறிவிப்பார் என்று அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

போரில் வெற்றிகொண்டமையால் தென்பகுதி மக்களின் அபரிமிதமான ஆதரவுடன் இரண்டாம் முறையும் பதவிக்கு வந்துள்ள அவர், தமிழ் மக்களும் தம்மை ஆதரிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயம் தான். அப்பொழுதுதான் இலங்கை மக்கள் அனைவருக்குமே அவர் தலைவர் என்ற உயர்ந்த நிலையை எட்டமுடியும். அந்த வகையில் சில பல காரியங்களை அவர் மேற்கொண்டுவருவதைப் பார்க்கின் றோம்.

தமிழர் பிரச்சினையில் இலங்கை ஜனாதிபதி அக்கறைகாட்டாமல் இருந்துவருகிறார் என்பது போன்ற ஒரு கருத்தினை நோர்வே அமைச்சர் எரிக்சொல்ஹெம் சர்வதேச மட்டத்தில் பரப்புரை செய்திருப்பதாக அண்மையில் ஒரு செய்தி பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது. அக்கருத்தை பொய்ப்பிக்கும் விதமாக அண்மைக்காலத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதில் ஒன்றுதான் தமிழர் தரப்புடன் அரசு இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆலோசனைகள் நடத்த ஆரம்பித்திருப்பதாக எடுத்துக்கொள்ளலாம். அதுமட்டுமல்ல ஜனாதிபதி பல கருத்துக்களை அண்மையில் ஊடகப் பிரமுகர்களின் சந்திப்பின்போதும் வெளியிட்டிருக்கிறார். வெளிநாட்டு செய்தியாளர்களுக்கான காலை விருந்தொன்றின்போது அவர்கள் பல்வேறு கேள்விகளுக்கு மத்தியில் அதிகார மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவென்று கேட்டார்கள். அதற்குப் பதில் அளித்த ஜனாதிபதி அரசமைப்புக்கான 13ஆம் திருத்தத்தை தாம் ஆதரிப்பதாகத் தெரிவித்தார். என்றாலும் அதற்கும் மேலான தமது நிலைப்பாட்டினை இப்போது விவரிக்கும் நிலையில் தாம் இல்லை என்றார். இவை எவ்வாறு அமையவேண்டும்- எல்லைக்கோடு எப்படி இருக்கவேண்டும் என்பவை பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய தமிழ் குழுக்களுடனும் விவாதிக்க விருப்பதாகக் கூறியிருக்கிறார். 13ஆம் திருத்தத்திற்கு மேலதிகமாகவும் (பிளஸ்) என்ன செய்யப்போகிறார் என்பது குறித்து அவர் விளக்குவதற்கு மறுத்துவிட்டார் என்று தெரிகிறது. 13ஆம் திருத்தத்துக்கு மேலதிகமாகவும் தமிழருக்குத் தருவார் என்று முன்பும் பல தடவைகளில் ஜனாதிபதி கூறியிருந்தார். இப்பொழுது தமிழர் தரப்புகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் அவர் மேலதிகமாக என்னத்தைத் தரப்போகிறார் என்பது படிப்படியாகத் தெரியவரக்கூடும்.

ஜனாதிபதியின் வடபகுதி விஜயத்தையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்படுகின்றன. சந்திக்குச் சந்தி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசுக்கு கடும் எதிர்ப்பாளர்களாகவிருந்த விடுதலைப்புலிகளும் அவர்களின் தீவிர ஆதரவாளர்களும் ஒழிக்கப்பட்டுவிட்டபிறகும், அவசர கால நிலைமை அமுல் படுத்தப்படுகின்றது. இராணுவ முகாம்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் எல்லாம் தொடர்ந்து இருந்துவருகின்றன.

இராணுவ மற்றும் பொலிஸ் உயர் மட்டப் பிரமுகர்கள் பொதுமக்களுடன் நட்புடன் நடந்து கொள்கிறார்கள்- கீழ்மட்டங்களில் ஒருசில சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றே வருகின்றன. அண்மையில் இராணுவ அதிகாரி ஒருவர் நீர்வேலியில் மாறுவேடத்தில் வீடொன்றுக்குள் நுழைய முயன்று பொதுமக்களிடம் பிடிபட்டதாக வந்த செய்தி இங்கு நினைவு கூரத்தக்கது.

இந்த நிலைமை தொடர்ந்தும் நீடிப்பதை ஜனாதிபதி அனுமதிக்க மாட்டார் என்று எதிர்பார்ப்போம். அது குறித்தும் யாழ்ப்பாணத்தில் வைத்து அவர் ஏதும் அறிவிப்பாரா என்பது தெரியவில்லை.

பொங்கலுக்கு முன்னர் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்துக்குப் போவதாக இருந்தார். காலநிலை சீரின்மையால் அந்தப்பயணம் இடைநடுவில் கைவிடப்பட்டது. உண்மையில் மழை வெள்ளத்தினால் பெருந்துன்பங்களுக்குள்ளாகித் தவிக்கும் கிழக்கிலங்கை மக்களுக்கே இப்பொழுது ஆறுதலும் அனுசரணைகளும் தேவைப்படுகின்றன. அங்குசென்ற அமைச்சர் ஒருவர் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பகுதிகளுக்கே செல்லாமல் அலட்சியப்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார் என்று செய்திகள் வந்தன. அவ்வாறு ஜனாதிபதியும் செயல்படுவதாக யாரும் எண்ணத் தேவையில்லை.

கிழக்கிலங்கைக்கும் விரைவில் அவர் விஜயம் செய்து அம்மக்களுக்கு ஆறுதல் அளிப்பார் என்று நம்பலாம்.

இனிப் பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் கொண்டாடும் ஜனாதிபதி தமிழ் மக்களுக்கான இனிப்புச் செய்தியொன்றையாகிலும் இங்கு வெளியிட்டு அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவார் என்று எதிர்பார்ப்போம்.

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையால் திணறல்

கொழும்பு, ஜன.17

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்து வரும் ஐ.நா நிபுணர்குழு தனது அறிக்கையை பெப்ரவரி மாதம் இறுதியளவில் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் தற்போதைய திட்டத்தின் படி ஆயம் தனது அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையிடமே சமர்ப்பிக்க வேண்டும். அவர் மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் நடத்தவிருக்கும் தனது ஆரம்ப உரையில் அதனைச் சமர்ப்பிப்பார். இதுவே அறிக்கை பகிரங்கமாவதவதற்கான சந்தர்ப்பமாக அமையும். இத்தகவலை சண்டே ரைம்ஸ் பத்திரிகை தனது அரசியல் விமர்சனத்தில் வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மேற்படி நிலைமை ஏற்படுமானால் இலங்கை அரசுக்கு அது பெரும் கடினமான பிரச்சினையாக அமைந்து விடும். அறிக்கையின் அடிப்படையில் உறுப்பு நாடுகளைத் தொடர் நடவடிக்கைகளை எடுக்கும்படி ஆணையாளர் கேட்டுக்கொள்வார் என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் கூறுகிறார்கள். இது எவ்வாறு முடிவுபெறும் என்று கூறுவது இப்போது கடினம்.

• இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷ உயர்மட்டக்கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார். அமைச்சர் சமரசிங்க மற்றும் உயர்மட்டத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அமைச்சர் சமரசிங்க இன்று திங்கட்கிழமை சட்டமா அதிபர் மோகான் பீரீஸுடன் ஜெனிவாவுக்கு விரைந்து கள நிலைமைகளை ஆராய்ந்து கொண்டு திரும்புவார். அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கும் நாடுகளுடன் அவர்கள் இருதரப்பு ஆலோசனைகளையும் நடத்துவார்கள் என்று தெரிகின்றது.

மனித உரிமைகள் தொடர்பான தேசிய திட்டத்தை அமைச்சர் சமரசிங்க கடந்த வாரம் முழுவதும் ஆராய்ந்து கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. இத்திட்டம் கடந்த பல வருடங்களாக கிடப்பில் போடப்பட்டிருந்தது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அதிக கண்டனம் தெரிவித்து வந்த மேற்கு நாடுகளின் ஆதரவை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தெரிகின்றது.

(ப)

# போருக்குப் பின் ஏற்பட்டிருந்த 'மவுசு' விலைவாசி உயர்வால் தேய்கிறது

கொழும்பு,ஜன.17

2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதின் பின்னர் அரசுக்கு ஏற்பட்டிருந்த மதிப்பும் மவுசும் மெதுவாக தேயத் தொடங்கியிருப்பதாக அரசின் புலனாய்வுத்துறையினர் எச்சரித்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மிக வேகமாக அதிகரித்து வருவதே இதற்குக் காரணம் என்று புலனாய்வுப்பிரிவினர் சுட்டிக்காட்டியிருக்கிறார்களாம்.

விலைவாசி அதிகரிப்பு தற்போது உலகம் முழுவதும் எதிர்நோக்கப்படும் பிரச்சினை என்றாலும் இலங்கையில் நிலைமை மிகவும் கலவரத்தன்மையைக் கொண்டிருப்பதாக அப்பத்திரிகை கூறுகின்றது.

சில அமைச்சர்கள் இறக்குமதி தீர்வை போன்ற விடயங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும் அளவுக்கு மீறிய அநாவசியச் செலவுகள் விடயத்தில் பெரிய அளவில் நடவடிக்கை ஒன்றும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நிலைமை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டு அலுவல்களிலும் காணப்படுகின்றது என்று அப்பத்திரிகை கூறுகின்றது.

கடந்த தசாப்தத்தில் போலன்று சில மேற்குலக தலைநகரங்களில் உள்ள தூதரகங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. மில்லியன் கணக்கான டொலர்கள் செலவழித்து மேற்கொள்ளப்படும் காரியங்கள் பொது உறவுகளை வளர்க்கத் தவறிவிடுகின்றன. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தொடர்பில் இந்த நிலைமை இருந்து வருகின்றது. முதலீடுகள் பெரும் எடுப்பிலிருந்தாலும் அவைகளினால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் அபிவிருத்திகள் பூஜ்ஜியமாகவே இருக்கின்றன. அப்படியான ஒரு சம்பவம் லண்டன் ஒக்ஸ்போட் நிகழ்ச்சியாகும். ஜனாதிபதி ராஜபக்ஷ அங்கு பரிவாரங்களுடன் சென்று உரை நிகழ்த்த முடியாமல் அவசரமாக நாடு திரும்ப வேண்டியேற்பட்டது. இவ்வாறு அப்பத்திரிகை எழுதியுள்ளது.

(ப)

# கிழக்கு மாகாண பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 17

வெள்ளம் காரணமாக கடந்த வாரம் விடுமுறை வழங்கப்பட்டிருந்த கிழக்கு மாகாண பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.நிஸாம் தெரிவித்தார்.

எனினும், வெள்ளம் தேங்கி நிற்கும் பாடசாலைகள் மற்றும் அகதி முகாம்களாக செயற்படும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் குறித்த வலய கல்வி பணிப்பாளர்களே தீர்மானிப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக 302 பாடசாலைகள் பாதிக்கப்பட்டதுடன் 529 பாடசாலைகள் அகதி முகாம்களாக செயற்பட்டன என்று நிஸாம் கூறினார். (ம)

# நலன்புரி நிலைய மக்களுக்கு இலவச தொலைபேசிச் சேவை

கொழும்பு, ஜன.17

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்கு இலவச தொலைபேசிச் சேவை வழங்கப்படவுள்ளதாக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பட்டிய நேற்று தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிலையங்கள் ஊடாக தங்களது உறவினர்களுடன் தொடர்புகொள்ள முடியுமெனவும் அவர் கூறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகை ஒன்றே மக்களை தவறாக வழிநடத்துகிறதாம்

## அமைச்சர் டக்ளஸின் கண்டுபிடிப்பு இது

யாழ்ப்பாணம், ஜன. 16

யாழ். குடாநாட்டில் உள்ள பத்திரிகை ஒன்றே மக்களைத் தவறாக வழிநடத்துகின்றது என்று நேற்றுக் குற்றஞ்சாட்டினார் அமைச்சர் டக்ளஸ்.

வசாவிளானில் புனரமைக்கப்பட்ட கட்டத்தைத்திறந்து வைத்துப் பேசிய அவர், பத்திரிகை ஒன்றைச் சாடுவதில் தனது மூன்றரை நிமிடப் பேச்சின் கணிசமான பகுதியைச் செலவிட்டார்.

''வழமைபோல் சில பத்திரிகைகள் மக்களைத் தவறாக வழி நடத்தி வருகின்றன. இதற்கு முன்னர் வந்தவேகத்தில் திரும்பியது வசாவிளான் மகாவித்தியாலயம் என முன்பக்கத்தில் செய்தி வெளியிட்டிருந்தது அந்தப் பத்திரிகை.


திட்டமிட்ட முறையில் மக்களைக் குழப்புவதற்காகவும் அவர்களைப் பலவீனப்படுத்துவதற்காகவும் அப்படிப்பட்ட செய்திகள் வெளியிடப்படுகின்றன.

சவப்பெட்டிக் கடைக்காரனுக்கு யாராவது சாகவேண்டும். அப்போதுதான் அவனுக்கு வியாபாரம் நடக்கும். அது போலச் சில பத்திரிகைகளும் மக்களைத் திட்டமிட்ட முறையில் குழப்பி வருகின்றன. மக்களின் துன்பங்களைச் தமக்குச் சாதகமாக்கி அரசியல் லாபம் தேடுகிறார்கள்'' என்று அமைச்சர் கூறினார்.

இதனைக் கூறிவிட்டு, வசாவிளான் பாடசாலையின் வகுப்பறையும் கேட்போர்கூடமும் ''நல்ல நாள் என்பதற்காகத் திறந்து விடப்படுகின்றன. விரைவில் பாடசாலையை ஆரம்பிப்போம்'' என்றும் அமைச்சர் கூறினார்.

நிகழ்வில் பாடசாலைச் சமூகம் முன்வைத்த 5 அம்சக் கோரிக்கைக்குச் சாதகமான முறையில் பதிலளிக்க அவகாசம் தேவை என்றும் அவர் சொன்னார். (உ)

# வயாவிளான் பாடசாலை கேட்போர்கூடம் ஆளுநரால் நேற்றுத் திறந்து வைப்பு



வயாவிளான் பாடசாலையின் கேட்போர் கூடத்தைத் திறந்து வைக்கிறார் ஆளுநர் சந்திரசிறி.

யாழ்ப்பாணம், ஜன. 16

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் (நவோதயப் பாடசாலை) புனரமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி, கேட்போர்கூடம் ஆகியன வைபவ ரீதியாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் கே.கனகராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புனரமைக்கப்பட்ட வகுப்பறையைத் திறந்து வைத்தார். வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கேட்போர்கூடத்தைத் திறந்து வைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினதும் நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைக் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கான ஒரு தொகுதி நூல்களும் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றும் நிகழ்வில் வைத்து அன்பளிப்புச் செய்யப்பட்டன. பாடசாலை அதிபர் அவற்றைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நிகழ்வில் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இளங்கோவன், பொருளாதார அமைச்சின் கணக்காளர் எஸ்.யூ.சந்திரகுமரன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (உ-14-9)

# பொங்கலுக்கான மண்பானை விற்பனை இந்தமுறை குடாநாட்டில் மிகக் குறைவு

யாழ்ப்பாணம், ஜன.17

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்த முறை மிகக் குறைந்தளவு எண்ணிக்கையிலான மண் பானைகளே குடாநாட்டுச் சந்தைகளில் வைக்கப்பட்டிருந்தன.

மண் பானைகளைப் பொது மக்கள் நுகர்வதும் வெகுவாக குறைந்திருந்தது. எனவே இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

குடாநாட்டு சந்தைகளிலே அதிக எண்ணிக்கையிலான அலுமினியப் பானைகள் விற்கப்பட்டதால் மக்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதில் அக்கறை காட் டினர்.

அத்துடன் மண்பானைகளில் சில தரமற்றவையாக இருப்பதால் பொங்கலின் போது பானை உடைவது அல்லது பானையின் அடிப்பகுதியில் துவாரம் ஏற்படுகிறது. இதன் காரணமாகவே மண் பானைக்கான நுகர்வு குறைவடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்துடன் அலுமினியப் பானை, மண்பானை ஆகியவற்றின் விலைகள் பெரியளவில் வேறுபாடு காணப்படவில்லை. இதனால் மக்கள் அலுமினியப் பானையை நுகர்வதில் ஆர்வம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.



இந்த முறை தைப்பொங்கல் பண்டிகையின் போது குறைந்தளவிலான மண் பானைகளே குடாநாட்டு சந்தைகளில் விற்பனைக்கு வந்தன. அதற் கான காரணம் தொடர்பாக இருக்கும் மீசாலையில் பானை செய்யும் தொழிலில் ஈடுபட்டுவரும் ஒருவரைக் கேட்டபோது அவர் கூறியவை வருமாறு.

தைப்பொங்கல் பண்டிகை என்றால் ஓய்வின்றி பானை வனைதலில் ஈடுபடுவது வழமை. ஆனால் அண்மைக் காலங்களில் அந்த நிலைமை அற்றுப் போனது. அலுமினியப் பானை மீது மக்கள் மோகம் கொண்டுள்ளனர். இந்த வருடம் பொங்கலின் போது என்னிடமிருந்து மூன்று பானைகளை மட்டுமே மக்கள் கொள்வனவு செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த காலங்களில் தைப்பொங்கல் பண்டிகையின் போது நூற்றுக்கணக்கான பானைகள் விற்பனை செய்து வந்தேன். ஆனால் அண்மையில் கொட்டித் தீர்த்த மழை காரணமா கவும் மண் பானைகளை உற்பத்தி செய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது என அவர் தனது காரணங்களைக் கூறினார். இந்த வருடம் குடாநாட்டு சந்தைகளில் மண் பானைகள் நூறு ரூபா முதல் நானூறு ரூபா வரை விற்பனை செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (201-14)

# 5 நாள்களாக நெடுந்தீவில் குடிதண்ணீர் சேவையில்லை

நெடுந்தீவு,ஜன.17

நெடுந்தீவில் கடந்த ஐந்து நாள்களாக குடிதண்ணீர் விநியோக சேவை தடைப்பட்டுள்ளது. இதனால் குடிக்கத் தண்ணீர் இன்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச மத்தி, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் குடிதண்ணீருக்காக நீண்டதூரம் அலைய வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பிரதேச சபையின் நீர் விநியோகக் குழாய்கள் வெடித்துச் சேதமடைந்ததால் தொடர்ந்து குடிதண்ணீர் விநியோகத்தைத் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

நெடுந்தீவில் குழாய் நீர் விநியோகச் சேவை இதற்கு முன்பும் அடிக்கடி இவ்வாறு தடைப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் குறை கூறுகின்றனர்.

யாழ். குடாநாட்டின் பெரு நிலப்பரப்பில் இருந்து நீண்ட தூரம் தள்ளி உள்ளதால் நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் விநியோகத்திற்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது சிரமமானது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். குடி தண்ணீருக்காக நீண்ட தூரம் அலையும் தமது தலைவிதியை மாற்றுவதற்கு எந்தவொரு அரசியல்வாதியும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். விரைவான நடவடிக்கை தேவை என்றும் அவர்கள் கோருகின்றனர். (201-111)

# யாழ். சமூகசேவைத் திணைக்களம் மாற்றுவலுவுடையோருக்கு உதவி

நாவற்குழி, ஜன.17

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்குட்பட்ட 435 மாற்றுவலுவுள்ளோருக்கு உபகரணங்களை வழங்கி யுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட உபகரணங்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு:

செயற்கைக்கால்கள் -208, மூக்குக்கண்ணாடிகள் - 109, முச்சக்கரவண்டிகள் - 52, சக்கர நாற்காலிகள்-43, காது கேட்கும் கருவிகள்-06, ஊன்று கோல்கள்-06, செயற்கை கைகள் - 03, விடே பாதணிகள்-04, சார்புறுப்பு -03, விசேட இருக்கைகள்- 01 என்பனவாகும்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகபிரிவுகளின் ஊடாக இவை விநியோகிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மேற்படி உபகரணங்கள் தேவைப்படும் வறியவர்கள் மருத்துவரின் சிபாரிசுக் கடிதத்தைப் பெற்று, கோரிக்கைக் கடிதம் ஒன்றை எழுதி கிராம அலுவலரிடம் சிபாரிசைப் பெற வேண்டும். அவ்வாறு பெற்றுக் கொண்ட சிபாரிசுக் கடிதத்தை பிரதேச செயலகத்தில் கடமை புரியும் சமூக சேவைகள் அலுவலரிடம் சமர்ப்பித்து உரியபடிவம் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். (201-121)

# சிவபூமி பாடசாலை மாணவன் சாதனை

சுன்னாகம், ஜன. 17

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவன் மாற்றுவலுவுள்ளோருக் கான சர்வதேச ஒலிம்பிக் போட்டிக்குத் தெரிவாகிச்சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையூடாக பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ளார்.

இந்தப்பாடசாலையைச் சேர்ந்த துஷ்யந்தன் என்ற மாணவனே 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுள்ளார். இதேவேளை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் முதலிடம் பெற்ற இவர் மாத்தளையில் நடைபெற்ற தேசியமட்டப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிரீஸின் ஏதென்ஸ் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் இந்த மாணவன் பங்குபற்றவுள்ளார். கோண்டாவிலில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடாசாலை ஆரம்பிக்கப்பட்டு வருடங்களுக்குள் இந்த சாதனை நிலை நாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் காணிகளில் மணல் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.17

15 வருட காலமாக மக்கள் நடமாட்டம் அற்று இராணுவத்தினரின் முழுக் கட்டுப்பாட்டிலிருந்த அரியாலை, பூம்புகார் பிரதேசத்தில் தமது சொந்தக் காணிகளில் இருந்து மணல் திருடப்படுவதாக அப்பகுதி மக்கள் முறையிடுகின்றனர்.

15 வருடங்களின் பின்னர் அரியாலை பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களை நேரில் சென்று பார்வையிடுவதற்கு அண்மையில் படையினரால் அனுமதிக்கப்பட்டனர்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார். தமது சொந்த இடங்களைப் பார்வையிட்டே ஆக வேண்டும் என்று மக்கள் விடாப்பிடியாக நின்றதை அடுத்து வேறுவழியின்றி அமைச்சர் அவர்களை பூம்புகாரின் உள்ளே வீடுகள் அமைந்திருந்த பகுதிக்குள் சற்றுத் தூரம் அழைத்துச் சென்றார்.

அங்கு தமது காணிகளில் மணல் அகழப்பட்டிருந்ததைக் கண்ட மக்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகினர்.

கடற்கரைக்கு அண்மையான பகுதிகளில் மணல் அகழப்பட்டதற்கான பெரும் குழிகள் காணப்படுகின்றன. இந்தப் பகுதியில் மணல் அகழ்வதற்கு சட்டபூர்வமான எந்த அனுமதியும் அரசால் வழங்கப்படுவதில்லை.

கடற்கரைக்கு அண்மையாக உள்ள மக்கள் குடியிருப்புக் காணிகளிலேயே அதிகளவில் மணல் திருடப்பட்டுள்ளது.

இவ்வாறு மண் அகழ்வு மேற்கொள்ளப்பட்டால் கடல் நீர் தமது குடியிருப்புகளுக்குள் புகுந்து எல்லாவற்றையும் நாசமாக்கிவிடும் என்று மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

போர் இடம்பெற்ற வேளையில் இப்பகுதியில் சில தனியார் மணல் திருட்டில் ஈடுபட்டிருந்தனர். எனினும் தற்போது அமைதி திரும்பி உள்ள நிலையில் வடமராட்சி கிழக்கில் இருந்து மணல் அகழப்பட்டு வருகின்றது.

இருப்பினும் தமது குடியிருப்புக்களைப் பார்க்க மக்கள் சென்றிருந்த சமயம், இராணுவத்தினர் ட்ராக்டர்களில் மணல் ஏற்றிச் சென்றதை அவர்கள் கண்டுள்ளனர். குடியிருப்புப் பகுதியில் இருந்து மணல் ஏற்றுவதற்கு படையினருக்கு யார் அனுமதி கொடுத்தார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்பினர்.

இராணுவத்தினரால் ட்ராக்டரில் மணல் ஏற்றிச் செல்லப்பட்டதை அமைச்சரும் பொலிஸாரும் பார்த்திருந்தார்கள். எனினும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவரவில்லை. (201-15)



இராணுவ ட்ரக்குகளில் ஏற்றிச் செல்லப்படுகிறது மணல்...



மணல் அகழப்பட்ட பெரும் குழிகளைக் கண்டு அதிர்ச்சியடைந்து நிற்கும் மக்கள்

# கிராம அலுவலர் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வு

## அமைச்சர் உறுதி மொழி

யாழ்ப்பாணம், ஜன.17

கிராம அலுவலர்களுக்கான சம்பள உயர்வு விரைவில் தீர்க்கப்படும் என வடக்கு-கிழக்கு கிராம உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தினருக்கும், பொது நிர்வாக அமைச்சருக்கும் இடையேயான சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டது.

மேற்படி சந்திப்பு கடந்த 7 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தலைமையில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், சங்கத் தலைவர் பி. வசந்தகுமார், அம்பாறை மாவட்டப் பிரதிநிதி எம்.எல். அபுல்ஹஸன், நிர்வாக உறுப்பினர் க.யோகேந்திரநாதன், அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். சந்திப்பில் தொழிற் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.

கோரிக்கைகளுக்கு அமைச்சர் அளித்த உறுதி மொழிகள் வருமாறு:

சம்பள முரண்பாட்டைத் தீர்க்குமுகமாக கிராம உத்தியோகத்தர்களின் சேவை யாப்பு இரு வாரங்களுக்குள் அமுல்படுத்தப்பட்டு அதன்படி சம்பள உயர்வுகளும் தரங்களுக்கமைவாக வழங்கப்படும். இந்த விடயம் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்.

வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் நியமனத்துக்கு ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தியடைந்தவர்களிலிருந்து போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்து நியமனம் வழங்கப்படவுள்ளது.

தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெற்றிடமாகவுள்ள கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அரச அதிபரின் சிபார்சுடன் மீள் நியமனம் வழங்கப்படும் எனவும் அவர்கள் முன்வைத்த மேலும் சில கோரிக்கைகளும் நடைமுறைப்படுத்தப்படும் - என்றார் அவர்.

# சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, ஜன.17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த வருடம் ஒன்றரை இலட்சத்திற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநோயாளர் பிரிவில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேரும் விடுதிகளில் 10 ஆயிரம் பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பொது மருத்துவம், நீரிழிவு, மனநோய், காச நோய் ஆகிய கிளினிக்குகள், பற் சிகிச்சைப் பிரிவு என்பவற்றில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். (201-207)

# கிழக்கு மக்களுக்கு உதவுமாறு சைவக் குருமார்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.16

கிழக்கு மாகாணத்தில் பாதிப்படைந்து அல்லலுறும் 8 லட்சம் மக்களின் அவல வாழ்விற்கு மனமுவந்து உதவுமாறு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் உறுப்பினரும் சித்தன்கேணி சிவன் ஆலய பிரதம குருவுமான ச.வாசுதேவகுருக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குழந்தைகள் முதல் பெரியோர்வரை உணவு, உடை மற்றும் பால்மா வகைகள் இன்றியும்,குடிதண்ணீர் இன்றியும் அவலமுறுகின்றனர்.''வெள்ள நிவாரண உதவியை விரைந்து வழங்கி உதவுங்கள்'' என்றார் அவர்.

''வடக்கு-யாழ்.மாவட்ட மக்கள் இயன்ற உதவிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உதவிகளை சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் -ஆனைப்பந்தி, சட்டநாதர் கோயிலடி-பா.காந்தன்சர்மா,கொக்குவில்-விக்கினேஸ்வரா குருக்கள், சித்தன்கேணி-ச.வாசுதேவ குருக்கள், காரைநகர்- கு.சரவணபவானந்த சர்மா,சுன்னாகம்-வ.உமாசுதக் குருக்கள், கோப்பாய்-ப.சண்முகராஜ குருக்கள், அல்லையம்பதி- ரா.சபாநாத குருக்கள், சங்கத்தானை - இ.குகதாசேஸ்வர குருக்கள், நயினாதீவு-வா.கைலாச ராஜகுருக்கள், வேலணை- ம.பிரபாகரக் குருக்கள், வவுனியா - ஸ்ரீகாந்தக் குருக்களைத் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்க முடியும். மேலதிக விவரங்களுக்குப் உதவிக்கும் 021-5101110 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் க.வாசுதேவ குருக்கள் மேலும் தெரிவித்துள்ளார். உதவிப் பொருள்களை இயன்றவரை விரைவாகக் கொடுக்கும்படியும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (201-302)

# ஊரத்தியில் 75 குடும்பங்களுக்கு காணிகளை வழங்கத் தீர்மானம்

சங்கானை மத்தி - அராலி ஊரத்தி மக்களுக்கு காணிகள் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

வலி.மேற்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சங்கானை மத்தி-அராலி ஊரத்தியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக 75 குடும்பங்கள் வசித்து வரு கின்றன. எனினும் அவற்றுக்கு இது வரை காணி உறுதியோ 'பெர்மிட்'டோ வழங்கப்படவில்லை. வறுமையில் வாழும் இந்த மக்கள் அவை குறித்து கவனம் எடுக்காமலேயே இது வரை இருந்துவிட்டனர்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமக்கும் காணிகள் வழங்குமாறு இவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசியல்வாதிகளிடம் கோரி இருந்தனர். 2009ஆம் ஆண்டில் இருந்து இதற்காக இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

இதனையடுத்து வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த 75 குடும்பங்களுக்கும் இம்மாத இறுதிக்குள் காணிகள் பிரித்து வழங்கப்பட உள்ளன. இதற்கு வடமாகாண ஆணையாளரின் விசேட அனுமதியும் கிடைத்துள்ளது.

காணிகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 8 மணிக்கு இடம்பெற உள்ளது. இதில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

# மீசாலை-புத்தூர் சந்தி வீதி 'காப்' பெற் ஆகிறது

சாவகச்சேரி, ஜன. 17

மீசாலை-புத்தூர்ச் சந்தி வீதி, மிக விரைவில் செப்பனிடப்படவுள்ளது. அதற்கு முன்னோடியாக அளவீட்டுப் பணிகள் நடக்கின்றன.

இந்த வீதி சீன நிறுவனத்தால் 'காப்பெற்' வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளது. வீதியின் அடித்தளத்தில் ஏற்கனவே போடப்பட்டுள்ள கற்கள் தரமானவையா என்பதை பொறியியலாளர்கள் வீதியின் பல இடங்களில் பரிசோதித்தனர்.

இந்த வீதியில் லொறிகள், கென்டெய்னர் வாகனங்கள் என்பன தொடர்ந்து போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. மழை மற்றும் அதிகரித்த வாகனப் போக்குவரத்தால் வீதி பலமாகச் சேதமடைந்துள்ளது. (201-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு சைக்கிள்; பெற்றோர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 17

அம்பகாமம், புலுமச்சினாதி குளம் ஆகிய கிராமங்களிலிருந்து ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு சைக்கிள்களையாவது வழங்குமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்த மாணவர்கள் 10 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து ஒலுமடு பாடசாலைக்கு வந்து செல்கின்றனர். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் எதுவுமில்லை. இதனால் மழை வெயில் என்றும் பாராது கால்நடையாகவே இவர்கள் தினமும் பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

இதனால் அநேகமான நாள்கள் இவர்கள் உரிய நேரத்தில் பாடசாலைக்குச் செல்ல முடிவதில்லை. இது இவர்களின் கற்றல் நடவடிக்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவர்களின் அவல நிலை குறித்து எவரும் அக்கறை காண்பிப்பதாகத் தெரியவில்லை. மிகவும் வறிய நிலையிலுள்ள இந்தப் பிள்ளைகளின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் சைக்கிள்களை வாங்கிக் கொடுக்கும் பொருளாதார நிலையில் இல்லை.

அத்துடன் வேறுசில பாடசாலைகளில் சைக்கிள்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இப்பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படவில்லையெனவும் கூறப்படுகின்றது.

எனவே இந்தப் பிள்ளைகளின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு இவர்களுக்கு சைக்கிள்களையாவது வழங்க வேண்டுமென பெற்றோர்கள் உருக்கமான முறையில் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-500)

வெள்ளம் தணியுமா?...



வெள்ளத்தில் வீடு: முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் மழை வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் வீடொன்று காணப்படுகின்றது. (555)

# தனியார் பேருந்தில் பெரும் அவலங்கள்

முல்லைத்தீவு, ஜன. 17

முத்துஐயன்கட்டுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பிரயாணிகளை ஏற்றி இறக்கும் தனியார் பேருந்து வண்டிகள் தேவையான பிரயாணிகள் இல்லாத பட்சத்தில் பஸ்வண்டிகளில் ஏறுவோரை இடை நடுவில் இறக்கி விட்டுத் திரும்பிச் செல்லும் நிலையில் மக்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

தினமும் காலை 8 மணிக்கு முத்துஐயன்கட்டிலிருந்து கற்சிலைமடு, ஒட்டுசுட்டான் ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் தனியார் பேருந்துகளே இவ்வாறு மக்களைச் சிரமப்படுத்தி வருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் முத்துஐயன்கட்டிலிருந்து புறப்பட்டு ஒட்டுசுட்டான் ஓராம் கட்டை வரை பேருந்து வந்த போது யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்குக் குறைவான பிரயாணிகளே உள்ளனரென்பதைத் தெரிந்துகொண்டவுடன் அதில் இருந்த பிரயாணிகள் அனைவரையும் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் அந்தப் பேருந்தில் பிரயாணம் செய்தவர்கள் இடை நடுவில் நின்று அவலப்பட்டனர்.

இந்த நிகழ்வானது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பொருள்களுடன் பேருந்தில் ஏறியவர்கள் மற்றும் குழந்தைகளுடன் வந்தவர்கள் ஆகியோர் மிகுந்த சிரமங்களின் மத்தியிலேயே தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர்.

இதனால் மக்களின் நலன் கருதி தனியார் பேருந்துகளை நிறுத்திவிட்டு அரச பேருந்து சேவையை நடத்துமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர்.

இதனால் தாம் அல்லல்பட வேண்டிய அவசியம் எழாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். (க-500)

# தொடரும் கடும் மழையால் கிராம மக்கள் இடப்பெயர்வு

முல்லைத்தீவு, ஜன. 17

இடைவிடாது பெய்து வருகின்ற கடும் மழை காரணமாய் முல்லைத்தீவிலுள்ள உப்புமாவெளிபுர மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த பெருமழையை அடுத்து இப்பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் 53 குடும்பங்கள் இடம் பெயர்ந்து அளம்பில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளன.

இவர்களுக்குரிய உணவு மற்றும் குடிதண்ணீர் வசதிகளை இப்பிரதேச கிராம சேவையாளர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பெரும் மழை நீடிக்குமானால் முல்லைத்தீவிலுள்ள தாழ்ந்த பிரதேசங்களுக்குள் நீர் புகும் அபாயம் உள்ளதாகவும் இப்பிரதேசங்களில் உள்ள மக்கள் அச்சத்துடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-555)

ZOA REFUGEE CARE

## VACANCY ANNOUNCEMENT
### Project Coordinator

(District : Vavuniya Base : Vavuniya North/ Cheddikulam)

Since its foundation in Sri Lanka in 1995, ZOA Refugee Care has developed itself into a field-base rehabilitation player in the North East. ZOA is implementing projects in the following categories:

- Relief and Emergency Response
- Rehabilitation activities
- Community Rehabilitation (CORE)
- Capacity Building

Work focuses on the sectors of water & sanitation, education, Livelihood, psychosocial support, shelter, Community Enhancement, etc.

**Applications**
Please forward your applications including an explanation of your suitability and motivation for the post, with complete bio-data and the names and contact numbers of two non related referees on or before the 23[th] Jan 2011.
We thank all for applying, and short listed candidates will be notified.

**Address for Applications:**
Please indicate the post on the top left hand corner of the envelope and forward your application to:

**Human Resources Officer**
**ZOA Refugee Care Sri Lanka.**
**No.19, 3[rd] lane, Paddanichoor,**
**Mannar Rd, Vavuniya.**
**Tel : 0242225815**
**Fax : 0242225815**
**E mail: vavuniya@zoasrilanka.org**

We thank all for applying, and short listed candidates will be notified.

We invite applications for the above position from dynamic and enthusiastic candidates with the ability to work as a team player and possess the pre requisites as set out below:

**PROFILE**
- Minimum 3 -4 years experience in the relevant field.
- Minimum G.C.E. A/L qualifications or preferably a degree.

**MAJOR TASKS / RESPONSIBILITIES**
- Responsible for the implementation of integrated, holistic project activities.
- Responsible to work in line with the District Program Plan & Procedure Manual.
- Responsible to draft the plan of operations & related work plans.
- Responsible to maintain proper records of all project expenditures.
- Liaises to other organizations & government institutions in Vavuniya regarding project activities.

**REQUIREMENTS**
- Proven knowledge of guiding principles in Human Rights, Advocacy, UN Convention etc.
- Proven knowledge of Project Cycle Management & Logical Framework Analyses.
- Proven hands on experience in using M&E Tools.
- Proven knowledge of participatory approaches & integrated project implementation.
- **Able to stay and work in Kulavisuddan/Menik farm Site office during week days.**
- Cultural sensitive and able to work with the community at their context & environment.
- Have experience and able to work on the sectors of water & sanitation, education, Livelihood, psychosocial support, shelter, Community Enhancement, etc.
- Experience as an excellent team worker.
- Open minded & willingness to adjust.
- Computer literate.
- Ability to establish and retain effective working relationships with other ZOA staff.
- Must have management skills, coaching skills, strong organizational, diplomatic and transparent communication skills.
- Be able to communicate fluently in English & Tamil (Sinhala is an added advantage)

**OTHER REMARKS**
- Experience in non-governmental sectors specially in community mobilisation. Able
- Adherence to Christian ethos

**Equally qualified female candidates are particularly encouraged to apply**

ZOA REFUGEE CARE

## VACANCY ANNOUNCEMENT
### Project Officer - Livelihood

(District : Vavuniya Base : Vavuniya North/ Cheddikulam)

Since its foundation in Sri Lanka in 1995, ZOA Refugee Care has developed itself into a field-base rehabilitation player in the North East. ZOA is implementing projects in the following categories:

- Relief and Emergency Response
- Rehabilitation activities
- Community Rehabilitation (CORE)
- Capacity Building

Work focuses on the sectors of water & sanitation, education, Livelihood, psychosocial support, shelter, Community Enhancement, etc.

**Applications**
Please forward your applications including an explanation of your suitability and motivation for the post, with complete bio-data and the names and contact numbers of two non related referees on or before the 23[rd] Jan 2011.
We thank all for applying, and short listed candidates will be notified.

**Address for Applications:**
Please indicate the post on the top left hand corner of the envelope and forward your application to:

**Human Resources Officer**
**ZOA Refugee Care Sri Lanka.**
**No.19, 3[rd] lane, Paddanichoor,**
**Mannar Rd, Vavuniya.**
**Tel : 0242225815**
**Fax : 0242225815**
**E mail: vavuniya@zoasrilanka.org**

We thank all for applying, and short listed candidates will be notified.

We invite applications for the above position from dynamic and enthusiastic candidates with the ability to work as a team player and possess the pre requisites as set out below:

**PROFILE**
- Minimum 2 -3 years experience in the relevant field.
- Minimum G.C.E. A/L qualifications or preferably a degree.

**MAJOR TASKS / RESPONSIBILITIES**
- Responsible for organising communities and strengthening their capacity.
- Organising/Monitoring training/awareness programs and reporting to the Team Leader.
- Closely working with communities and initiate sustainable livelihood activities to develop community livelihood opportunities.
- Responsible to maintain proper records of all project expenditures.
- Liaises to other organizations & government institutions in Vavuniya regarding project activities.

**REQUIREMENTS**
- Proven knowledge of guiding principles in Human Rights, Advocacy, UN Convention etc.
- Proven knowledge of Project Cycle Management & Logical Framework Analyses.
- Proven hands on experience in using M&E Tools.
- Proven knowledge of participatory approaches & integrated project implementation.
- **Able to stay and work in Kulavisuddan/Menik farm Site office during week days.**
- Cultural sensitive and able to work with the community at their context & environment.
- Experience as an excellent team worker.
- Open minded & willingness to adjust.
- Computer literate.
- Ability to establish and retain effective working relationships with other ZOA staff.
- Be able to communicate fluently in English & Tamil (Sinhala is an added advantage)

**OTHER REMARKS**
- Experience in non-governmental sectors specially in community mobilisation.
- Adherence to Christian ethos

**Equally qualified female candidates are particularly encouraged to apply**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குவை ஒழிக்க ஒத்துழைக்க கோருகிறார் அரச அதிபர்

வவுனியா,ஜன.17

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயைப் பூரணமாகக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமானது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்.

கடந்த வாரம் வவுனியா செயலகத்தில் அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள், கிராம சேவை அலுவலர்கள், களப்பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் பெய்துவரும் தொடர்மழையால் டெங்கு நுளம்புகள் பெருக்கமடைந்து காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்துக் காணப்படுவதாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதனைத் தடுக்கும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு. ஆனால் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த விடயத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் முரண்பட்டுக் கொண்டதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. அனைவரதும் ஒத்துழைப்புக் கிட்டாது விட்டால் நுளம்புகளைக் கட்டுப்படுத்தி டெங்கு நோயையும் ஒழிக்க முடியாது.

டெங்கு நோய் பரவுமாயின் பாரதூரமான விளைவுகளுக்கு வழிகோலிவிடும்.

எனவே அனைவரும் சேர்ந்து செயற்பட்டால் மாத்திரமே இந்தக் கொடியநோயை ஒழிக்க முடியும் என்றும் அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

மேலும் சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், நகரசபை உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகியோர் இணைந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் இதற்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அத்துடன் பொதுமக்கள், சமூக நிறுவனங்கள் என்பன இணைந்து இதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

(க-501)

# பேருந்தில் மூடை முடிச்சு; பயணிகள் திண்டாட்டத்தில்

முள்ளியவளை,ஜன.17

முல்லைத்தீவிலிருந்து கொக்குளாய் செல்லும் பேருந்தில் மூடை முடிச்சுக்கள், சைக்கிள்கள் என்பன ஏற்றிச் செல்லப்படுவதால் பிரயாணிகள் தினமும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள்.

இந்தப் பேருந்து தினமும் பி.ப.2.15 மணிக்கு முல்லைத் தீவிலிருந்து புறப்படுகின்றது. இதில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பயணம் மேற்கொள்கின்றனர். ஆனால் பேருந்தில் ஏற்றப்பட்ட பொருள்களுக்கு மத்தியில் பெரும் சிரமத்துடனேயே இவர்கள் பயணிக்கின்றனர்.

அத்துடன் சேதமடைந்த வீதிகளில் குலுக்கல்கள், ஆட்டங்களுக்கு மத்தியில் பயணிகள் மூச்சுமுட்டும் அளவுக்கு மிக நெருக்கமாக நின்று பயணத்தை மேற்கொள்கின்றனர். இதில் பெண்களின் நிலைதான் மிகவும் பரிதாபகரமாக உள்ளது. அத்துடன் மாணவர்களும் பெருத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே பிரயாணம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே இந்த வீதியில் அதிக பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் இந்த நெருக்கடியைப் போக்கலாமென மக்கள் கூறுகின்றனர். அத்துடன் பாட்சாலை மாணவர்களுக்கெனக் காலையில் செம்மலையிலிருந்தும் பிற்பகல் முல்லைத் தீவிலிருந்தும் பேருந்து சேவைகளை நடத்துமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

உரியவர்கள் இதில் அதிக கவனமெடுத்துச் செயற்பட வேண்டுமென்பதே பாதிக்கப்படும் மாணவர்கள் பொதுமக்களின் வேண்டுகோளாகும்.

(க-555)

## முல்லைத்தீவில் முஸ்லிம்கள் மீள்குடியமர்வு

கிளிநொச்சி,ஜன.17

முள்ளியவளை கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கடந்த 13 ஆம் திகதி 300 முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

பல வருடங்களாக இடம்பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக வாழ்ந்து வந்த முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

யுத்தத்திற்கு முன்னர் அதிகளவு முஸ்லிம் குடும்பங்கள் குடியமர்ந்திருந்த இப்பிரதேசத்தில் அவரவர் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்றம் செய்யுமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து புத்தளம், வவுனியா ஆகிய பிரதேசங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு இவர்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

(க-313)

சுகமான பிரயாணம்...



மூடைகளுக்குச் சௌகரியம்: முல்லைத்தீவிலிருந்து கொக்குளாய் சென்ற பேருந்தில் மூடை முடிச்சுக்கள், சைக்கிள் என்பன ஏற்றிச் செல்லப்படுகின்றன.

(555)

## கலைஞர்களின் கலை நிகழ்வுகள்

முல்லைத்தீவு,ஜன.17

பிரித்தானியா அபிநயக் கலைக் கல்லூரியைச் சேர்ந்த கலைஞர்களால் சமூகச் சீர்கேடுகளைச் சித்திரிக்கும் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

மாங்குளம், ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சேவாலங்கா நிறுவனத்தினரால் இந்தக் கலை நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

இதில் சீதனம் வழங்குவது மடமைத்தனமானது, பெண்ணினத்தைக் கொடுமைப்படுத்துதல், அவர்களின் கற்பைச் சூறையாடுதல், குடும்பச் சுமையைப் பெண்களின் தலையில் சுமத்துதல், கணவன் குடியினால் குடும்பத்தைச் சீரழிக்க மனைவி குடும்பப் பாரத்தை ஏற்றுக் கொள்ளுதல், போன்ற கருத்துக்களைச் சித்திரிக்கும் நாடகம் ஒன்றும் இங்கே நடித்துக் காண்பிக்கப்பட்டது.

அத்துடன் இந்தக் கொடுமைகளை இல்லாதொழிப்பது பற்றியும் இந்த நிகழ்வில் எடுத்துக் காட்டப்பட்டது. இந்த நிகழ்வில் இராணுவத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-500)

# ஒட்டு. - புதுக்குடியிருப்பு பிரதான வீதி; பெரும் குழியால் போக்குவரத்தில் தடை

முல்லைத்தீவு,ஜன.17

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் மழை வெள்ளத்தால் அரிப்பு ஏற்பட்டுப் பெரும் குழியொன்று காணப்படுவதால் போக்குவரத்துத் தடைகள் ஏற்பட்டுள்ளன.

வீதியில் தோன்றியுள்ள பெரிய குழி காரணமாகப் பேருந்துகள் உட்பட வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் பொது மக்களுக்குப் பெரும் சிரமம் தோன்றியுள்ளது.

மேலும் இந்தக் குழி தொடர்பாக எவரும் அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

ஆனால் மழைநீரினால் இந்தக் குழி மேன்மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும் அபாயமும் தோன்றியுள்ளது. அப்படியொரு நிலை தோன்றுமானால் இந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகவே தடைப்பட்டுவிடுமென மக்கள் அஞ்சுகின்றனர்.

உரியவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமே இந்த வீதியைக் காப்பாற்ற முடியுமெனவும் கூறப்படுகின்றது.

(க-500)

## வெள்ள நீர்

முல்லைத்தீவு,ஜன.17

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சிறிய குளங்கள் வான்பாயும் நிலையில் பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்துஐயன்கட்டுகுளம் 22 அடியும் நீர் நிரம்பியுள்ளது. அத்துடன் மேலதிக நீர் குளத்துக்கு வருவதனால் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் பேராறு பெருக்கெடுத்து பாய்கிறது. இதன் காரணமாக ஆற்றின் கரையோரத்தில் இருப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருந்து வருகிறார்கள்.(க-500)

## இதய சிகிச்சை

வவுனியா பொதுவைத்தியசாலையில் இந்த மாதம் தொடக்கம் இதய சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்று விட்ட ஒரு செவ்வாய் அதாவது மாதத்தில் இரு தடவை என்ற வகையில் இதயநோய்க்கான சிகிச்சை வழங்கப்படுகின்றது. இந்தச் சிகிச்சைக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இதயநோய்க்கான சிகிச்சை வைத்திய நிபுணர் வருகை தருவது விசேட அம்சம் ஆகும். குறிப்பாக வவுனியா, செட்டிக்குளம், முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள சிறிய வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளின் பரிசோதனைக்கொ இங்கு நோயாளர்கள் வருகை தருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்தச் சிகிச்சை பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சத்திய மூர்த்தி எடுத்த முயற்சியின் பயனாகவே மீண்டும் வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. (க-501)

# மன்னார் மாவட்டத்தில் இரண்டு விழிப்புணர்வு நிகழ்வுகள்

மன்னார்,ஜன.17

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் அனர்த்தம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இரண்டு மிக அண்மையில் நடைபெற்றுள்ளன.

கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், சமூக மட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்திடம் பெற்ற நிதியைக் கொண்டு மன்னார் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி திருமதி ஜே.மரியப்பிள்ளை இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார். மேலும் இப்பிரதேச செயலர் பிரிவில் சென்ற வருடம் 21 மாற்று வலுவுற்றோருக்கு தலா 50 ஆயிரம் ரூபா மாகாண விசேட நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது.

3 கட்டங்களாக இந்த நிதியை வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் வழங்கியது. இந்நிதியில் அவர்கள் கால்நடை வளர்ப்பு, சிறுகைத்தொழில், சிறுவியாபாரம் போன்றவற்றைச் செய்து வருகின்றனர். (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு

நுவரெலியா, ஜன. 17

கடந்த ஏழு நாள்களாக தெனியாய ஏண் போர்ட் தோட்டத் தொழிலாளர்கள் மேற்கொண்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் செங்கொடிச் சங்கத்தின் தலையீட்டால் முடிவுக்கு வந்துள்ளது - என சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பீ.டி. குமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தோட்டத்தில் பறிக்கும் கொழுந்துகளை அதே தோட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலையில் அரைக்காது தெனியாய தொழிற்சாலைக்கு அனுப்புவதென தோட்ட நிர்வாகம் முடிவு எடுத்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சுமார் 150 இற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

செங்கொடிச் சங்கத் தலையீட்டில் தோட்ட நிர்வாகத்துடன் நடத்தப்பட்ட பேச்சுகளில் தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. தோட்ட நிர்வாகம் மீண்டும் ஏண்போர்ட் தோட்டத்தில் பறிக்கும் கொழுந்தை அங்குள்ள தொழிற்சாலையிலேயே அரைப்பதற்கு இணக்கம் தெரிவித்தது. இதையடுத்து தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்- இவ்வாறு குமார் தெரிவித்தார். (204)

# தொழிலாளர் முன்னணி தனித்துப் போட்டியிடும்

நுவரெலியா, ஜன.17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தொழிலாளர் தேசிய முன்னணி தனித்துப் போட்டியிடும் என தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் எனது அரசியல் பிரிவான தொழிலாளர் தேசிய முன்னணி சார்பில் தனித்தே போட்டியிடவுள்ளது.

நுவரெலியா, பதுளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் உள்ள பெரும்பாலான பிரதேசசபைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட நகரசபைகளிலும் எமது கட்சி போட்டியிடும்.

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்கம் கூட்டணியாகப் போட்டியிட்டது. எனினும், இம்முறை தனித்துப் போட்டியிடவே தீர்மானித்துள்ளது. வாக்குகள் சிதறாத வகையில் எமது தலைமையில் இணைந்து போட்டியிட விரும்பும் அமைப்புகள் எம்மோடு தொடர்புகொள்ளும் பட்சத்தில் கூட்டணியாகப் போட்டியிடுவது தொடர்பில் ஆலோசிக்கப்படும்- இவ்வாறு திகாம்பரம் எம்.பி. தெரிவித்துள்ளார். (204)

## விருது வழங்கல்...




பாராட்டு:-மடவளை ஹைரா நிறுவனம் நடத்திய வருடாந்த விருது வழங்கும் விழாவில் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி யூ.எம்.அக்பர் அலி மாணவி ஒருவருக்குப் பரிசு வழங்குகின்றார்.

# மலைக்குன்றில் அந்தரத்தில் நிற்கும் பாரிய கற்பாறை

இரத்தினபுரி, ஜன. 17

இரத்தினபுரி மீஹிட்டிய மலைக் குன்றி லிருந்து சரிந்து வந்த பாரிய கற்பாறையொன்று இறப்பர் மரத்தில் சிக்கி ஊசலாடுவதால், பள்ளத்தில் உள்ள 20 வீடுகள் அபாய நிலையில் உள்ளன என இரத்தினபுரி மாவட்ட பேரிடர் நிவாரண நிலைய முகாமையாளர் பிரியங்கர அபேரத்ன தெரிவித்துள்ளார்.

பாறை உருண்டு வருவதைத் தடுக்கும் முகமாக, அதை அப்படியே வைத்து மிகவும் நுட்பமான முறையில் வெடி வைத்து தகர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். முன்னெச்சரிக்கையாக பள்ளத்தில் 20 வீடுகளில் இருந்தவர்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விசேட குழுவொன்று இந்த வெடிவைப்பை மேற்கொள்ளும். தேவையேற்படின் அருகிலுள்ள இரத்தினபுரி மல்வல வீதியில் சிறிது நேரத்துக்குப் போக்குவரத்து தடைசெய்யப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்டியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய தாய், மகள்மார் கைது

கண்டியில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர் எனக் கூறப்படும் வயோதிப முஸ்லிம் தாயும், அவரது இரு புதல்விகளும் கண்டிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர்கள் அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களிடம் சுமார் 60,000 ரூபா பணமும் இருந்தது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர்கள் கண் பரிசோதனைக்காக கண்டி நகரிலுள்ள கண் வைத்திய விஷேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரை நாடி வந்துள்ளனர். வைத்தியரின் முகவரியைக் கண்டுபிடிக்க முடியாது பாதை மாறிச்சென்ற போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலிஸ் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (204)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் முகாமை உதவியாளராகக் கடமையாற்றி தற்போது செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ள

**செல்வி தியாகராசா தர்சினி**

(இ/574920)

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேன்மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்றுச் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.


# வீதி போக்குவரத்துக்குத் தடை

கண்டி,ஜன.17

கண்டி- மஹியங்கனை பிரதான வீதியின் 53ஆம் மைல் கல்லிருந்து 61ஆம் மைல் கல் வரையான பகுதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதி வரை மூடப்படும் என உடதும்பறை பொலிஸார் அறிவித்துள்ளனர். இந்தப் பாதையில் மேற்கொள்ளப்படும் திருத்த வேலையினாலும் சீரற்ற கால நிலையினால் வீதிவிபத்துகள் எற்படுவதை தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (204)


## வகுப்புக்கள்

German, Swiss மொழிகள், German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் நடைபெறுகிறது.
10 Palaly road, Jaffna. T.P. 0771604823

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 91
திகதி - 15.01.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: U | அதிர்ஷ்ட இலக்கம்: 06 | வெற்றி இலக்கம்: 2 6 5 6 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| [illegible] | U 06 2 6 5 6 3 | ரூ. 7,721,158.00 | - |
| 1 பரிசு | 06 2 6 5 6 3 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 2 6 5 6 3 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 6 5 6 3 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | 5 6 3 | ரூ. 1,000.00 | 247 |
| 5 பரிசு | 6 3 | ரூ. 50.00 | 2456 |
| 6 பரிசு | 3 | ரூ. 20.00 | 23872 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 2 6 5 6 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 2 6 5 | ரூ. 100.00 | 244 |
| 9 பரிசு | 2 6 | ரூ. 50.00 | 2508 |
| 10 பரிசு | U | ரூ. 20.00 | 9785 |
| 11 பரிசு | U 06 | ரூ. 100.00 | 1056 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,784,340.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.8,137,468.00

## நிறல் அல்ல; நிஜம்!!!

ஒரே வாரத்திலே; உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்! கரும்புள்ளிகள், முகச்சுருக்கம், கருவளையம், முகப்பருக்கள், உதடு கருமை நீக்கம், கழுத்து கருமை நீக்கம் போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.

ஒரே வாரத்திலேயே;

[illegible]

முற்பதிவுகளை முற்கூட்டியே தெரிவிக்க அழையுங்கள்:
0777351954, 0774011129

SANGYA BEAUTY PALACE,
132- Kacheheri Nallur Road,
Jaffna.
"We Care Always"

## விற்பனைக்கு

14-Sri Mitchubishi Lancer Car உடன் விற்பனைக்கு உண்டு. (வெள்ளை நிறம்)
தொடர்பு:0779218444

## கல்வி

Canada, UK போன்ற நாடுகளில் வேலையுடன் கூடிய கற்கை நெறி, அனைத்து விதமான ஆவணங்கள் சரிபார்த்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு:0779218444, 0113042949

## வாடகை

யாழ்.போதனாவைத்தியசாலைக்கு முன்பாக/ ஒருகிலோமீற்றர்சுற்று வட்டாரத்தில் (பருத்தித்துறை வீதி/ பலாலி வீதி/ கே.கே.எஸ்.வீதியில்) கிளினிக் ஒன்று ஆரம்பிப்பதற்கு விசாலமான கட்டடம்/ வீடு வாடகைக்குத் தேவை. கார் தரிப்பிடம் விரும்பத்தக்கது.
தொடர்பு:-தொ.பே.0775361774/0758087220

## காணி விற்பனைக்கு

பாண்டியந்தாழ்வு பிரதான வீதியில் நன்நீர்க் கிணற்றுடன் 3 பரப்புக் காணி
விற்பனைக்குள்ளது முழுமையாகவோ, பகுதியாகவோ பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 0772479356.

(106373)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2191 திகதி 15-01-2011

ஆங்கில எழுத்திற்கும்: J

வெற்றி எண்கள்: 01 11 12 16 — போனஸ் இல: 18

ஜக்பொட் பரிசு ரூ. 31,452,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 198209 | 20/- | 3,964,180/- |
| 2 இல | 14145 | 100/- | 1,414,500/- |
| 3 இல | 293 | 1,000/- | 293,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7916 | 40/- | 316,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 535 | 1,000/- | 535,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 31,452,175/- | - |
| 1 இல + போனஸ் இல | 9439 | 100/- | 943,900/- |
| 2 இல + போனஸ் இல | 446 | 500/- | 223,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 380 | 200/- | 76,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,511,720/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 231409 | | 10,111,720/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 302746029-7-31 |
| புத்தளம் | 302742567-4-17 |
| மட்டக்களப்பு | 302745798-3-44 |
| கண்டி | 302745180-1-38 |
| கம்பஹா | 302747101-3-17 |
| காலி | 302751693-0-04 |
| கம்பஹா | 302747133-4-40 |
| அம்பாறை | 302747989-9-19 |
| கம்பஹா | 302747424-2-18 |
| யாழ்ப்பாணம் | 302744610-7-19 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 31,992,850/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணத்தைக் கொண்டு சேர்ப்பதில் தொண்டு நிறுவனங்கள் போராட்டம்

மட்டக்களப்பு,ஜன.17

கிழக்கில் பெரு வெள்ளத்தினை மேலும் மோசமாக்கும் வகையில் கடந்த வெள்ளியன்று அங்கு கனமழை கொட்டித் தீர்த்திருக்கிறது. இதன் விளைவாக உதவி நிவாரணப் பொருள்களைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எடுத்துச் செல்வதற்குத் தொண்டு நிறுவனங்கள் போராடி வருகின்றன.

மலைப்பாங்கான இடங்களில் மண்சரிவு தொடர்ந்தும் இடம்பெறுகிறது. குளங்கள் பல உடைப்பெடுக்கும் அபாயம் தோன்றியிருக்கின்றது. இந்தப் பெரு வெள்ளத்தினால் ஏற்கனவே ஒரு மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களது இந்தத் தொகை சடுதியாக அதிகரித்துச் செல்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

வீதிகள் வழியாக உணவு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கு ஐ.நா அமைப்புக்கள் போராடி வரும் அதேநேரம், உலங்கு வானூர்திகள் மற்றும் கனரக வாகனங்களுடன் இந்த நிவாரணப் பணிகளில் 3 ஆயிரம் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து கொண்டிருந்த இந்த மக்கள் மீள்குடியேறியிருந்த நிலையில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கிறது என ஐ.நா சிறுவர் நிதியத்தின் சிறிலங்காவிற்கான பிரதிநிதி றோசா கொசானி கூறுகிறார்.

தண்ணீர் கொள்கலன்கள், கூரை விரிப்புக்கள், குளோறின், மாத்திரைகள், பாய்கள் மற்றும் சமையல் பாத்திரங்களை ஏற்றிய யுனிசெப் நிறுவனத்தின் ஏழு பார ஊர்திகள் கடந்த வியாழனன்று அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைச் சென்றடைந்திருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (204)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை பயணம் ஒத்திவைப்பு

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அம்பாறை மாவட்டத்திற்கான பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பி. அத்துக்கொட தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரன நிலமை காரணமாகவே அம்பாறை மாவட்டத்திற்கான வருகை ஒத்திவைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்திற்கு செல்லவுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அத்துக்கொட மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவிருந்தது குறிப்பிடத்தக்கது. நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்திற்கான விஜயம் கடந்த டிசெம்பர் மாதமும் திட்டமிடப்பட்டிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நல்லிணக்க ஆணைக்குழு அநுராதபுரம் மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது. (த)

# முதலைகளும் துரத்துகின்றன கிழக்கு மக்களை

மட்டக்களப்பு,ஜன17

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை முதலைகளும் துரத்தத் தொடங்கியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை வெள்ளத்தில் பாதிப்பட்டவர்களை ஏற்றி வந்த படகு ஒன்றில் இருந்தவரை முதலை ஒன்று கடித்துக் காயப்படுத்தியுள்ளது.

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆறுகள்,குளங்களில் இருந்து வெள்ளத்தினால் அடித்துவரப்பட்ட முதலைகள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைந்துள்ளதனால் மக்கள் அச்சத்தில் வாழ்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இவை இப்போது மனிதர்களைத் தாக்க ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி தேவராஜா தெரிவித்தார். (204)

## மனிதாபிமானம்...



உதவி: மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக் கான நிவாரணப் பொருள்களை இந்தியா வழங்கியுள்ளது. இந்த நிவாரணப் பொருள் களை மட்டக்களப்பு விமானப்படைத் தளத்தில் வைத்து அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்திடம் இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா வழங்குகின்றார். அருகில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ காணப்படுகின்றார். (204)

# மழை ஓய்ந்ததால் மக்கள் பொருள்கள் கொள்வனவு

மட்டக்களப்பு,ஜன.17

அடைமழை இருநாள்களாக ஓய்ந்துள்ளது. இந்த நிலையில் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. தாழ் நிலப்பிரதேசங்களிலிருந்து வள்ளங்களில் வருகைதந்த மக்கள் பொருள் கொள்வனவில் ஈடுபட்டிருந்தனர்.

களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தை வாரத்தின் ஏழு நாள்களும் இயங்கி வரும் சந்தையாகும். அண்மையில் தொடர்ந்து பெய்த அடை மழையால் சந்தை முழுவதும் நீர் நிரம்பி வடிந்தமையால் பொருள்கள் விற்பனையை வீதியின் இருமருங்கிலும், வியாபாரிகள் மேற்கொண்டனர்.

மாவட்ட புள்ளிவிவரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டமே வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. லட்சக்கனக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களிலிருந்து வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். வள்ளங்கள் மூலம் மக்களை ஏற்றி இறக்குபவர்கள் ஒருவரிடம் 100 ரூபா பணத்தை அறவிடுகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (204)

# வெள்ளம் பாதித்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

மட்டக்களப்பு,ஜன.17

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை கடந்த வியாழக்கிழமை பதினொரு லட்சத்தைத் தொடும் நிலையில் உள்ளது.

இலங்கையின் இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்ட தகவல்களின்படி, வெள்ளத்தினால் இறந்தோரின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.

187,871 குடும்பங்களைச் சேர்ந்த 1,081,819 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 18 ஆயிரம் வீடுகள் பகுதியாகவும், முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 541,688 பேரும், அம் பாறை மாவட்டத்தில் 445,473 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 27,046 பேரும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதைவிட பொலனறுவை, அனுராதபுரம், நுவரெலியா, கண்டி, பதுளை, வவுனியா மாவட்டங்களிலும் வெள்ளத்தினால் குறிப்பிட்டளவு மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வெள்ளத்தினால் இடம் பெயர்ந்துள்ள 345,348 பேர் 591 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இடம் பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய குடி தண்ணீர் வசதிகளோ, உணவோ கிடைக்காமல் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

சில தொண்டர் நிறுவனங்களும் அரசாங்கமும் வழங்கும் உணவு நிவாரணங்கள் போதியளவாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வீதி சீரின்மையாலேயே உணவு நிவாரண விநியோகங்களை மேற்கொள்ள முடியாதுள்ளதாக ஐ.நாவும் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் வெப்ப நிலை திடீரென 16.9 பாகை செல்சியசாக குறைந்துள்ளதால் அங்கு குளிர் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது போன்ற கடும் குளிரான கால நிலையை மக்கள் முன்னொரு போதும் எதிர்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (204)

# பாதிக்கப்பட்டோரை பாயிஸ் நேரில் பார்வையிட்டார்

திருகோணமலை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கிழக்கு மாகாணசபை சபாநாயகர் எச்.எம்.எம்.பாயிஸ் நேரடியாகப் பார்வையிட்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண உதவிகளைத் தாங்கள் துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு டென்மார்க் பண உதவி

கிழக்கு மாகாணத்தில் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் அடிப்படையில் டென் மார்க் தமிழர் பேரவை நடத்தும் தமிழ் புத்தாண்டு பொங்கல் திருநாளில் சேகரிக்கப்படும் அனைத்து பணமும் உடனடியாக அனுப்பி வைக்கப்படும் என டென்மார்க் தமிழர் பேரவை தெரி வித்துள்ளது.

போரினாலும் இயற்கை அனர்த்தத்தாலும் பெரும் அழிவுகளைச் சந்தித்த மட்டக்களப்பு பிரதேச மக்கள் இப்போது மழைவெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உரிய காலத்தில் செய்யும் உதவியே காலத்தால் நிலைத்து நிற்கும் என்பதை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். டென்மார்க்கில் இயங்கிவரும் சில தமிழ் அமைப்புக்கள் மற்றும் தோழமைக் கழகங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைகொடுக்க முன்வந்துள்ளனர். (த)

# பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள்

மட்டக்களப்பு, ஜன.17

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மக்கள் சுத்தமான குடி தண்ணீரும் சுகாதார வசதிகளும் இன்றித் தவிக்கின்றனர். உணவுகளைப் பெற்றுக்கொள்வதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கோரளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அனைத்து நலன்புரி நிலையங்களிலுமுள்ள மக்களையும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன், அங்குள்ள மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத் தில் மண்முனைப் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சிவநேசதுரை சந்திரகாந்தன் நிவாரணப் பொருள்களை வழங்கினார்.

குழந்தைகளுக்கான பால்மா, பிஸ்கட், உலர் உணவுப் பொருள்கள் ஆகியவை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான No.1 பிறிமா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=) 20.01.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும். பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்.

★சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
★நெல்லியடி பல்பொருள் விற்பனை, நெல்லியடி - 0774656377
★முகுந்தன், பருத்தித்துறை - 0771392593
★துர்க்கா பாம், சுன்னாகம் - 0779346599

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே. 021 222 6944
(109021)

**VISA - வீசா**
Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.

## சான்றிதழ் வழங்கும் திட்டம்

நாவற்குழி, ஜன.17

அலுமினிய பொருத்துகை, வர்ணம் பூசுதல், தச்சுவேலை, மேசன் வேலை, வீட்டு மின் இணைப்பு வேலை ஆகிய வற்றில் தேர்ச்சி பெற்றுள்ளோருக்கு சான்றிதழ் வழங்கும் திட்டத்தை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்னெடுத்துள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கி ழமை யாழ்ப்பாணத்தில் வைத்து 40 பேருக்கு இவ்வித சான்றிதழ் கள் வழங் கப்படவுள்ளன.

இந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 15 வயது முதல் 30 வயது வரையுள்ளோர் இந்தப் பயிற்சி நெறியில் பங்கு பற்றி சான்றிதழ் பெறுவதற்கான பதிவுகளை பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ள முடியும்.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து இந்த நிகழ்வை நடத்துகின்றது.

பதிவுகளை நாளை 18ஆம் திகதிக்கு முன்பு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-121)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

நாவற்குழி, ஜன.17

7மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கான 2011ஆம் ஆண்டுக்கான தையல் வேலையும் கைத்திறனும் என்னும் தலைப்பில் 6மாத கால பயிற்சிநெறி பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில்இணைந்து பயிற்சிபெற விரும்புவோர் தரம் 9 வரை அல்லது கா.பொ.த சாதாரண தரம் வரை கல்வி பயின்றவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் வடமாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம அபிவிருத்தி அலுவரிடம் அல்லது அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரிடம் விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-121)



டயிடஸ் ஸ்டோஸ்
புறக்கோட்டை லிபட்டி பிளாசா
2439422

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2kg க்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHRAHA புறொயிலர் குஞ்சுகள் 19.01.2011 ஆம் திகதி விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ ஜெனசி பாம், 1 ஆம்கட்டை, பருத்தித்துறை.
T.P No 021 222 2867, 0776090926

**Web Designing / Development**

உங்கள் நிறுவனங்களின் அதிகார பூர்வ இணையத்தளங்கள் மற்றும் தனிப்பட்ட தளங்களை சர்வதேச தரம் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக எம்மிடம் வடிவமைத்துக் கொள்ள முடியும்.

.com வருடத்திற்கு ரூ.1000 மட்டுமே.

Web Hosting Packages
500 MB - Rs.1000 / Year

Call 021 222 0261 0779 471 771

இல 214, யாழ்-மானிப்பாய் வீதி [வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்]
webster networks MAKING DREAMS REALITY

## மாடுகளின் எச்சங்கள் கொட்டப்படுவதால் துர்நாற்றம்

மீசாலை வடக்கு இராமாவில் கந்தசாமி ஆலயத்திற்கு மேற்குப் புறமாக உள்ள பற்றைக் காட்டில் மாடுகளின் எச்சங்கள் கொட்டப்படுகின்றமையால் அயல் கிராமங்களில் துர்நாற்றம் வீசுவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

பற்றைப் பகுதியிலிருந்து துர்நாற் றம் வீசுவதால் பற்றைப் பகுதிகளில் தேடுதல் நடத்திய போது அப்பகுதியில் மாடுகளின் எச்சங்கள் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திருட்டப்பட்ட மாடுகள் அப்பகுதிக்கு கொண்டு வரப்பட்டு அழித்த பின்னர் எச்சங்களைக் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது. (ம-207)

## காலாண்டு இதழ் வெளிவந்துள்ளது

கல்வி, கலை, கலாச்சாரம் உள்ளடங்கலான காலாண்டு சஞ்சிகை "செவ்வாணம்" இதழின் 26 ஆவது பிரதி வெளிவந்துள்ளது.

குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம் பிரான்சைத் தளமாகக்கொண்ட பழைய மாணவர் சங்க நிதியிலிருந்து 2002 ஆம் ஆண்டு தொடக்கம் இச்சஞ்சிகை வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

கல்வி, கலை, கலாசாரம் பற்றிய கவிதைகள் கட்டுரைகள், கதைகள் போன்றனவும் 1983 ஆம் ஆண்டுசூண்டு வீச்சில்சேதமடைந்த குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் காட்சிகள் போன்றன உள்ளடக்கியுள்ளன.

குருநகர் யோகி, மொறிஸ் நிசாந்தன் றொபேட் றோயல், லக்ஸ்மன், கொன்சன்ரைன் ஆகியோர் இவ்விதழுக்கான ஆக்கங்களை எழுதியுள்ளனர். (ம-213-180)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1260 சிகப்பு

இடபம் 07 09 23 39 — 14-01-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 241,809 | 20/- | 4,836,180/- |
| 2 இலக்கங்கள் | 22,262 | 40/- | 890,480/- |
| 1 இல. + லக்கினம் | 22,004 | 60/- | 1,320,240/- |
| 2 இல. + லக்கினம் | 2,040 | 200/- | 408,000/- |
| 3 இலக்கங்கள் | 592 | 1000/- | 592,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,116,900/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 646 | | 621,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 289,403 | | 9,738,400/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,080,350/-

**இரண்டாவது வாய்ப்பு**

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 29 30 33 35 — ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 643 | 500/- | 321,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 300,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 646 | | 621,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 400,000/-

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி நடராசா வேதநாயகி**

பிறப்பு: 18.03.1950
இறப்பு: 19.12.2010

வீட்டுக்குத் திருவிளக்காய்
வீற்றிருந்த பெருமாட்டி
பாட்டுக்கு இசையாய் பழகி வந்த
எமையெல்லாம் ஏங்கவிட்டு ஓடிமறைந்து
31ஆம் நாள் ஆனதுவோ?
உங்கள் நினைவுத் தடத்தினிலே
எங்களது இருப்புத் தொடங்குகிறது
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

கடந்த 19.12.2010 அன்று எம்மைவிட்டுப் பிரிந்த எமது குடும்பக் குலவிளக்கின் மறைவு கேட்டு மரணச் சடங்கிலும் தொலைபேசியிலும் பலவழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (17.01.2011) மு.ப.10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

றபேஸ்கிரி, ஆனைக்கோட்டை வீதி.
கொக்குவில் மேற்கு.
021-4916827
(108980)

என்றும் உங்கள் நினைவில் வாடும்:
தாய், பிள்ளைகள், சகோதரர், பேரப்பிள்ளைகள், மைத்துனர், மருமக்கள்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**திருமதி மேரி ஜெலன் றொக்ஸி வில்பிரேட் செல்வக்குமார்**

(தாளையடி)
(ஆசிரியை, யா/ புனிதசாள்ஸ் மகாவித்தியாலயம்)

தோற்றம்: 19 - 01-1963
மறைவு: 17 - 01-2010

அன்பின் அருமை மனைவியே!
உடலாய் எமை விட்டுப் பிரிந்து
சென்று ஓராண்டு காற்றாய்க் கழிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை
விட்டு மறையாது.

நிரந்தர முகவரி:
தாளையடி வடக்கு, தாளையடி.

தற்போதைய முகவரி:
அ.வி. செல்வக்குமார்,
இல.825, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள்.

(109045)

## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.01.14 — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2344

வெற்றி எழுத்து: B — வெற்றி எண்கள்: 0 8 3 3 6 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து / எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B 0 8 3 3 6 7 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 0 8 3 3 6 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 8 3 3 6 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 13 |
| 3 பரிசுகள் | 3 3 6 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 138 |
| 4 பரிசுகள் | 3 6 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1328 |
| 5 பரிசுகள் | 6 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13329 |
| 6 பரிசுகள் | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 132889 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எண்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 0 8 3 3 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 12 |
| 8 பரிசுகள் | 0 8 3 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 138 |
| 9 பரிசுகள் | 0 8 3 | ரூபா. 100/= | பரிசுகள் 1368 |
| 10 பரிசுகள் | 0 8 | ரூபா. 50/= | பரிசுகள் 13361 |
| 11 பரிசுகள் | B | ரூபா. 20/= | பரிசுகள் 53001 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 12,121,550.00

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் புதிய பஸ் தடங்கள்

கொழும்பு, ஜன.17

இலங்கை போக்குவரத்துச் சபை அடுத்த மாதம் முதல் கொழும்பு நகரில் 6 ஊதா நிற பஸ்களையும் 6 நீலநிற பஸ்களையும், வெவ்வேறான இரு புதிய வழித்தடங்களில் சேவையில் ஈடுபடுத்தவுள்ளது என போக்குவரத்து அமைச்சு கடந்த வியாழக்கிழமை தெரிவித்தது.

இந்த பஸ்சேவைகள் வட்டப் பாதையில் ஓடும். கட்டணம் தூரத்தை பொறுத்து 6, 9,10 ரூபாவாக இருக்கும் என பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹண திஸாநாயக்க கூறினார்.

அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஊதா நிறமுடைய ஆறு பஸ்கள் கோட்டை யிலிருந்து ஆரம்பித்து ஆமர்வீதி, பாலத்துறை, புதிய களனிப் பாலம், தெமட்டகொடை, பொரளை ஆகிய இடங்களூடாகச் சென்று மீண்டும் கோட்டையை வந்தடையும்.

**நீல, ஊதா நிற பஸ் சேவைகள் வட்டப் பாதையில் ஓடும். இதற்கான கட்டணம் தூரத்தைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படும்.**

நீலநிறமான ஆறு பஸ்களும் கோட்டை, பௌத்தாலோக மாவத்தை, பம்பலப்பிட்டி சென்று பின் மீண்டும் கோட்டையை வந்தடையும் - இவ்வாறு பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹண திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தச் சேவைகள் பஸ் பயணிகளுக்கு மிகவும் பயனுடையவையாக இருக்கும். பரிசோதனை அடிப்படையில் இந்த பஸ் சேவையை நடத்திப்பார்த்தப் போது ஒரு கிலோமீற்றருக்கு 48 ரூபா வருமானம் கிடைத்துள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பஸ்சேவையால் பெரிய இலாபம் கிடைக்காது விட்டாலும், நஷ்டம் ஏற்பட இடமில்லை. ஏனைய வழமையான பஸ்கள் மூலம் ஒரு கிலோ மீற்றருக்கு 50 ரூபாவரை கிடைக்கின்றது - எனப் போக்குவரத்து அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள், மேல் மாகாணத்தில் பஸ்களை அதிகரிப்பதால் வாகன நெருக்கடி ஏற்படும் எனவும், புதிய நேர அட்டவணை தயாரிப்பதை குழப்பும் எனவும் கூறுகின்றனர்.

ஆனால் இந்த புதிய பஸ் சேவை மக்களுக்கு வசதியாக இருக்கும். இந்த சேவை பெரியளவில் பலனளிக்காது விடின், இரத்துச் செய்யப்படும் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமெரிக்கா உதவி

கொழும்பு, ஜன.17

இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்துக்காக அமெரிக்கா, 300 ஆயிரம் டொலர்களை வழங்கவுள்ளது.

இதற்கான அறிவித்தலை இலங்கைக்காக அமெரிக்க தூதர் பெற்றீசியா புட்டினியஸ் விடுத்துள்ளார்.

இந்த உதவியின் மூலம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருள்களும் சேவைகளும் வழங்கப்படும் என்று அவர் குறிப்பட்டுள்ளார்.

கிழக்கின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்கள் உட்பட நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 10 லட்சம் பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். (ம)

## இந்திய விமானப் படைத்தளபதி இலங்கை வந்தடைந்தார்

கொழும்பு, ஜன. 17

இந்திய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் பிரதீப் வசந்த் நாயக் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்புக்கு நேற்று வந்தடைந்துள்ளார்.

இவரை இலங்கை விமானப் படை தளபதி எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலக நேரில் சென்று வரவேற்றுள்ளார்.


இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமைந்துள்ளதென இந்திய தகல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரை இந்திய விமானப்படைத் தளபதி சந்திக்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்திய விமானப்படைத் தளபதி, இலங்கை விமானப் படை முகாம்களுக்கும் விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்திய மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டனர் என்பதனை நிரூபிக்க சாட்சியங்கள் இருந்தால் முன்வைக்குமாறு இலங்கைக் கடற்படைத் தளபதி திஸாநாயக்க இந்திய அதிகாரிகளுக்கு சவால் விடுத்துள்ளார். (ம)

ஊர்வலம்...



ஆரம்பம்: களனி விகாரையின் ரந்தோலிப் பெரகரா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. நாளை திங்கட்கிழமை வரை இது இடம்பெறவுள்ளது.

## வெள்ளம் ஏற்பட்டு 12 நாள்களின் பின்னரே உலருணவு

கொழும்பு, ஜன.17

வெள்ளம் ஏற்பட்டு 12 நாள்கள் கடந்த நிலையில் நேற்று முதல்தடவையாக அம்பாறை மாவட்டத்தின் சம்மாந் துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு உலருணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அண்ணாமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, வீதியடி, கம்பிசாலை ஆகிய பிரதேசங்களுக்கே உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேவேளை, இப்பிரதேசங்களில் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயம் இருப்பதால் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு சுகாதார அதிகாரிகளினால் அறி வுறுத்தப்பட்டுள்ளனர். (சி)

## அநுராதபுரம் மாவட்டத்தில் குளங்கள் நிரம்பி வழிகின்றன

அநுராதபுரம் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் அடைமழையின் காரணமாக மாவட்டத்திலுள்ள பெரும் குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் பளுகஸ்வெள தெரிவித்தார்.

ராஜாங்கனை, நுவரவாவி, திஸாவாவி, கலாவாவி, நாச்சியாதீவு, வால்கட ஆகிய குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. நாச்சியாதீவு, நுவரவாவி குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து அநுராதபுரம் பிரதான வீதியிலுள்ள மாத்தளை சந்தி நீரில் மூழ்கியுள்ளது.

இதேவேளை மல்வத்து ஓயா பெருக்கெடுத்துள்ளதால் அநுராதபுரம் ஜயந்தி மாவத்தை மற்றும் லேன் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு பல வீடுகளும் நீரில் மூழகியுள்ளன.

மேலும் ஹொரவப்பொத்தானை பிரதேசத்திலுள்ள குளத்தின் அணைக்கட்டொன்று உடைப்பெடுத்ததையடுத்து ஹொரவப்பொத்தானை நகரம் உட்பட பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. இதனையடுத்து சுமார் 1,115 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக பிரதேச செயலாளர் சாந்ததிஸநாயக்க தெரிவித்தார். (சி)

## மிளகாய், தக்காளி விற்க களனியில் மேர்வின் தடை

கொழும்பு, ஜன.17

ஆளும் கட்சியின் அமைப்பாளராக தாம் உள்ள களனி பிரதேசத்தில் பச்சை மிளகாய், தக்காளி, வெண்டிக்காய் என்பவற்றை விற்பனை செய்யக் கூடாது என்று இலங்கையின் பொதுமக்கள் தொடர்புத் துறை அமைச்சர் மேர்வின் சில்வா உத்தரவிட்டுள்ளார்.

இந்த மரக்கறிகளை பொது மக்கள் தமது வீட்டுத் தோட்டங்களில் பயிர்செய்து பயன்படுத்த வேண்டும் என்று அவர் கட்டளையிட்டுள்ளார்.

காலநிலை சீர்கேட்டினால் மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ள நிலையில் இந்த உத்தரவை கடுமையாக கடைப்படிக்கப் போவதாக அவர் குறிப்பட்டுள்ளார்.

அத்துடன் பொதுமக்கள் சுய உற்பத்தியில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் இது உதவும் என மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ம)

## வாழைச்சேனையில் குண்டுகள் மீட்பு

வாழைச்சேனை கருவாக்கேணி பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அதிசக்தி வாய்ந்த குண்டுகளை வாழைச்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற தகவலொன்றையடுத்து, குறித்த பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (சி)

# தேர்தலில் பெண்களின் பங்கை அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, ஜன.17

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு அரசியல் கட்சிகளிடம் பெண்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் கோரியுள்ளன.

இது தொடர்பாக இந்த அமைப்புகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் சனத்தொகையில் பெண்கள் 52 சதவீதமாக இருப்பினும் உள்ளூராட்சிச் சபைகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் 2 சதவீதமாகவேயுள்ளனர். அரசியல் கட்சிகளிடமிருந்து பெண்கள் பெற்றுக்கொண்ட வேட்பாளர் நியமனங்கள் அதி குறைந்தளவில் உள்ளமை கவலைக்குரிய விடயம்.

தொடர்ந்தும் பெண்களுக்குப் போதிய ளவு வேட்பாளர் நியமனங்களை வழங்கத் தவறிய பிரதான அரசியல் கட்சிகளே இப் பிரதிநிதித்துவக் குறைபாட்டிற்கு காரணம். இக்கட்சிகளே உள்ளூர்த் தேர்தல்களில் ஆசனங்களை வென்றுள்ளன.

உண்மையில் இலங்கை ஒன்றே உள்ளூராட்சிசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான எதுவித விசேட நடைமுறைகளையும் கொண்டிராத நாடாக உள்ளது.

பங்களாதேஷில், கூட்டுச் சபைகளில் (1996 சட்டம்) பெண்களுக்கு அதிகுறைந்தது 25 சதவீத ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் பஞ்சாயத்துகள் அல்லது உள்ளூர்ச்சபைகளில் 33 சதவீதத்திற்கும் குறையாத ஆசனங்கள் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் (1992 அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்) ஒதுக்கப்பட்டுள்ளன .

நேபாளத்தில் கிராமிய மற்றும் மாநகர சபைகளில் பெண்களுக்கு 20 சதவீத ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் கூட்டுச்சபை, மாநகரசபை மற்றும் மாவட்ட சபைகளில் பெண்களுக்கு 33 சதவீத ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நாடுகள் அனைத்தும் உள்ளூராட்சிசபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை, அபிவிருத்தி மற்றும் அடிப்படை உரிமைகள்சார் காரணிகளாக அங்கீகரித்துள்ளமை தெட்டத் தெளிவாகிறது.

மகிந்தச் சிந்தனை மற்றும்' தேய தினவன் அய' என்ற திட்டங்களின் மூலம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமுகமாக இத்தகைய முன்னேற்பாடு அவசியம் என்பதனையும், பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதையும் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் நாம் நினைவுறுத்துகிறோம்.

அரசானது நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கலைத்துள்ளது. 2011 பங்குனி மாதத்தில் தேர்தல்களை நடத்தவுள்ளது.

இத்தேர்தல்களில் பெண் வேட்பாளர்கள் குறைந்தபட்சம் 25 சதவீதமேனும் இருப்பதனை உறுதிசெய்யும்படி அனைத்து கட்சிகளையும் வற்புறுத்துகிறோம். அரசியல் கட்சிகளினால் பெண் வேட்பாளர் நியமனங்கள் போதியளவு அதிகரிக்கப்படாத வரையில் உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்பட முடியாத நிலையைத் தோற்றுவிப்பதுடன், மேலும் மாகாண சபைகளிலும் தேசிய மட்ட அரசியலிலும் பெண்களின் பங்கேற்பினை மட்டுப்படுத்துமளவிற்குத் தொடரும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:**
ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மனதை விட்டு அகலாத சம்பவங்கள் நடக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு இன்றே வரலாம். அவசரப்பட்டு சில வேலைகளைச் செய்து விட்டு அவதிக்கு ஆளாகலாம்.

**இடபம்:**
உறவினர்கள், நண்பர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சண்டை போட்ட சிலரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகும்.

**மிதுனம்:**
நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நோய் உபாதைகள் குறைந்து தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். வழக்கமாகச் செய்யும் சில வேலைகளை சௌகரியமாகச் செய்வீர்கள்.

**கடகம்:**
வாழ்த்துச் செய்திகளால் உற்சாகம் அடையும் நாள். வெளியூர்களில் இருக்கும் உறவினர்களைத் தொடர்பு கொண்டு பேசுவீர்கள். பொழுது போக்கு உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும். பல நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

**சிங்கம்:**
எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். இடம், பூமி விவகாரங்களில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் அனுகூலம் காணலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். உங்களின் வேலை ஒன்றுக்காக நண்பர்களையும் கூட்டிக் கொண்டு அலையலாம். ஆலய வழிபாடு அமைதி தரும்.

**கன்னி:**
குடும்பத்தினர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பயணங்களில் ஏற்படும் தடை, தாமதங்களால் கோபம், எரிச்சல் அடையலாம். நீங்கள் நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்குப் பாதகமாகச் செயற்படலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகித் தொந்தரவு கொடுக்கலாம். மறதியால் அவதியுண்டு.

**துலாம்:**
ஊக்கம், உற்சாகமாக செயற்படுவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். மற்றவர்களின் உதவிகளை எதிர்பாராமல் நீங்களே அனைத்து வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். உங்களுக்காகவோ, குடும்பத்தினருக்காகவோ சில பொருள்களை வாங்கலாம். புதியவர்களின் நட்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:**
எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விவகாரங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். புதியவர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். குடும்பத்தினர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:**
சேமித்த பணத்திற்கு செலவு வரலாம். உடல் சோர்வு, மனச் சோர்வு அதிகரிக்கும். வழக்கமான பணிகளில் சில மாற்றங்களைச் செய்வீர்கள். தொலைபேசி வழியில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரலாம். சிலரு டன் வெளியிடங்களுக்கு பயணம் செல்லலாம். சிலரின் ஆலோசனைகளைக் கேட்க வேண்டிய கட்டாய நிலை உருவாகும்.

**மகரம்:**
சிந்தித்துச செயற்பட்டு சிறப்புப் பெற வேண்டிய நாள். மற்றவர்களை நம்பி வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். விருப்பம் இல்லாமல் மற்றவர்களுக்காகச் செலவு செய்யலாம். சில கடினமாக முடிவுகளை எடுக்கலாம். தொழில் ரீதியாக சிலரிடம் கடுமையாக நடந்து கொள்ளலாம். கடனாகக் கொடுத்த பணம் வரும்.

**கும்பம்:**
வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். பெண்கள் வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கும். செலவுகளைப் பற்றி கவலைப்படாமல் சில விடயங்களில் தீவிரமாக இறங்குவீர்கள். புதிய எண்ணங்களை செயற்படுத்த முற்படுவீர்கள்.

**மீனம்:**
வெளியூர்களில் இருந்து உறவினர்கள் சிலர் வீட்டிற்கு வரலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலைமை காணப்படும். நண்பர்கள் வழியில் மனக் கசப்புகள் தீர்ந்து பாசம் அதிகரிக்கும். சிலரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம்.

# சித்த மருத்துவ அபிவிருத்தி தேவை

**பல்கலைக்கழகம் ஒன்றில் அந்தஸ்துப் பெறாத ஒரு துறையாக கால் நூற்றாண்டிற்கு மேல் இருந்த துறை என்பது சித்த மருத்துவத்துறையையே சாரும். பல்கலைக்கழகத்தின் புத்திஜீவிகளும் மற்றும் கல்விமான்களும் எமது தேசிய மருத்துவத்தை அபிவிருத்தியடையச் செய்ய இனியாவது முன் வரவேண்டும்.**

சித்த மருத்துவத்துறை யாழ். பல்கலைக் கழகத்துடன் இணைந்து 26 வருடங்கள் பூர்த்தியடைந்து, 27 ஆம் வருடத்தின் அரைவாசிகாலப் பகுதியையும் தாண்டியுள்ளது. இரண்டரை தசாப்தங்களாக அந்தஸ்தற்ற ஒரு துறையாகச் செயற்படுவது மிகவும் வேதனைக் குரியதாகும்.

சித்த மருத்துவத் துறையின் பாடத்திட்டமானது 5 வருடங்களை உள்ளடக்கியதாகும். இந்த கல்வி நெறியைப் பூர்த்தி செய்வதில் யாழ் பல்கலைக்கழகத்திற்கும், சித்தபோதனா வைத்தியசாலைக்கும் பெரும்பங்கு இருக்கின்றது. மேலைத்தேச மருத்துவமுறை ஆங்கிலேயரின் வருகையுடன் இலங்கையில் அபிவிருத்தியடைந்தது.

அத்துடன், தமிழர்களின் பாரம்பரிய அல்லது தேசிய மருத்துவமுறை நலிவுற ஆரம்பித்தது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சேர் கே.பாலசிங்கம் எடுத்த பெருமுயற்சியினால் கீழைத்தேச மருத்துவமுறைகளான ஆயுள்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யூனானி மருத்துவம் உயிர்பெற்றன.

தமிழர் செறிந்து வாழும் பிரதேசத்தில் அவர்களின் கலாசாரம், பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சித்த மருத்துவம் வளரும் என்ற எதிர்பார்ப்பு எமது மக்களிடையே பரவலாகக் காணப்பட்டது.

ஆயினும் புதிதாகப் பல பீடங்கள் உருவான போதும் சித்த மருத்துவத்திற்கான தகுந்த அந்தஸ்து இன்னும் வழங்கப்படாதது பெரும் பின்னடைவாகும்.

கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவத் துறைக்கான கட்டடம் ஆயுள்வேத திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டட மாகும். துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.வித்தியானந்தன், பதிவாளர் வி.என். சிவராசா ஆகியோரின் அயராத செயற்பாட் டினால் இந்தக் கட்டடம் சித்த மருத்துவத் துறையின் செயற்பாட்டிற்காக ஆயுள்வேத திணைக்களத்திலிருந்து பெறப்பட்டது.

அதன் பின்னர் இன்றுவரை கல்விச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் முகமாக எந்தக் கட்டடமு ஸ்தாபிக்கப்படவில்லை.

மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் 1985 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மட்டுப் படுத்தப்பட்ட வசதிகளுடன் இங்கு செயற்படு கின்றனர். ஆய்வுகூட வசதிகள், நூலக வசதிகள், வகுப்பறை வசதிகள் அற்ற நிலையில் கால் நூற்றாண்டுக்கு மேலான் காலம் கடந்து விட்டது.

கடந்த சில வருடங்களாகச் சித்த மருத்துவத் துறைக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. 140 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தும் நூலகத்தில் 15 பேர் இருக்கக் கூடிய வசதியே காணப்படுகின்றது.

இது மாணவர்களின் கல்விச் சூழலைப் பெரிதும் பாதிக்கின்றது. ஆய்வுகூடத்தில் மற்றும் பயிற்சிகள் வழங்கும் அறைகளில் 20 மாணவர்களுக்கு மேல் இருக்க முடியாத நிலையுள்ளது.


விரிவுரையாளர்கள் தங்கள் கல்விச் செயற்பாட்டுக்கான விரிவுரைகளைத் தயாரிப்பதற்கு வசதியான இடவசதி குறைவாகவே உள்ளது. தொழில் நுட்பவியலாளர்கள் செயற்படுவதற்கு வசதியான அறைகள் இல்லை.

இந்தத் துறையின் பிரதான நோக்கம் மக்களின் சுகாதாரத் தேவைகளை இனம் கண்டு அவற்றிற்கான உகந்த மருத்துவ முறையை அவர்களுக்கு அளிப்பதற்குத் தகுதியான பட்டதாரிகளை உருவாக்குவதாகும்.

இந்த நிலையை அடைவதற்குப் பூரணமான கல்விச் செயற்பாடுகளும் பயிற்சிகளும் மாணவர்களாக இருக்கும் போது வழங்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகள் இல்லாமல் பட்டதாரிகள் உருவாகும் போது அவர்கள் நிறைவான முறையில் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டார்கள்.

பத்திரிகைகளில் தேசிய மருத்துவச் சிகிச்சையை 80 வீதமான மக்கள் நாடுகின்றனர் எனக் கூறப்பட்டுள்ளது. இது உண்மைக்குப் புறம்பானது என நான் கருதுகின்றேன். யாழ்ப்பாணத்தில் உள்ள சித்த வைத்தியசாலைகளில் நோயாளர்களின் வரவைக் கணிப்பிட்டால் இது தெரிய வரும்.

அது மட்டுமல்லாது கொழும்பில் இருந்து பெறப்படும் ஆயுள்வேத மருத்துகள்தான் இங்கு பாவிக்கப்படுகின்றன. சித்த மருத்துகளின் உற்பத்தி குறைவாக இருப்பதனால் யாழ்ப்பாண மாநகர சபை, கைதடி போதனா வைத்தியசாலை மத்திய மருத்தகங்கள் ஆகியவற்றில் குறைந்தளவு சித்த மருத்துகள் தயாரிக்கப்பட்டு ஆயுள்வேத




மருந்துகளுடன் சேர்த்து வழங்கப்படுகின்றது. அரசு சித்த மருந்துத் தயாரிப்பில் போதிய முயற்சி எடுக்க வேண்டும்.

மாணவர்களின் ஐந்து வருட கல்விச் செயற்பாடு நிறைவுற நடைபெறுவதற்குச் சகல அடிப்படை வசதிகளுக்கும் ஒழுங்கு செய்து கொடுக்க வேண்டியது பல்கலைக்கழகத்தினதும் ஆயுள்வேத திணைக்களத்தினதும் தலையாய கடமையாகும். மாணவர்கள் தகுந்த முறையில் பயிற்றப்பட்டால்தான் அவர்களது சேவை மக்களின் சுகாதாரச் சேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக அமையும்.

பல்கலைக்கழகம் ஒன்றில் அந்தஸ்துப் பெறாத ஒரு துறையாக கால் நூற்றாண்டிற்கு மேல் இருந்த துறை என்பது சித்த மருத்துவத்துறையையே சாரும். பல்கலைக்கழகத்தின் புத்தி ஜீவிகளும் மற்றும் கல்விமான்களும் எமது தேசிய மருத்துவத்தை அபிவிருத்தியடையச் செய்ய இனியாவது முன் வரவேண்டும். பிழைகள் ஏற்படுவது மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமுதாயத்திலும் கல்விச் சமுதாயத்திலும் இயற்கையானதொன்றாகும். எமது பிரதேசத்தில் எமக்கே உரித்தான இந்தத் துறையை வளர்ப்பதில் எல்லோரும் தங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

துணைவேந்தர்கள் கணிசமான மேலைத்தேச வைத்தியர்கள் மற்றும் துறைசார்ந்தவர்கள் சித்த மருத்துவத்துறையின் வளர்ச்சிக்குத் தங்கள் பரிபூரண ஆதரவை வழங்கி வந்ததை சித்த மருத்துவத்துறை என்றும் எமது இதயத்தில் நிரந்தரமாக வைத்துப் போற்றும் வேறுபாடுகளை மறந்து வேற்றுமையில் ஒற்றுமையைப் பேணி சித்த மருத்துவத்துறைக்கு ஒரு சுபீட்சமான எதிர்காலம் அமைய சகலரும் தங்கள் பங்கினை வழங்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போது சித்த மருத்துவத்துறையின் நிலை பற்றி குறிப்பிடுதல் அவசியமானது என எண்ணுகின்றேன்.

### சித்த மருத்துவத்துறையின் பலம்

* பல்கலைக்கழக அந்தஸ்தை பெற்றுள்ளமை.
* தமிழர்களின் தேசிய கலாசாரம், பண்பாட்டுடன் இணைந்த மருத்துவம்.
* அனுபவமுள்ள பட்டப்பின் படிப்புடன் கூடிய 10 விரிவுரையாளர்கள் சேவையில் உள்ளமை.
* 1929 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மருத்துவங்களில் ஒன்று.
* மாணவர்களின் பயிற்சிக்காகச் சித்த போதான வைத்தியாசாலை அருகில் அமைந்துள்ளமை.
* சித்த மருத்துவத்துறைக்கு 5 மாடிக்கட்டடம் அமைக்க 109.7 மில்லியன் ரூபாவை அமைச்சிரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

### வாய்ப்பும் வசதிகளும்

* பட்டம் பெற்று வெளியேறிய பட்டதாரிகளில் பலர் அரசினால் வைத்திய உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை அதாவது உள்நாட்டில் வேலைவாய்ப்பு.
* உயர் கல்விக்கான வசதிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வழங்கப்படுதல்.
* சுயதொழில் ஈடுபடுவதற்கான ஆற்றல்.
* தேசிய பொருளாதாரத்தை ஊக்குவிக்கக் கூடிய வளங்கள் பெற்றுள்ளமை.

### பலவீனம்

* கல்வி சார் நடவடிக்கைக்கான கட்டடங்கள், இடவசதி இல்லாமை.
* குறிப்பிட்ட கல்விப் பிரிவுகளுக்குப் போதிய நிபுணத்துவம் பெற்றவர்கள் இல்லாமை.
* ஆரோக்கியசாலைப் பயிற்சிக்கான வளங்கள் போதாமை.
* போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாமை.
* உள்நாட்டு, வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணுவதற்காக மொழித்திறன், வல்லமை குறைவாகக் காணப்படுவதால்.
* பல்கலைக்கழகத்தின் மற்ற பீடங்களுடனும், சித்தமருத்துவத் துறையின் ஆரோக்கியமான புரிந்துணர்வு பேணப்பாடாமை.
* 26 வருடங்களாக பல்கலைக் கழகத்தில் சித்த மருத்துவத்துறையின் அந்தஸ்து உயர்த்தப் படாமல் பார்வைக்கு மட்டும் ஒரு துறையாக உள்ளமை.

### எதிர் நோக்கும் சவால்கள்

* ஒரு துறை முன்னேற்றமடைவதற்குச் சம்பந்தப்பட்ட ஏனைய துறைசார்ந்த விஞ்ஞான பூர்வமான அறிவு பெறப்படுவது மட்டுப்படுத்தப் பட்டிருத்தல்.
* பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கான தரமான வசதிகள் உருவாக்கப்படுவதில் தாமதம்.
* சித்த மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பை மேற்கொண்டவர்களைச் சுயமாக செயற்படவிடாது தடுக்க பல்கலைக்கழகத்தினுள் ஏனைய துறை சார்ந்த கல்வி மான்களால் ஏற்படுத்தப்படும் ஆதிக்கமும் தலையீடுகளும்.
* தொழில் வாய்ப்பிற்கான நிறுவனங்கள் (மருந்து உற்பத்தி நிலையங்கள், மூலிகைகளை வர்த்த ரீதியில் பயிரிடல், சித்த மருத்துவச் செயற்பாட்டிற்கான ஆய்வு நிறுவனங்கள்) பிரதேச ரீதியாக நிறுவப்படாமை.
* சித்த மருத்துவத்துறையை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமென்ற துணிவு, உணர்வு துறை சார்ந்தவர்களிடம் வெளிப்படாமை.
* மாணவர்களைப் பொறுப்புள்ளவர்களாகவும், நாட்டின் சுகாதாரச் சேவையை மேம்படுத்தும் பண்புள்ளவர்களாகவும் நெறிப்படுத்தும் ஆற்றல் குறைவாகக் காணப்படுதல்
* அரசியல் ரீதியான பங்களிப்புகள், ஆதரவுகள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருத்தல்.
* மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப விரிவுரையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படவில்லை.

மேற்கூறியவற்றில் சந்தேகங்கள் இருப்பின் சித்த மருத்துவத்துறைக்குச் சமுகமளிப்பதன் மூலம் யதார்த்தத்தை அறிந்துகொள்ளலாம்.

''சித்த மருத்துவம் சித்த மருத்துவம் சார்ந்தவர்களால் தான் வளர்ந்தெடுக்கப்படவேண்டும். அதற்காக அயராது உழைக்க வேண்டும். மக்களை நோய் என்ற துயரில் இருந்து நீங்குபவன் வைத்தியனே. ஆகவே, மக்களுக்கு அரிய சேவையை கொடுக்க வல்ல சித்த மருத்துவத் துறை சகல வசதிகளுடனும் அமையப் பெறுவது அவசியமாகும்.

சித்த மருத்துவ நூல்கள் பல 13ஆம் நூற்றாண்டு காலத்தில் எழுதப்பட்டவை. அதிலுள்ளவற்றை மீளாய்வு செய்து தற்காலத் தேவைக்கேற்ப விளக்கமுள்ள வகையில் எழுதப்பட வேண்டும். உதாரணமாக நாடியை குறிப்பிடும் போது நாடி, நரம்பு என்ற பதங்களை பாவிக்கப்பட்டுள்ளன. பதினெண் சித்தர் நாடி நூலில் நாடி இருதயத்தின் மூலம் நாடிகளில் உணரப்படுகின்றதென்பது குறிப்பிடப்பட வில்லை.

பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி

அத்துடன் 72,000 நாடிகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தற்கால மாணவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பழைய பாணியை பின்பற்றாமல் விளங்கப்படுத்தக் கூடிய முறையில் காரணகாரிய ரூபமாக எடுத்துக் கூற வேண்டும். பழையவற்றை விளக்கமில்லாத வாசிப்பதை மாணவர்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதுடன் மருத்துவத்தில் உள்ள நம்பிக்கையும் குறைவதற்கு வழி செய்யும். நிரூபிக்கப்பட்ட முடிவுகளைக் கொண்டு பழையனவற்றை நியாயபூர்வமான விளக்கத்துடன் கற்பித்தல் காலத்தின் மிக முக்கிய தேவையாகும்.

# அங்குசம் ஒன்று யானைகள் ஐந்து



மனிதன் உயர்ந்தும் தெய்வமாகும் வழி முறைகளை ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையின் பதினாறாவது அத்தியாயத்தில் விளக்குகிறார். தியாகம், புலனடக்கம், கோள் சொல்லாமை பற்றி ஆராய்ந்து பார்க்கலாம். அகிம்சை என்பது பெருங் கடல், புலால் உண்ணாமை கூட அகிம்சையின் ஒரு கூறு. ''தன் ஊன் பெருக்க பிறிதூண் உண்பவன் தெய்வநிலை பெறான்'' என்று தெய்வத் திருவள்ளுவர் தீர்ப்புரைக்கிறார்.

மாமிச உணவினர் மிக விரைவில் வன்முறை, உயிர்க்கொலை ஆகியவற்றில் இறங்கிவிடுகின்றனர். கொலைகளில் சிக்கியுள்ளவர்களை ஆய்வு செய்தால் இந்தச் செய்தி உண்மை என்று அறியலாம். வள்ளலார் போன்ற மனித தெய்வங்கள் ஜீவகாருண்யம் என்ற கொள்கையை அறிவித்துப் புலால் மறுத்தலை வெகுவாகப் பரப்பினர். சுத்ததேகம் என்ற ஒளி தேகம் பெற விரும்புவோர். முற்றாகவே புலால் உண்ணலாகாது என்று விளக்கினார் வடலூர் வள்ளல்.

நாள், கிழமை, மாதம் பார்த்து மாமிசம் விலக்கி உண்பவர் சிலர் தங்களை சைவ உணவினர் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். வாரியார் சுவாமிகள் பழுத்த சைவர், சைவ உணவினர். அவரை விருந்துக்குத் தம் வீட்டுக்கு அழைத்தார் ஓர் அசைவ அன்பர். சுவாமிகள் தாம் அசைவம் என்பதால் வரமாட்டார் என்று கருதி நீண்ட விளக்கம் சொன்னார் அவர்.

''சுவாமி அசைவ சமையல் அறை வேறு. சைவ சமையல் அறை வேறு. கரண்டி கூட இங்கும் அங்கும் மாறாது சுவாமி... அரிவாள் மனை வேறு. சாப்பாடுத் தட்டு வேறு வேறு. சுவாமி சைவத்தையும் அசைவத்தையும் தனித்தனியாகப் பிரித்துவிட்டோம்'' என்றார் அன்பர். புன்னகையோடு அவரைப் பார்த்த வாரியார் ''தட்டு வேறு, கரண்டி வேறு, அரிவாள் மனை வேறு, சமையல் கட்டு வேறு.. எல்லாவற்றையும் பிரித்துவிட்டாய். வயிறு ஒன்று தானே! அசைவம் சாப்பிட வேறு வயிறு... சைவம் சாப்பிட வேறு வயிறு வைத்திருக்கிறாயா?'' என்றார். அத்தோடு நிறுத்தாமல் '' மனிதன் இறந்தால் புதைக்கின்ற இடம் கல்லறை, இடுகாடு. ஆடும் கோழியும் இறந்தால் புதைக்கும் இடம் வயிறா? உன் வயிறா. அப்போ நீ நடமாடும் சுடுகாடு கல்லறை சரியா?'' என்று கேட்டதும் அந்த அன்பர் அழுது தொழுது அப்பொழுதே சைவமானார்.

இறைநிலை பெற புலால் உணவு தடையில்லை என்பவர்கள் கண்ணப்பன் கதையை மேற்கோள் காட்டுகிறார்கள். விதிவிலக்கு விதியாகாது. இறைச்சி உணவு மனிதனுக்குள் மிருக உணர்வு ஊட்டும். இது கருதியே அகிம்சை தெய்வகுணம் ஆனது.

விலங்கு எதையும் விட்டுக் கொடுக்காது. சண்டையிடும் ஆனால் மன்னிப்பது, மறப்பது, விட்டுக் கொடுப்பது இவையாவும் தேவகுணங்கள். அது கருதியே தியாகம் தேவகுணம் என்கிறது கீதை. நம்முடைய நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர் கதைகளைப் படித்தால் புரியும். நாயன்மார்கள் மனிதனும் தெய்வமாக முடியும் என்பதற்கான அடையாளம். அவர்களிற் பலர் தியாக புருஷர்கள். கண்ணப்பர் தம் கண்ணைத் தியாகம் செய்கிறார். சிறுதொண்டர் தம் பிள்ளையையே தியாகம் செய்கிறார். இப்படிப் பல வரலாறுகள். ஒரு பறவையான சடாயு சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது சண்டையிடுகிறது. தன் உயிரைத் தியாகம் செய்கிறது. இராமர் அந்த சடாயுவை வணங்குகிறார். இயேசுபிரான் உலக மக்கள் நலம் கருதித் தன்னைத் திருப்பலி கொடுத்தார் என்கின்ற நம்பிக்கைதான் கிறிஸ்தவ மதத்தின் அடிநாதம். தியாகிகள் வணங்கப்படுகிறார்கள், தொழப்படுகிறார்கள்.

புலனடக்கம் அடுத்த தெய்வகுணமாகிறது! ஐந்து பொறிகள் அதன் வழி ஓடும் புலன் நுகர்ச்சிவெளி இவை அடக்கிக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். ஒரு கச்சேரி நடக்கின்ற போது தாளம் மாறாது மிருதங்கம் ஒலிக்க வேண்டும். பாடகர் சுருதியே தம்புராவின் சுருதியாக இருக்கவேண்டும்.

''அலைபாயுதே கண்ணா'' என்ற பாடலைப் பாடகர் பாடும்போது ''வாதாபி கணபதி'' பாட்டுக்கு வயலின் வாசித்தால் யார் ரசிப்பது. மிருதங்கம் அவர் பாட்டுக்குத் தாளம் இசைத்தால் அடிக்க முடியுமா? இந்தக் கண்றாவிக் கச்சேரிதான் நாள்தோறும் நாம் நடத்துகிறோம். கண் ஒன்றைப் பார்க்க, காது ஒன்றைக் கேட்க வாய் ஒன்று செய்ய- சுருதி இல்லாமல் வாழ்க்கைக் கச்சேரி நடக்கிறது. ஐந்து பொறிகளும் புலன்களும் ஒரே லயத்தில் இருக்க வேண்டாமா?

''ஒரு தவட்டார் ஒன்றை உள்ள ஒட்டார் பலரிடம் உனது தாள் சேர வெட்டார் ஐவர்'' என்று தன் ஆன்மாவை அமுக்கிப் பிடிக்கும் ஐந்து அயல் வீட்டாரைப் பற்றிப் புலம்பினார் அருணகிரிநாதர். அடக்க முடியாத இந்த ஐந்து முரடர்களை 'ஐம்புல வேடர்' என்கிறது சைவ சித்தாந்தம். மெய், வாய், கண், மூக்கு, செவி என்கிற ஐந்து பேரும் அவ்வளவு ஆபத்தானவர்களா? இந்த ஐந்து பொறிகளாலும் இன்பங்களை மட்டுமல்ல துன்பங்களையும் நுகர முடியும். இன்பதுன்ப அனுபவங்களைப் பொறி புலன்கள் மூலமாக நுகர்வது வாழ்வின் நியதி கட்டாயம்.

இந்த ஐந்து பொறிகள் வழிப் பெறுவது ஐந்தறிவு. அதனைத் தாண்டி ஆறாவது அறிவின் வழி உணர்வதே கடவுள். இந்த ஐந்துமே முழு அளவில் தொழிற்பட்டுக் கொண்டிருந்தால் ஐந்தையும் தாண்டி மேலே வர முடியாது. அப்பொழுது கடவுளை நினைப்பதற்கில்லை. புரிந்து கொள்ள வழியே இல்லை. அதனால்தான் இந்த ஐந்தையும் 'அடக்கு அடக்கு' என்று ஞானிகள் பாடினர். ''பொறிகளின் மீது தனி அரசாணை'' என்றார் பாரதி.

சு.கி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஜனவரி 2011 திங்கட்கிழமை

# பண்பு




எமது வாழ்வைக் காக்கும் அறங்களை இளமையில் இருந்தே மேற்கொள்ளப் பழகுதல் வேண்டும். எம்மைவிட வயதில் மூத்தவர்களிடமும், பெற்றோரிடமும் பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். பணிவு எம்மை ஒருபோதும் தாழ்த்திவிடாது. பணிவுள்ளவர்கள்தான் பண்புள்ளவர்களாகவும் உருவாக முடியும் இதை நம் சிறுவயதுமுதல் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்கும் போதுதான் நாமும் நல்லவர்களாக முடியும்.

நல்லவைகள் எனக் கூறத்தக்க பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற பண்புகளை வளர்ப்பதில் சமூகச் சூழலின் பங்கு குறிப்பிடத் தக்கது. சமூகச் சூழல் நன்றாக அமையும்போது பிள்ளைகளிடம் நற்பண்புகள், உருவாகின்றன. இவற்றினடிப்படையில் பிள்ளையின் மனதில் நல்ல எண்ணங்கள் எழுகின்றன. அறிவாற்றல்களிலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களை முன்மா திரியாகக் கொண்டு ஒழுகும்போது? சமுதாயம் விருத்தி அடைகின்றது. நமது வாழ்விற்கு வழிகாட்டியாக, உயர்ந்த நிலை அடைவதற்கு உதவியாக இருந்த பெரியோர்களிடம் பணிவு, அடக்கம், பயபக்தி, கட்டுப்பாடு போன்ற நற்பண்புகள் காணப்பட்டதை அவதானிக்கலாம். மேலும் அவர்களின் நற்போதனைகளைக் கடைப்பிடித்து ஒழுகுதலும் இன்றியமையாததாகும்.

# தைத்திருநாள்



தமிழின் முதன் நாளாம்
இறைவன் இசை மீட்க
இன்னிசையின் மவ்வலில்
பறவைகள் இசை இசைக்க
பூக்கள் தமை மறந்து
தேன் சொரிய
இவ் உவகையில்
கார் கொண்டாடும், நிலா
கண்சிமிட்டும், விடை கொடுக்க
சூரியன் ஆயிரம் விருப்பில் திரட்டிய
புன்னகையோடு கதிர் பரப்ப
புதிய பொங்கலே பூமிக்கு வா என...
அந்தணர் வேதம் இசைக்க
புது மணப் பெண்ணாய் நாணம் கொண்டு
அழகில் மொத்தமாய்
மேகத்தின் பூ குழந்தையாய்
பூமிக்கு வா தைத்திருநாளே...!!!



நா.கபில்நாத்
யாழ்.இந்துக் கல்லூரி
தரம் - 12

# குரங்கு விடு தூது




வாணக் கடைக்குச் சென்ற குரங்கு அங்கிருந்த பட்டாசுகளைச் சுருட்டு என்று நினைத்துத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டது.

அதைக் கண்ட மடையன், ''சொன்னபடி சுருட்டு களைச் சுருட்டிக் கொண்டு வந்து விட்டதே!'' என்று மகிழ்ந்தான்.

''ஆஞ்சநேயா! வாழ்க நீ! வளர்க உன் தொழிற் திறமை!'' என்றான் முட்டாள்.

பல வண்ணங்களில் இருந்த பட்டாசுகளைப் பார்த்து, ''நம் குருநாதர் பிடிக்கும் சுருட்டுகள் பூராவும் கறுப்பு நிறம்தான். நாம் பிடிக்கப் போவதோ சிவப்பு, பச்சை, நீலம் என்று பல நிறங்களில் இருக்கின்றன'' என்று பெருமைப்பட்டுக் கொண்டான் மண்டு.

பட்டாசுகளில் இருந்த திரியைப் பார்த்த மூடன், ''நெருப்பு வைப்பதற்காக என்றே தனியாக ஒரு திரி வைத்து இருக்கிறார்கள். அதனால் இதுதான் உலகத்திலேயே உயர்ந்தசாதிச் சுருட்டு'' என்றான்.

சீடர்கள் அனைவரும் ஆளுக்கொரு வெடியை வாயில் வைத்துக் கொண்டனர். எல்லோர் திரிக்கும் கொள்ளிக் கட்டையால் நெருப்பு வைத்தான், முட்டாள்.

ஆனந்தமாகப் புகை விடலாம் என்ற கற்பனையில் மூழ்கினர் சீடர்கள்.

அடுத்த கணம், ''டமால், டுமீல்'' என்று ஒவ்வொருவர் வாயிலும் இருந்த பட்டாசுகள் வெடித்தன. வாய் இழந்த சீடர்கள், ''ஐயோ, ஆஞ்சநேயா!'' என்று அலறிக் கொண்டு உருண்டனர்.

நடந்ததைக் கேள்விப்பட்ட பரமார்த்தர், ''இனிமேலாவது எனக்குத் தெரியாமல் எந்தக் காரியத்தையும் செய்யாதீர்கள்'' என்று எச்சரிக்கை செய்தார்.

''குருவே! உங்கள் வேட்டி எல்லாம் கிழிந்து விட்டது. அதனால் கட்டிக் கொள்வதற்கு நல்ல பட்டுத் துணியாகத் திருடிவரச் சொல்லுங்கள்'' என்றனர் சீடர்கள்.

பரமார்த்தரும் துணி திருடி வருவதற்குக் குரங்கை தூதனுப்பினார்.

அந்த நாட்டு அரண்மனைக்குள் நுழைந்தது குரங்கு....

அரண்மனைக் குளத்தில் குளித்துக்கொண்டு இருந்தான் அரசன். படிக்கட்டில் அவனது பட்டுத் துணிகளும், வைரக் கிரீடமும் வைக்கப்பட்டிருந்தன. யாருக்கும் தெரியாமல் அவற்றைத் தூக்கிக் கொண்டது குரங்கு.

பட்டுத் துணிகளையும் வைரக் கிரீடத்தையும் பார்த்த குருவும் சீடர்களும் வியப்படைந்தனர்.

''குரங்கே! சீக்கிரமே உனக்குக் கோயில் கட்டிக் கும்பிடுகிறோம்!'' என்றான் மண்டு.

பட்டு வேட்டியைக் குருவுக்குக் கட்டிவிட்டான் மூடன். மகுடத்தை அவர் தலையில் சூட்டினான் முட்டாள்.

''இப்போது பார்த்தால் முடிசூடிய மன்னரைப் போல் இருக்கிறீர்கள்'' என்று புகழ்ந்தான் மட்டி.

மீதி இருந்த வேட்டிகளைச் சீடர்கள் கட்டிக் கொண்டனர்.

''வாருங்கள்! இந்த அரச கோலத்திலேயே ஊர்வலம் போய் வருவோம்!'' என்று புறப்பட்டார் பரமார்த்தர்.தெருவில் இறங்கிய மறுநிமிடமே, அரச காவலாளிகள் குருவையும் சீடர்களையும் கைது செய்தனர்.அரசனின் பொருள்களைத் திருடிய குற்றத்திற்காகப் பத்து நாள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

''குருவே! மனிதர்களால் தான் நமக்குத் தொல்லை என்று நினைத்தோம். கேவலம் ஒரு குரங்கு கூட நமக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து விட்டதே!'' என்று புலம்பினார்கள் சீடர்கள்.

(முற்றும்)

# ஞானக்குழந்தை இல்ல முன்பள்ளிகள் ஆரம்பம்

பாலர் கல்விக்கழகத்தின் இயக்குநர் எஸ்.வி. காசிநாதன் தலைமையில் இயங்கி வரும் 13 ஞானக்குழந்தைகள் இல்லப் பாலர் பாடசாலைகளும் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பிக்கப்பட்டுள்ள ஞானக்குழந்தைகள் இல்லப் பாலர் பாடசாலைகள் விவரம் வருமாறு:-

யாழ். பிறவுண் வீதிப் பாலர் பாடசாலை, சிவன் வீதி, திருநெல்வேலி பாலர் பாடசாலை, யாழ். அரசடி வீதி பாலர் பாடசாலை, யாழ். பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலை, வண்ணார் பண்ணை பால்ர் பாடசாலை, யாழ். பாலர் பாடசாலை, பருத்தித்துறை வீதி நல்லூர் பாலர் பாடசாலை, ஆனைப்பந்தி பாலர் பாடசாலை, கொக்குவில் மனோன்மணி பாலர் பாடசாலை, யாழ். வீதி பாலர் பாடசாலை, கோண்டாவில் புகையிரத வீதி விக்னேஸ்வரா பாடசாலை, சுன்னாகம் பாலர் பாடசாலை, முடமாவடி பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி நாவலர் பாலர் சோலை ஆகிய முன்பள்ளிகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-313)

# சிந்தனைத் துளிகள்

- நீ வெற்றி பெற்றால் உனக்குப் போலியான நண்பர்களும், மெய்யான பகைவர்களும்தான் கிடைப்பார்கள். இருந்தாலும் நீ வெற்றி பெறப் பாடுபடு.
- கௌரவம் நாக்கிலும், உயர்வு பணிவிலும், கல்வி ஒழுக்கத்திலும் உள்ளது.
- அறிவுக்கு முற்றுப்புள்ளி வைக்காதே. நீ சாகும் வரைக்கும் உன் அறிவுக் கதவு திறந்தே இருக்கட்டும்.
- உன் குறையை உனக்கு மட்டுமே சுட்டிக்காட்டி மற்றவர்களிடம் அதனை மறைப்பவனே நம்பத்தகுந்த நண்பன்.
- தீயார் நேசத்தை விடத் தனிமை மேலானது.
- எதிர்பார்க்கப்படுகின்ற அனைத்துமே நெருக்கமானது. ஆனால் அவை அனைத்தையும் விட மரணம் என்பது மிக நெருக்கமானது.
- உன் எண்ணங்கள் எப்படியோ அப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே சிறந்தவையையே எண்ண முயற்சி செய்.
- உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னில் மயங்கும். உனது நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்.

# அறிவுத் தகவல்

- இலங்கையில் முதன்முதலில் புகையிரதம் ஓட ஆரம்பித்த ஆண்டு - 1864
- இடம்விட்டு இடம் நகரக் கூடிய தாவரம் - கிளை மோடா மோனஸ்
- நீராவிப்படகைக் கண்டுபிடித்தவர் - பல்டன்
- வாயில் நரம்புகள் இல்லாத கடல்வாழ் உயிரினம் - திமிங்கலம்
- மிகச் சோம்பேறியான பறவை - தேவாங்கு
- அதிக மூளைவளர்ச்சி கொண்ட விலங்கு - குரங்கு
- உடலில் இரத்தம் பாயாத உறுப்பு - கண்ணின் கருவிழி
- வாசனை வீசும் தபால்தலையை வெளியிட்ட நாடு - தென்னாபிரிக்கா
- செவ்விளநீரின் தாவரவியற் பெயர் - கொங்கொஸ் நியுசிபிரா
- வியர்க்காத விலங்கினங்கள் - நாய், சுண்டெலி
- நஞ்சில்லாத பாம்பினம் - மலைப்பாம்பு

தானுஜன்
கொக்குவில்.

## எதிர்கால மலர்கள்...





திறமையின் வெளிப்பாடு: மாநகர முன்பள்ளித் திறப்புவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட சிறுமியர்கள் நடனமாடுகின்றனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத்தை வளர்க்கும் சுண்டுக்குளி புனித அருளப்பர் ஆலயம்

யாழ். நகரின் கிழக்குப் பகுதியில் குடிசன அடர்த்தி மிகுந்ததும், கல்வி, செல்வம், பண்பாட்டின் வேராகவும் மதிப்பார்ந்த பெருமக்கள் வாழும் நகரக் கிராமமாகச் சுண்டுக்குளி பிரதேசம் விளக்குகிறது. ஒரு காலத்தில் 'பிரபுக்கள் குடியிருப்பு' எனவும் இந்தப் பகுதி அழைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரியை அண்மித்த பழமை வாய்ந்த வரலாற்றுக் கிராமமாகவும் திகழ்கிறது.

இந்தப் பகுதியில் யாழ். ஆஸ்பத்திரி வீதியின் முடிவிடத்தில் கோயில் வீதிக்கு அண்மித்து சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயம் அழகுறக் காட்சி தருகிறது.

போர்த்துக்கேயரின் ஆட்சியிலே உருப்பெற்று ஒல்லாந்தர் காலத்தில் இலைமறைக் காய் போல தன்னைப் பாதுகாத்து ஆங்கிலேயர் வருகையால் மதச் சுதந்திரத்தின் கனியெனக் கனிந்து கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை வளர்த்து ஆன்மீக வலுவூட்டி அருள் பொழிந்து வருகிறார் ஸ்தாபக அருளப்பர்.

இவர் இயேசு பிறப்பிற்கு ஆறு மாதங்கள் முன்னதாக யூதேயா தேசத்திலே பிறந்தார். இயேசுவின் வருகைக்கு மக்களைப் புனித வழியில் தயார்படுத்தும் முன்னோடியாகப் பாலை நிலத்தில் புரட்சிக் குரல் கொடுத்தார். இறைவன் மனிதனுடன் செய்து கொண்ட பழய ஒப்பந்தத்தின் முடிவுக் குரலாகவும், புதிய உடன்படிக்கையின் ஆரம்பக் குரலாகவும் தோன்றி செம்மைப்படுத்தும் ஊழியனாகப் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணத்தை 17 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கைப்பற்றிய போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதில் ஆர்வம் காட்டினர். மக்கள் வழிப்படுதற்காகப் பல கோயில்களை உருவாக்கினர். அவற்றில் பதினோராவது கோயிலாக 1634 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஆலயம் சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பரின் பெயர் கொண்ட ஆலயமாகும்.

இது தற்போதைய கோயில் இருக்கும் இடத்திற்குச் சற்றுத் தென்கிழக்காக இருநூறு யார் தொலைவில் இருந்ததாக அறியப்படுகிறது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலத்தில் கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டும் பறிமுதல் செய்யப்பட்டும் வந்தது. இந்த மத ஒழிப்பு நடவடிக்கையின் போது பழமையான ஆலயம் அழிக்கப்பட்டது. அப்போது பக்திமிக்க கத்தோலிக்க மக்கள் கோயிலில் இருந்த புனிதரின் திருச்சொரூபத்தை எடுத்து மறைவாகப் பேணிக்காத்து வந்தனர்.

பின்னர் தருணம் கிடைத்தபோது 'பிரபுக்கள் குடியிருப்பு' என அழைக்கப்பட்ட தற்போது கோயில் அமைந்துள்ள இடத்தில் சிறிய கொட்டிலால் ஆனதோர் கோயிலை அமைத்து புனிதரின் சொரூபத்தை நிறுவி வழிபட்டு வந்தனர்.

1796 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்டு மத சுதந்திரத்திற்கான வாய்ப்பு உருவானது. இந்தச் சந்தர்ப்பத்தில் இறை ஊழியத்திற்காக தம்மை அர்ப்பணித்த கோவைதியான சபைக் குருமார் பல இடங்களிலும் கல்லாலான புதிய ஆலயங்களைக் கட்டத் தொடங்கினர். இதைக் கண்ணுற்ற சுண்டுக்குளி வாழ் இறை மக்களும் தமது பாதுகாவலருக்குப் புதிய கலை வடிவம் பொருந்திய ஆலயத்தைக் கட்ட முனைந்து செல்வமும் நல்லுள்ளமும் படைத்தவர்களின் உதவியை நாடினர்.

யாழ். பேராலயத்தின் மூப்பரும் முதலியாருமான யோசவ் புவிமனசிங்கியால் 1888 ஆம் ஆண்டு புதிய ஆல யத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஆலயத்தின் முதலாவது மூப்பரும் கட்டடக் கலைஞருமான யாக்கோப்பு சாமுவேல் பொறுப்பில் அழகிய கோவா கலை வடிவில் அமைந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது.

அன்றைய ஆயர் கென்றி ஜூலன் ஆண்டகையின் பேருதவியும் பங்கு மக்களின் பல தரப்பட்ட பங்களிப்பும் ஆலயத்தின் உன்னத வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இந்த ஆலயத்தின் முதலாவது பரிபாலகராக அருட்திரு. எஸ்.அந்தோனி (அ.ம.தி) நியமிக்கப்பட்டார். இவரது பணித்தளங்களாக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம், நாவற்குழி மரியன்னை ஆலயம் என்பனவும் அமைந்திருந்தன.

**என்னை விட வல்லவர்**
**ஒருவர் வருகிறார்**
**அவருடைய**
**மிதியடிவாரை**
**அவிழ்க்கக் கூட நான்**
**தகுதியற்றவன். நான்**
**தேயவேண்டும். அவர்**
**வளரவேண்டும்.**

ஆலயப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு குருவானவர் தங்கி இருக்கும் குருமனை அமைக்கப்படவேண்டிய தேவை உணரப்பட்டது. 1898 ஆம் ஆண்டு ரூ.4,000 செலவில் நிறுவப்பட்டது. 1905 ஆம் ஆண்டு ஆலயத்தின் அமைப்பிற்கும் அழகிற்கும் ஈடுகொடுப்பதைப் போல் அமைந்திருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் பிரபல வர்த்தகரான சு.சூசைப்பிள்ளையினால் அன்பளிப்பாகக் கட்டிக் கொடுக்கப்பட்டது.

ஆலயத்தின் முகப்பில் காட்சி தரும் புனித அருளப்பரின் சிலை சிமெந்தினால் கலைச் சிற்பி யோன் பிலிப்பு என்பவரால் வடிவமைக்கப்பட்டது. புகைப்பட 'புளொக்' தயாரிப்பில் விற்பன்னரான கலைஞர் சலமோன் பிரான்சிஸ் துரையப்பாவின் கலை நுணுக்கம் மிக்க வேலைப்பாடுகளால் ஆலயம் அலங்கரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டது.

இந்த ஆலயம் 1888 ஆம் ஆண்டில் இருந்து 1925 ஆம் ஆண்டுவரை தனியான பரிபாலகரின் கீழும் அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டு வரை யாழ். பேராலயத்துடன் இணைக்கப்பட்டும் இயங்கி வந்தது. 1982 ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் தனிப்பங்காக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் கோயில், றக்கா வீதி புனித திரேசம்மாள் கோயில் என்பனவும் இந்தக் கோயிலை தலைமையாகக் கொண்டு வழி நடத்தப்பட்டு வந்தது. தற்போது ஆசீர்வாதப்பர் கோயில் தனியாக இயங்கி வருகிறது.

சுண்டுக்குளி திருமுழுக்கு அருளப்பர் ஆலய திருவிழா வருடந்தோறும் ஆனி மாதம் 24 ஆம் திகதி வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. சலமோன் ஞானப்பிரகாசம், சின்னத்துரை, சுவாம்பிள்ளை ஆகியோர் கொடி மரங்களை அன்பளிப்பாக வழங்கினர். "என்னை விட வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட நான் தகுதியற்றவன். நான் தேய வேண்டும். அவர் வளர வேண்டும்" என இயேசுவை சுட்டிக் காட்டிய இவரிடம் வேண்டும் பக்தர்களுக்கு நிறைவாக அருள்பொழிந்து வருகிறார்.

இந்த ஆலயம் கல்வித் துறைக்கு ஆற்றிய சேவை அளப்பரியது. புனித யோண் பொஸ்கோ பாடசாலை உதயமாக இந்த ஆலயத்தின் பணியும் தூண்டுதலாக இருந்துள்ளது. 1940 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நீதிபதியாகிய உயர்திரு. ஜேம்ஸ் யோசவ் காப்பாளராகவும், மறைவேதியர் ம.பாக்கியநாதரை தலைவராகவும் கொண்ட புனித யோண் பொஸ்கோ இளைஞர் மன்றம் இந்தக் கோயிலில் உதயமானது. சமய, சமூக ஆலயப் பணிகளில் தீவிரமாகச் செயலாற்றியது. பாடசாலையை விட்டு வெளியேறும் இளையோருக்கான பொதுக்கல்வியையும், தொழிற்கல்வியையும் புகட்டும் பொருட்டு பாடசாலையொன்று புனித யோண் பொஸ்கோ என்னும் பெயரில் றக்கா வீதியில் ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் நடைபெற்றது.

காலப்போக்கில் சிறுவர் பாடசாலையாக மாற்றம் பெற்று கார்மேல் சபைக் கன்னியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்களின் சீரிய வழிநடத்தலினால் பெரு வளர்ச்சியடைந்து இன்று யாழ். மாவட்டத்தின் தலை சிறந்த ஆரம்பப் பாடசாலை கல்வியிலும் உருவாக்கத்திலும் முன்னணி வகிக்கின்றது. மேற்படி சபைக் கன்னியர்களின் பணியும் பங்களிப்பும் ஆலய வளர்ச்சியோடு இன்று வரை பின்னிப்பிணைந்து செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது.

அருளப்பர் ஆலய வளர்ச்சியில் 1968 ஆம் ஆண்டின் பின்




பல வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படத் தொடங்கியது.

(தொடரும்)

# வதரிபீட விநாயகர் ஆலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

யாழ்.கொழும்புத்துறை வீதியில் இலந்தைக்குளத்துடன் இணைந்த பகுதியில் எழில் கோலத்தில் காணப்படுகின்றது கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயமாகும்.

இடைப்பட்ட காலங்களில் ஆலய வளர்ச்சியில் மந்தநிலை காணப்பட்ட போதிலும் தற்போது பொறுப்பேற்றிருக்கும் புதிய நிர்வாகசபையால் பல ஆலய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆலயத் திருவிழா வைகாசிப் பூரணை தினத்திலிருந்து 9 நாள்கள் முன்னதாகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று பூரணைக்கு முதல்நாள் தேர்த்திருவிழாவும் பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். விசேடமாக இந்து தெய்வங்களின் உற்சவமான திருவெம்பாவை, கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, பெருங்கதை, வரலட்சுமி, நாயன்மார் குருபூசை, வைரவர் மடை, சதுர்த்தி உள்ளிட்ட பல தினங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. இவ்வாலயத்தின் பரம்பரைப் பூசகர்களாக சின்னையா ஐயரும் அவரது



முன்னோரும் சோமசுந்தர ஐயர், லோகேஸ்வர சர்மா ஆகியோரும் பணியாற்றி வந்தனர்.

சில வருடங்கள் முதல் விநாயகர் ஆலயம், பழனியாண்டவர் ஆலயம் இரண்டையும் தியாகராஜ ஐயரின் மகனாகிய சிவஸ்ரீ சங்கரராஜக் குருக்களும் அவரது மகன் பிரம்மஸ்ரீ கணநாத சர்மாவும் இணைந்து பூசை நைமித்தியங்களை நிறைவேற்றி வருகின்றனர்.

தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிர்வாக அமைப்பு 2005 ஆம் ஆண்டு தொடக்கம் பல புதிய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. நிர்வாக சபையின் தலைவராக கே. முத்துக்குமாரசாமியும் உபதலைவராக பொ. சிவப்பிரகாசமும் செயலாளராக நாகேஸ்வரன் காந்தீபனும் பொருளாளராக மு.சிவப்பிரகாசமும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களுடன் 11பேர் அடங்கிய நிர்வாக உறுப்பினர்களும் செயலாற்றுகின்றனர்.

(முன்னைய நிர்வாகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ராஜகோபுர அமைப்புப் பணிகளை நிறைவுசெய்து 2007 இல் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இஷ்ட தெய்வங்களின் திருக்காட்சிகள், அட்டதிக்குப் பரிபாலகர்கள், நாயன்மார்கள், தேரடிச்சித்தர்களான யோகர் சுவாமிகள், கடையிற்சுவாமி சித்தர், செல்லப்பா சுவாமிகள் போன்ற திருவுருவங்கள் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

விநாயகப் பெருமான் வீதிவலம் வருவதற்கெனத் திராவிடமரபு முகபத்திர எண்கோண சிற்பத்தேர் உருவாக்கப்பெற்று 03.06.2009 ஆண்டில் வெள்ளோட்டம் நடைபெற்றது. இச்சிற்பத்தேரினை சரித்திரவரலாறு, விநாயகர் புராணக் காட்சிகள், விக்கிரவரி, யாழ். சித்தர் பரம்பரை ஆகியன அலங்கரிக்கின்றன. தேர் முட்டியும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. தேரடி வைரவர் ஆலயமும் காணப்படுகிறது. இத்தனை பணிகளும் குறுகிய காலத்தில் உள்ளூரிலும் வெளியூரிலும், புலம் பெயர்ந்தும் வாழும் அடியார்களின் பங்களிப்பில் நிறைவேற்றப்பட்டமை விநாயகனின் திருவருளாகும். ஆலய வெளிவீதியில் சிற்பத்தேர் வலம் வருவதற்கு வசதியாக யாழ். மாநகர சபை மேயர் ப.யோகஸ்வரியின் பெரும் பங்களிப்பில் தார்வீதி கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் குமாரசாமி சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட புகையிரத நிலைய அதிபர்)

திதி: 17.01.2011
(திரயோதசி)

அன்னையின் மடியில்: 04.06.1931

ஆண்டவன் அடியில்: 11.02.2006

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

பிறந்தவன் எவனுக்கும் மரணமும்
மரணப்பட்டவனுக்குப் பிறப்பும் நிச்சயமே
தவிர்க்க முடியாத உன் கடமைகளைச்
செயலாற்றுவதில் இதற்காகக் கவலைப்படாதே.

எங்களின் இதயத் தெய்வமே!
தங்களின் உயர்ந்த எண்ணங்களை
எங்களின் இலட்சியமாகக் கொண்டு
தங்களின் புனிதமான பாதையிலே
நாங்கள் உறுதியாகச் செல்லுவோம்.

'மங்கை இல்லம்',
சந்தை வீதி, உடுப்பிட்டி. (109380)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி, ஜன.17

வீதி விபத்தில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் நேற்று முன்தினம் காயமடைந்தனர்.

கொடிகாமம், கச்சாய் வீதியில் எதிரே வந்த வாகனத்துடன் வீதியோரம் மோட்டார் சைக்கிளைச் செலுத்தியபோது வீதிக் குழிக்குள் சில்லு இறங்கியதில் தூக்கி வீசப்பட்டதில் இதே இடத்தைச் சேர்ந்த இரங்கநாதன் ரவிசங்கர் (வயது 46), அவரது மனைவியான ரவிசங்கர் ஜெயராணி (வயது 45), மகனான ரவிசங்கர் சாமிலன் (வயது 15) ஆகியோரும் மற்றொரு விபத்தில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்த கொடிகாமத்தைச் சேர்ந்த ப.பராசக்தி (வயது39)என்பவரும்காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் த.ஜெயராணி யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-207)

# போட்டிப் பரீட்சை

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் 22 வயது தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவராகவும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். அல்லது தொழிற்செயலாளரினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேறுபரீட்சை யில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுக்கிளை பெலவந்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ம-313)

# வீதியில் பெரிய குழி

கைதடி கோப்பாய்ப் பாலம் திருத்தப்பட்ட போதும் அந்த வீதியில் பெரும் குண்டும் குழிகளும் காணப்படுகின்றன.

வீதியின் நடுவே மதகு இரு இடத்தில் ஒரே நேரக்கு உடைந்துள்ளது.

இந்த வீதியால் கனரக வாகனங்கள் சென்றால் ஆபத்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். கவனிப்பார் இன்றி காணப்படும் இந்தவீதியால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்ளுகின்றனர். (ம- 288)


# ஏங்கித் தவிக்க விட்டு ஆண்டுகள் ஏழில்......



ஏற்றமாய்
30.10.1975

ஏமாற்றமாய்
17.01.2004

## அமரர் சின்னத்துரை ரஜனன்

திதி: ஏகாதசி (17.01.2011)

ஏற்றமாய் வாழ்ந்த எம்மை
ஏங்கித் தவிக்க விட்டு
ஆண்டுகள் ஏழில்
எழில் வதன ரஜனன் உந்தன்
எண்ணற்ற நினைவுகளுடன்
ஏகாந்தமாய் நாம் இங்கே.....

''லோகஸ்தான்''
பிரதான வீதி,
சுன்னாகம்.

பெற்றோர்: திரு.திருமதி லோகேஸ்வரி சின்னத்துரை,
சகோதரர்கள்: ரமணன் குடும்பம் (கனடா),
ரமணி குடும்பம் (பிரான்ஸ்),
ரஜனி குடும்பம் (கனடா)



## வீடு/காணி தேவை

கரவெட்டி, நெல்லியடி பிரதேசத்தில்
2-4 பரப்புக் காணியுடன்
வீடு/வெற்றுக் காணி தேவை.
தொடர்பு: 0714471722



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியையாகக்
கடமையாற்றும் திருமதி லோகநாயகி கங்காதரனின் மாமான்

**சின்னப்பு நாகரத்தினம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி.



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் முன்னாள் செயலாளரும் தற்போதைய
உப தலைவரும், சங்கானை கிளையைச் சேர்ந்த
வரதலக்ஸ்மி பேக்கரி, உரிமையாளருமாகிய
க. தவரஞ்சனின் மாமனார்

**இராமுபிள்ளை உலகநாதன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நிர்வாகத்தினரும், அங்கத்தவர்களும், பணியாளர்களும்,
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(இ-574922)



## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தநாயகி அருணாசலம்

(முன்பள்ளி முன்னாள் ஆசிரியை, (சாந்தி ரீச்சர்)



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தநாயகி அருணாசலம் கடந்த (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -சௌபாக்கியலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும், கார்த்திகேசு அருணாசலத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிதம்பரம் தம்பதியரின் மருமகளும், ஆதிநாராயண அம்மாவின் அருமைச் சகோதரியும், குமுதினி (HNDA - இத்தாலி), Dr.தயாளினி (சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை,யாழ். பல்கலைக் கழகம்), கருணாகரன் (Ph.D, U.K) ஆகியோரின் பாசமிகு தாயும் மோகனதாஸ் (மருந்தக கணக்காளர், இத்தாலி) Dr. திலீபன் (வைத்திய பொறுப்பதிகாரி, கிராமிய ஆயுர்வேத வைத்திய சாலை - பண்டத்தரிப்பு), தீபா (U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுகிர்தன் (மாணவன், பரியோவான், கல்லூரி), செந்தில்தாஸ் (இத்தாலி) சுவித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன், நவமணிதேவி மற்றும் உமாதேவி, கனகாம்பிகை, ஞானமுத்து ஆகியோரின் மைத்துனியும் செல்வசேகரத்தின் அன்புப் பெரிய தாயாரும், சிவகுமார் (U.K), சிவயோகன் (U.K) தயா நிதி (ஆசிரியை), இந்திராதேவி (U.K), ஆகியோரின் பாசமிகு அத்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (19-01-2011) புதன்கிழமை மு.ப. 10.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானியார் கோயிலடி
அராலி மத்தி,வட்டுக்கோட்டை.
T.P: 021 320 5568

தகவல்:
குடும்பத்தினர்.





## தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணி(த.தே.ம.மு)

*Tamil National People's Front(TNPF)*

### உள்ளூராட்சி சபைத் தேர்தல் - 2011
### வேட்பாளர்களுக்கான விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழர் தாயகப் பிரதேசங்கள் முழுவதிலும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற த.தே.ம.மு வின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு போட்டியிட விரும்புகின்ற தமிழ்த் தேசப் பற்றாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

யாழ் மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்க விரும்புவோர் கீழுள்ள முகவரியில் அமைந்துள்ள த.தே.ம.மு வின் தலைமை அலுவலகத்திலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு அண்மையில் உள்ள அலுவலகங்களில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் 20-01-2011 ற்கு முன்னர் நேரடியாகவோ, தபால் மூலமோ, தொலைநகல் மூலமோ அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

தொலைபேசி இல: 021-222-3739
குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

**இரண்டு தேசங்கள் ஒரு நாடு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

5



உலகிலுள்ள மற்றைய ஹக்கிங் விற்பன்னர்களுக்கும் யூலியனுக்குமிடையே ஒரு வித்தியாசம் உண்டு. அது சுயலாபத்துக்காக இந்தக் ஹக்கிங் வேலையில் யூலியன் ஈடுபடுவதில்லை என்பதுதான். இந்த வித்தியாசம்தான் யூலியன் அசாஞ்சேயின் இன்றைக்கு வரைக்குமான வெற்றிக்குத் துணையாக இருக்கின்றது. அதைவிட யூலியனிடமிருந்த இன்னொரு கெட்டித்தனம்தான் செய்கின்ற ஹக்கிங்கில் எந்தவொரு தடயத்தையும் எதிராளிக்கு விட்டு வைப்பதில்லை. இதனால்தான் யூலியன் மீது ஆதாரத்தோடு ஹக்கிங் தொடர்பான வழக்குகளைப் போடமுடியாமல் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றன.

அப்போது யூலியனுக்குப் பதினாறு வயது. உலகெங்கும் இன்ரர்நெற்றின் ஆட்சிதொடங்கி விட்டதால் , ஒவ்வொரு நாடும் தனது முக்கியமான செயற்பாடுகளை, நிறுவனங்களை, அமைப்புகளை இணையத்தினூடாக இலகுபடுத்தும் முயற்சிகளில் இறங்கின. அப்படியான ஒரு முயற்சியின் விளைவாக அவுஸ்திரேலியாவின் பொலிஸ் துறையின் சகல ஆவணங்களும் இணையத்துக்கு மாற்றப்பட்டன. பொலிஸாரின் சகல முக்கிய விடயங்களும் -உடனுக்குடன் - தரவேற்றம் செய்யப்பட்டன. இதனால் நீண்டகாலமாகத் தூசு படிந்து, தூங்கிக்கொண்டிருந்த பல வழக்குகள் மீளவும் அசுரவேகத்துடன் விசாரிக்கப்பட்டு , குற்றவளிகளுக்கான தண்டனையும் விரை வில் கிடைக்க வழி பிறந்தது. அத்துடன் ஒன்லைன் மூலமாகப் பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்கள்கள் மூலம் குற்றங்கள் நிகழ்ந்த இடங்களுக்குப் பொலிஸார் உடனடியாகவே விரைய முடிந்தது. (அவுஸ்திரேலியா என்றால் என்ன, இலங்கை என்றால் என்ன, எல்லா இடங்களிலும் குற்றங்கள் நடந்த பின்னர் தான் பொலிஸார் செல்வார்கள் போலும். சில வேளைகளில் அப்படித்தான் செல்ல வேண்டும் என விதி ஏதாவது இருக்கிறதோ தெரியவில்லை.)

இவ்வாறு இணையத்தின் உதவியுடன் அபரித வளர்ச்சியை அவுஸ்திரேலியப் பொலிஸ்துறை எட்டத் தொடங்கியது. வளர்ச்சிகள் வரவரத் திமிரும் கூடவே ஒட்டிக் கொள்வது இயல்புதானே. அந்தத் திமிரின் விளைவாக அவுஸ்திரேலியப் பொலிஸ் ஒரு அறிக்கையை வெளியிட்டிருந்தது. மறுநாள் அந்த அறிக்கை எல்லா ஊடகங்களிலும் முக்கியத்துவப்படுத்தப்பட்டிருந்தது. உலகின் முதன்மையான பொலிஸ் என்ற அங்கீகாரம் எமக்கு விரைவில் கிட்டிவிடும். இனி இந்த நாட்டில் மட்டுமல்ல உலகில் கூட ஒரு ஈ, எறும்பு அசைந் தாலும் அதை மோப்பம் பிடித்துவிடும். அந்தளவுக்கு தகவல் தொழிநுட்ப ரீதியிலான ஆச்சரியத்துவமான வல்லமையை நாம் அடைந்துள்ளோம். அவுஸ்திரேலியப் பொலிஸாருக்குச் சவால் விடுக்கும் எவரையும் மறுநொடியே லபக் எனப் பிடித்து விட எம்மால் முடியும்; எம்மால் மட்டுமே முடியும்

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

தலைக்கனம் நிறைந்த இந்த அறிக்கை யூலியனை உசுப்பேற்றிவிட்டது. அவுஸ்திரேலியப் பொலிஸின் இணையம் மீதான அசைக்க முடியாத நம்பிக்கைக்கும், அதன் விளைவாக உருவாகியிருக்கும் மமதைக்கும் உச்சந்தலையடியைக் கொடுக்க இளைஞனான யூலியன் தீர்மானித்தான். தன்னுடைய ஹக்கிங் வல்லமையைத் துணையாகக் கொண்டு காரியத்தில் குதித்தான். யூலியனின் விரல்கள் விசைப் பலகையில். சொடுக்க, அவுஸ்திரேலியப் பொலிஸின் பிரத்தியேக இணைய சேர்வர் எவ்வித எதிர்ப்புமின்றி அவன் காலடியில் வீழ்ந்த்தது. சேர்வருக்குள் நுழைந்து, தகவல்களைப் பார்ப்பதற்கு அண் டாகசம்! அபூகா கசம்! திறந் திடு சீசேம்! என்பது போன்ற மந்திரச் சொல்- பாஸ் வேர்ட்- கட்டாயம் தேவை. ஆனால் யூலியனின் அசாத் திய ஹக்கிங்குக்கு முன்னால் அதெல் லாம் தேவையற்ற ஒன்றாக மாறிப் போனது. எந்தெந்த பைல்களில் என் னென்ன ஆவணங்கள் இருக் கின்றன என அப்படியே கொப்பி பண்ணிக் கொண்டு, வெளியேறிவிட்டான்.

மறுநாள். அவுஸ்திரேலியப் பொலிஸ் தலைமைக் காரியாலயம். வழமைப் போல சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அச்சமய்த்தில் அவுஸ்திரேலியப் பொலிஸ் தலைமை அத்தியட்சகருக்கு ஒரு மின்னஞ்சல் வந்திருந்தது. அதைப் படித்த அத்தியட்சகர் மூர்ச்சையுற்று கீழே விழாததுதான் குறை.

தான் அவுஸ்திரேலியப் பொலிஸின் பிரத்தி யேக இணைய சேர்வருக்குள் நுழைந்து பிரதி யெடுத்தவற்றை அப்படியே தலைமை அத்தியட்சகருக்கு யூலியன் அனுப்பி வைத்திருந் தான். கூடவே ஒரு குறிப்பும். உங்கள் இணையத்தள பிரதான வழங்கிக்குள் நான் நுழைந்தது போன்று வேறு எவராவது சென்றிருந்தால் பெரும் விபரீதங்கள் நிகழ்ந்திருக்கும், எனக்கு அப்படிச்செய்யும் நோக்கமில்லை. உங்கள் பலவீனத் தைச் சுட்டிக்காட்டவே இவ்வாறு செய்யவேண்டியேற்பட்டது. இனியாவது உங்கள் வீண் தம்பட்டங்களை நிறுத்திக்கொள் ளுங்கள். உங்களுக்குத்தெரியாமல் ஒரு ஈ,எறும்பு கூட அசைய முடியாது என்றீர்கள். ஆனால் நான் உங்களின் உயிர் நாடிக்குள்- இணையத்தின் பிரதான பகுதிக்குள்- எவ்வித

ஒளண்யன்

தங்கு தடையுமின்றிச் சென்று வந்த பின்னரும் கூட அதை உங்களால் மோப்பம் பிடிக்கமுடியவில்லையே இவ்வாறு அந்தக்குறிப்பில் யூலியன் சொல்லியிருந்தான். அன்றிலிருந்து தம்பட்டம் செய்யும் தொழிலுக்கே ஒரு பெரிய கும்பிடுபோட்டது அவுஸ்திரேலியப் பொலிஸ்.

யூலியன் உட்புகுந்து சென்றமைக்கான தடயங்களை அவர்கள் தமது பிரதான வழங்கியின் பாதுகாப்புப் பொறிமுறைகள் வழியே தேடிப்பார்த்தனர். ஊகூம். ஒரு பிரயோசன முமில்லை. தலைகீழாக நின்றால்கூட யூலியனின் மீது இந்தக் ஹக்கிங்குக்காக வழக்குத்தொடர முடியாது என்பது அவர்களுக்குப் புரிந்தது. ஆனாலும் எத்தனை நாளைக்குத் தான் யூலியன் எமக்குத் தண்ணி காட்டமுடியும்.ஒருநாள் அகப்படத்தானே வேண்டும் எனப் பல்லை நறுமிக் கொண்டது அவுஸ்திரேலியப்பொலிஸ். அவர்களின் கனவும் ஒருநாள் பலித்தது. யூலியன் மாட்டுப்பட வேண்டிய சந்தர்ப்பமும் விரைவில் வந்தது.

*(திரைகள் இன்னும் திறக்கும்)*


## உத்தியோக பூர்வ முடிவுகள்

கப்றிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 584
திகதி 2011/01/15

சுப்பர் இலக்கம்: 14
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 28 30 43 44

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 36,020,104.80 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 14 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 324 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 648 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 16,419 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 9,499 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 236,436 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 37,926 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 10,505,100.00

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 36,513,101.60

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk


## கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் மரணம்

கிணற்றுக்குள் தவறி விழுந்த சிறுவன் மரணமானான். இந்தச் சம்பவம் முள்ளிவீதி, அரியாலையில் [illegible] காலை 8 மணியளவில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த என். ஜெரோமி (வயது-7) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவராவார். சடலம் யாழ். போதனா வைத் திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. யாழ். பொலிஸார் மரண விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம- 78)

## மருந்துப் பொருள் கையளிப்பு

தென்மராட்சி,ஜன.17

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

குழந்தைகளுக்கு வழங்கும் பரசிற்றமோல் மாத்திரைகள், நீரிழிவு நோயாளர்களுக்குப் பயன்படுத்தும் குளுக்கோமெற் ஸ்ரிப்ஸ் போன்றவற்றை வழங்கியுள்ளனர்.

இந்தப் பொருள்களுக்கு வைத்திய சாலையில் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து நோயாளர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-207)


## யாழ்.மாவட்ட மாட்டுவண்டிச் சவாரி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கான பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இடம்: சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயில் முன்றல்
காலம்: 19.01.2011 புதன்கிழமை
நேரம்: பி.ப 2.30 மணியளவில்

விடயம்

1. புதிய நிர்வாகம் தெரிவு செய்தல்
2. 2011ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர் தேர்வு
3. புதிய யாப்புத் தயாரித்தல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.சி.அசாக்குமாரன், தொ.பே.021 224 0824

(103352)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவு கிழக்கு மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு ஆசிரியராகக் கடமையாற்றி பல மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையச் செய்த ஆசிரியரான

திரு. குமாரசாமி செல்வகுமார்

அவர்கள் 2011 ஜனவரி முதல் தீவகக் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேன்மேலும் பல பதவிகளையும் பெற்று சேவைபுரிய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு. திருமதி குமுதினி பரமேஸ்வரன்,
திரு. திருமதி செல்வந்தி சந்திரகுமார்
(சகோதரிமார், மச்சான்மார்).
ஜேர்மனி.

(109370)



## பவளவிழா வாழ்த்து

புலவர் ம.பார்வதிநாதசிவம்



தேர்ந்த தமிழாலே தெள்ளிய சிந்தனை
சாந்தநல் சற்குணசீலனாய்- யார்க்குமுடன்
பார்த்திடும் மாத்திரத்தே பைந்தமிழ் தோற்றிடும்
பார்வதி நாதசிவம்

நினைத்தவுடனே நிறைவாய்க் கவிதை
புனைந்திடும் வல்ல கவிஞன்- தனைநாடிச்
சார்வதன் சான்றாய்த் தமிழ் தந்திடும்
பார்வதி நாதசிவம்

அகவை எழுபத்தைந் திற்கால் பதிக்கும்
தகவைத் தமிழ்த்தாய் மகவை- உ கவை
ஊன்றியே ஒண்டமிழ் ஓங்கிடப் பாமழைச்
சான்றிடும் பாவலனை வாழ்த்து

பாமரர்க்கும் பாவரங்கின் பாற்கவர்ச்சி பாய்ந்திடத்
தேமதுரத் தென்றலாய்த் தேசமெங்கும்- பாமழை
நாடித் தந்த பார்வதி நாத சிவம் புகழ்
பாடும் பவளவிழா வாழ்த்து

புரட்சிக் கவிஞர் பாரதி தாசர்
அரசின் அருகிருந்தன்பைப்- பருகியே
ஆர்த்தெழ நற்கவிதை ஆக்கிய பாமணி
பார்வதி நாத சிவம்.

நோர்வேயில் இருந்து சி.உமைபாலன்.

(109375)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஜனவரி 2011 திங்கட்கிழமை



அமெரிக்காவின் கென்னடி ஹோலில் நடந்த ரிச்சர்ட் ஹோல்புருக்கின் நினைவஞ்சலி கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ஒபாமா, வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், முன்னாள் ஜனாதிபதிபில் கிளிண்டன்.

# பாகிஸ்தானில் வன்முறை 13 பேர் சுட்டுக்கொலை

கராச்சி, ஜன. 17

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில்சுமார்ஒருகோடியே 60 இலட்சம் மக்கள் உள்ளனர்.

சமீபகாலமாக இங்கு தீவிரவாதம், அரசியல் ரீதியான வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அதன் மூலம் பலர் உயிர் பறிக்கப்பட்டு வருகிறது.

ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை அதன்கூட்டணி கட்சியான முத்தாகிதா குவாமி இயக்கம், அவாமி தேசிய கட்சி ஆகியவை வாபஸ் பெற்றன.

இதைத் தொடர்ந்து கராச்சியில் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறத் தொடங்கின. தினசரி கலவரங்களும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் நடைபெற்று வருகின்றன.

வெள்ளிக்கிழமை இரவு பாகிஸ்தானிலிருந்து ஒளிபரப்பாகும் ஜியோ தொலைக்காட்சியின் நிருபர் வாலிகான் பாபர் பணி முடிந்த பின் தனது காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

லியாகுவாதாபாத் அருகே வந்தபோது அவரது காரை ஒரு கும்பல் வழிமறித்தது. அவருடன் சிலர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அந்த நேரம் அவர்களில் சிலர் வாலிகான் மீது துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் அவர் அதே இடத்தில் இரத்த வெள்ளத்தில் பலியானார். இவர் சுட்டுக்கொல்லப்படுவதற்கு முன்னர் சரிபாபாத்பகுதியில் அவாமி தேசிய கட்சியின் மூத்த தலைவர்பஷீர்ஜானின்ஒருகும்பல் வழிமறித்து தாக்கியது.

இதில் பஷீர் ஜானும், அவரது கார் சாரதியும் காயத்துடன் உயிர் தப்பினர்.அவர்கள்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் அங்கு நடந்த வன்முறையில் அவாமி தேசிய கட்சி, முத்தாகிகுவாமிஇயக்கசுட்சிஆகியவற்றை சேர்ந்த தொண்டர்கள் சுமார் 12 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். (சி)

# நேட்டோ படைகளின் வாகனங்களுக்கு பாகிஸ்தானில் தீவைப்பு

இஸ்லாமாபாத், ஜன. 17

பாகிஸ்தானில் நேட்டோ படைகளின் வாகனங்களை தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டு எரித்தனர்.

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள நேட்டோ படையினருக்குத் தேவையான எரிபொருள்கள் பாகிஸ்தான் வழியாக கொண்டு செல்லப்படுகின்றன.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள தலிபான், அல்குவைதா தீவிரவாதிகள், கடந்த மூன்று ஆண்டுகளாக நேட்டோ படைக்குச் சொந்தமான வாகனங்களைத் தாக்கி தீவைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய பலுசிஸ்தான் மாகாணத்தில் முராத் ஜமாலி என்ற இடத்தில் நேட்டோ படைகளுக்காக 20 டேங்கர் லொறிகளில் எரிபொருள் கொண்டு செல்லப்பட்டது.

இந்த வாகனங்களின் சாரதிகள் சாப்பிடுவதற்காக அருகே உள்ள ஹோட்டலுக்குள் சென்றபோது, காரில் வந்த தீவிரவாதிகள் டேங்கர் லொறிகள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதில் டேங்கர் லொறிகள் அனைத்தும் எரிந்து சாம்பலாயின.

இந்தச்சம்பவத்தில் ஒரு லொறி சாரதி காயமடைந்துள்ளார். தீயை அணைக்க வந்த வாகனங்களையும் தீவிரவாதிகள் துப்பாக்கிமுனையில் மிரட்டி தடுத்துவிட்டனர்.

## பிலிப்பைன்ஸில் வெள்ளம்; 47 பேர் பலி; 8 பேர் காயம்

மணிலா, ஜன. 17

பிலிப்பைன்ஸில் கடந்த இரண்டு வாரங்களாக பெய்த பலத்த மழையால் 47 பேர் பலியாகியுள்ளனர். மேற்கத்திய நாடுகளில் பனிப் புயல் வீசிக்கொண்டிருக்கும் வேளையில் பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பலத்த மழை பெய்து கொண்டிருக்கிறது.

கடந்த இரண்டு வாரமாகப் பெய்யும் பலத்த மழையால் பிலிப்பைன்ஸின் பல மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், 18 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெள்ளம், நிலச்சரிவு ஆகியவற்றில் சிக்கி 47 பேர் பலியாகியுள்ளனர். எட்டு பேர் காயமடைந்துள்ளனர். (சி)

# ரஷ்யாவில் ஆங்கிலம் கட்டாயம்

லண்டன், ஜன. 17

நாட்டில் உயர்பதவி வகிப்பவர்கள் ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்வது கட்டாயம் என ரஷ்யா அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

தற்போது ரஷ்யாவில் புழக்கத்திலுள்ள ஆங்கிலமொழியின் உச்சரிப்பு மற்ற நாடுகளிலுள்ள ஆங்கில உச்சரிப்பிற்கு வேறுபட்டதாக உள்ளது. இதனால் பல்வேறு குழப்பங்கள் ஏற்படுகின்றன.

இதனை தவிர்க்கும் பொருட்டு உயர் பதவி வகிப்பவர்களுக்கும், புதிதாக பணிக்கு வருபவர்களுக்கும் கட்டாயம் ஆங்கில அறிவு இருக்கவேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2020ஆம் ஆண்டுகளுக்குள் உயர்பதவி வகிப்பவர்கள் குறைந்த பட்சம் வெளிநாட்டு மொழிகளில் ஒன்றேனும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று அதிரடி உத்தரவை பிறப்பித்து அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

## பிரேஸிலில் மண்சரிவு

பிரேஸிலின் ரியோடிஜெனிரோ நகர் அருகே மலைப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானோரின் எண்ணிக்கை 610 ஆக உயர்ந்துள்ளது என்று பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோவாபிரிபர்கோ பகுதியில் 274, டெரிசோபோலிஸ் 263, பெட்ரோபோலிஸ் பகுதியில் 55, சுமிடோரோ பகுதியில் 18 பேர் மரணமாகினர்.


# மரண அறிவித்தல்



## தம்பு நடேசு

அச்சுவேலி வடக்கு, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு, நெல்லியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு நடேசு (14.01.2011) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், உமாபதி (மகேஸ்வரி)யின் பாசமிகு கணவரும், கணேசலிங்கம் (சுவிஸ்), அகலிகை, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்), அருந்ததி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்தினி (சுவிஸ்), சிவனேஸ்வரி (பிரான்ஸ்), தர்மலிங்கம் (சுன்னாகம்), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அனுத்திகா, ஆரங்கன், பிரசாத், சேந்தன், கயினா, கோகிலன், மாத்திரன், சபீரன், கயித்தன், காவியா, நிலா, நிலவன், கயல், எழில் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
தொ.பே: 021 300 2960

(சி/574932)

தகவல்:
குடும்பத்தினர்
ச.தர்மலிங்கம் (மருமகன்).

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.12.2010 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சீனிவாசகம் துரைராசா

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (17.01.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள் ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

(109094)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## இராசையா கோபாலகிருஷ்ணன்

மாலிசந்தி, அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கோபாலகிருஷ்ணன் நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், நவமணியின் அன்புக் கணவரும் கண்ணதாசன் (வைஷ்ணவி நகைப் பூங்கா-நெல்லியடி), இராஜகுமார் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (சுவிஸ்), புருஷோத்தமன் (B.Com.S.P Acct), அமுதன் (B.A) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌசலா, மதிவதனியின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கோபாலகம்'
மாலிசந்தி, அல்வாய் தெற்கு
அல்வாய்.
T.P: 021 226 4582

(109385)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துனீசியாவின் சிறையில் திடீர் தீ விபத்து: 42 பேர் பலி!

துனீசியாவின் மொனாஸ்திர் சிறையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில், அங்கிருந்த 42 பேர் உயிரிழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. தெற்கு துனீசியாவிலிருந்து 160 கி.மீ தூரத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இனந்தெரியாத நபர் ஒருவர் குறித்த சிறைக்கு அருகிலுள்ள விடுதியிலிருந்த படுக்கைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் அங்கிருந்த 90 இற்கு மேற்பட்டோர் தம்மை காப்பாற்றிக் கொள்வதற்காக அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்துள்ளனர். சிலர் தீயில் அகப்பட்ட நபர்களை காப்பாற்ற முனைந்தபோது அவர்களும் தீயில் அகப்பட்டுக்கொண்டனர்.

மூச்சுத் திணறலுக்கு உட்பட்டு சிலர் அவதியுற்றனர். சிறைக் கதவுகளைத் திறந்துகொண்டு வெளியில் வர முனைந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறையிலேயே .42 பேர் உயிரிழக்கும் நிலை உருவாகியது. துனீசியாவில் அண்மைக்காலமாக அதிகரித்து வந்த கலவரங்களை அடுத்து அந்த நாட்டு ஜனாதிபதி பென் அலி, அங்கிருந்து வெளியேறி சவுதியில் தஞ்சமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

21 ஆம் நூற்றாண்டின் முதல் மக்கள் புரட்சியாக, துனீசியா மக்கள் புரட்சி வெடித்துள்ளது. இதேவேளை, அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட இளைஞர்கள் மீதும் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார் என்றும் இதன் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் இடம் பெற்றிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# இருகுழந்தைகளின் தந்தை பதவி நீக்கம்

பீஜிங், ஜன.17

சீனப் பேராசிரியர் ஒருவரின் மனைவி இரண்டாவது குழந்தை பெற்றதால் அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதையடுத்து அவர் நீதிமன்றத்தில் ஒரு குழந்தைக் கொள்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

சீன இளைஞர் பல்கலைக் கழகத்தில் அரசியல் பாடம் எடுக்கும் துணை பேராசிரியராக இருந்தவர் யாங் ஜிஜு.

அவரது மனைவி கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாவது குழந்தை பெற்றெடுத்தார். இந்த தகவல் தெரிய வந்ததும் அதிகாரிகள் அவரை கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதவி நீக்கம் செய்தனர்.

இதையடுத்து தற்போது யாங் சீன நீதிமன்றத்தில் ஒரு குழந்தை கொள்கையை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில் அவர் இந்த கொள்கையை முழுவதுமாக நீக்காவிட்டாலும், அதில் சில மாற்றங்களாவது கொண்டு வர வேண்டும் என்று கூறியுள்ளார்.

உலகளவில் சீனா, மக்கள் தொகையில் முதலிடத்தில் உள்ளது. மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவதால், சீன அரசு மக்கள் தொகையை குறைக்கும் பொருட்டு ஒரு குழந்தை கொள்கையை கொண்டு வந்தது. அதன்படி ஒரு தம்பதி ஒரு குழந்தை மட்டுமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதேவேளை, இரண்டாவது குழந்தைக்கு தந்தையாகியுள்ள யாங்கிற்கு குடும்ப கட்டுப்பாட்டுச் சபை 16 லட்சத்து 34 ஆயிரத்து 908 ரூபாவை அபராதமாக விதித்துள்ளது. (ம)

# விக்கிலீக்ஸின் தொழில்நுட்ப எதிரி சீனா -அசாஞ்சே



விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் தொழில்நுட்ப எதிரி சீனாதான், அமெரிக்கா அல்ல என அதன் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே கூறியுள்ளார்.

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தின் நிறுவுநரான அசாஞ்சே சுவீடனைச் சேர்ந்த இரு பெண்கள் கொடுத்த பாலியல் வல்லுறவுப் புகாரினால் சிக்கி இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் உள்ளார்.

இந்த நிலையில் தி ஸ்டேஸ்மேன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், விக்கிலீக்ஸின் தொழில்நுட்ப ரகசியங்களை இடைமறித்து சீனா தெரிந்து கொண்டு அதன் தகவல்களைத் திருடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

எனவே விக்கிலீக்ஸின் தொழில்நுட்ப எதிரி சீனாதான். அமெரிக்கா அல்ல. மேலும், இது குறித்து சீனா மீது உரிய முறையில் வழக்குத் தொடரப்படும் என்று அசாஞ்சே மேலும் தெரிவித்தார். (ம)

# விமானத்திலிருந்து வீழ்ந்து மரணம்

பாகிஸ்தானிலிருந்து துபாய் சென்ற சரக்கு விமானத்திலிருந்து தவறிக் கீழே விழுந்த நபர் பரிதாபமாகப் பலியானார்.

வெளிநாடுகளில் வேலை தேடுவதற்காக பாகிஸ்தானிலிருந்து பலர் கள்ளத்தனமாக விமானங்களில் பயணிப்பது அதிகரித்து வருகிறது. குறிப்பாக கிரீஸுக்கு செல்ல நினைப்பவர்கள் ஈரான், துருக்கி வழியாக கள்ளத்தனமாக நுழைகின்றனர். லாகூர் விமான நிலையத்திலிருந்து வியாழக்கிழமை துபாய்க்கு புறப்பட்ட சரக்கு விமானத்தில் கள்ளத்தனமாக ஒருவர் பயணித்துள்ளார். இவர் திடீரென நிலை தடுமாறி பறக்கும் விமானத்திலிருந்து கீழே விழுந்து பலியானார்.

# இத்தாலியப் பிரதமர் சட்டச் சிக்கலில்

றோம், ஜன.17

இரவு விடுதியில் நடனமாடும் 17 வயது இளம் பெண்ணுடன் உல்லாசமாக இருந்த இத்தாலி பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கோனியின் (வயது-74) செயல் குறித்து, பொலிஸ் துறை தீவிர விசாரணை நடத்தி வருகிறது.

மாஜிஸ்திரேட் முன்பும் இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தாலிப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மீது, பெண்களுடனான தொடர்பு, ஊழல் மற்றும் மோசடி தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த நிலையில், இரவு விடுதியில் நடனமாடும் ரூப ரூபாகுவோரி என்ற 17 வயது இளம்பெண், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருட்டு வழக்கில் சிறை சென்றார்.

பிரதமர் பெர்லுஸ்கோனி தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பெண்ணை விடுதலை செய்தார். இது குறித்து எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அவர், தான் செய்தது சரியே என்றும், அந்தப் பெண், எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் உறவினர் என்றும் பதிலளித்தார்.

அதிபர் வீட்டில் நடந்த நடன நிகழ்ச்சியில் இந்த ரூப என்ற இளம் பெண் பங்கேற்றதாகவும், அந்த இரவைக் கழித்த பின் அவருக்கு 7,000 யூரோ (இந்திய ரூபாயில் ரூ.3.5 லட்சம்) தந்ததாகவும் அப்பெண்ணே அளித்த பேட்டி விசாரணை, முக்கியத் துவம் பெறக் காரணமானது.



இதையடுத்து, தற்போது ரூபயுடனான உறவு குறித்து பெர்லுஸ்கோனியிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது. பெர்லுஸ்கோனி குறித்து ஏற்கனவே ஏராளமான புகார்கள் உள் ளன. ஆனால், அவர் தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிக்கும் பல புகார்கள் இத்தாலியில் புதுமை அல்ல. (ம)

# மூழ்கும் அமிலக் கப்பல்

பொன், ஜன. 17

ஜேர்மனியில் 2,400 தொன் எடைகொண்ட கந்தக அமிலம் கொண்ட ஜேர்மன் கப்பல் ஒன்று அந்த நாட்டின் ஆற்றுப் பகுதியில் கொஞ்சம் கொஞ்சமாக முழ்கிக் கொண்டிருப்பதால் அந்த நாட்டுக் கப்பற்படையினர் கப்பலை மீட்டு கரைக்குக் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஜேர்மனியில் வட கிழக்கு மாகாணமான சான் கட்கோர் பகுதியில் உள்ள மிகவும் ஆழமான ரெகினி நதி. இங்கு அரசுக்கு சொந்தமான வால்ட்ஹோப் என்ற சரக்குக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தது. இதில் 2,400 தொன் எடை கொண்ட கந்தக அமிலம் (சல்பர் திராவகம்) உள்ளது.

செக் குடியரசு நாட்டைச் சேர்ந்தவர் உட்பட 3 மூன்று பேர் பயணித்தனர். இந்தக் கப்பலில் ஏற்பட்ட திடீர் கசிவினால் மேலும் கப்பல் நகர்ந்து செல்ல முடியாமல் நிற்பதைப் பார்த்த கப்பற்பண்டயினர் விரைந்து வந்து சோதனையிட்டதில் கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கி வருவது தெரிய வந்தது.

உடனடியாக சிறப்பு கப்பற்படை அழைக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

மேலும் கந்தக அமிலம் ஆற்றில் கலந்தால் சுற்றுச் சூழல் மாசு ஏற்படும் நிலையும் காணப்படுகின்றது. (ம)

# அமெரிக்காவில் புதிய வகை வௌவால்கள்

வாஷிங்டன், ஜன.17

அமெரிக்காவின் வடமாகாணக் காடுகளில் புதியவகை வௌவால் இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அருகி வரும் உயிரினங்கள் தொடர்பாக ஆராய்ச்சி செய்துவரும் ஆய்வாளர்கள் காட்டுக்குள் 13 நாள்கள் தங்கியிருந்து இவ்வகை வௌவால்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

இவை, ரினோலொபஸ் பளெஸி என்ற விஞ்ஞானப் பெயர் கொண்ட வௌவால் இனத்தின் மற்றுமொரு பிரிவைச் சேர்ந்தவையாக இருக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையான வௌவால்களை ஒத்த இனம் மேற்கு அமெரிக்கக் காடுகளில் இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வடமாகாணக் காடுகளில் 27 வகையைச் சேர்ந்த 245 வௌவால் இனங்களை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். (ம)

# அந்தரங்க உறுப்பை எலி கடித்தது முன்னாள் கைதி வழக்குத் தாக்கல்

நியூயோர்க், ஜன.17

சிறைச்சாலையில் தங்கியிருந்த போது தனது அந்தரங்க உறுப்பை எலி கடித்ததால் அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப் போவதாக நியூயோர்க் நகரைச் சேர்ந்த முன்னாள் கைதியொருவர் தெரிவித்துள்ளார்.



தனது உறுப்பை எலி கடித்து விட்டதால் பெரும் எண்ணிகையி லான நோய்த் தடுப் பூசிகளை தான் ஏற்ற வேண்டி வந்ததாக பீற்றர் சொலமன் எனும் இந்தக் கைதி கூறியுள்ளார்.

குறித்த சிறை அறையில் எலி இருப்பது அதிகாரிகளுக்கு தெரியும் எனவும் தான் ஓர் கறுப்பினத்தவர் என்பதால் அந்தப் பகுதியை அதிகாரிகள் புறக்கணிபிட்டுள்ளார்.

50 வயதைக் கடந்த பீற்றர் சொலமன், வியட்நாம் யுத்தத்தில் பங்கு பற்றிய முன்னாள் இராணுவ வீரர் ஆவார்.

மனைவியை அச்சுறுத்திய குற்றச்சாட்டுக் காரணமாக 2007 ஆம் ஆண்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவருக்கு தீவிரமான காயங்கள் எதுவும் ஏற்பட்டதற்கான ஆதாரம் இல்லையென கூறும் நௌஸவ் பிராந்திய அரச அதிகாரிகளின் சட்டத்தரணிகள், இந்த வழக்கை [illegible] எனக் கூறியுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு பத்தரமுல்ல, வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் கடந்த 11.01.2011 இல் நடைபெற்ற சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவில் யாழ்.மாவட்டத்திலிருந்து சிறந்த சமூக சேவைக்காக தெரிவு செய்யப்பட்டு கௌரவ சிரேஷ்ட அமைச்சரினால்

"விஸ்வ கீர்த்தி"

கௌரவ விருதினைப்பெற்ற கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரும், சமாதான நீதிவானும், சமாதான நீதிவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளரும், தன்னலமற்ற சமூக சேவையாளருமாகிய

**திரு.ஜெ.சத்தியேந்திரன்** அவர்கள் ஆற்றிய சேவைக்கும் மேலும் சமூக சமய பணிகளுக்கும் தென்னை அபிவிருத்தி சேவைகளை மக்களுக்கு சிறப்பான முறையில் செய்தமைக்குப் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற்று நீடூழி காலம் அவரும் அவர்தம் குடும்பமும் வாழப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மட்டுவில் கிழக்கு, சரசாலை வடக்கு,
சரசாலை தெற்கு, கல்வயல்
வரணி - இடைக்குறிச்சி விவசாய சம்மேளனங்கள்.



## STUDY IN U.K. (no needs IELTS) AND CANADA

இறுதி சந்தர்ப்பம்

- Jan & Feb Intake.
- 3 நாள்களில் கல்லூரி அனுமதி.
- குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
- கல்வித் தகைமை G.C.E. O/L .
- பிரபலமான சட்டத்தரணிகள் ஆலோசனை.
- 100 சதவீதம் விசா உத்தரவாதம்.
- வங்கிக் கடன் வசதிகள்.
- 3 வாரங்களில் U.K.யில் கல்வி.

**SKILL MIGRATION IN AUSTRALIA**
(Doctor, Engineer, Accountant and IT Degree holder.)

தொடர்புக்கு:-

JAFFNA BRANCH
**82/12 A, CHETTY STREET, NALLUR.**
**Phone:- 0774454646 / 0777849853.**
**EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE**
NO. 22A, Frankfort place, Bambalapitiya, colombo - 04, Sri Lanka.
Tel: 011 2508443 / Mbo: 0777849853
Web: www.etbclanka.com / e-mail: etbc@etbclanka.com.


## சட்டமாணிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜன.17

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கைநெறி 2011/2012 ஆம் கல்வியாண்டுக்கான தெரிவுப் பரீட்சை பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ். பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த தெரிவுப் பரீட்சை நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது எனஅவர் தெரிவித்துள்ளார். (ற)

## பயிற்சி நெறி நாளை ஆரம்பம்

வடமராட்சி, ஜன.17

நீதி அமைச்சினால் மத்தியஸ்த சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கான பயிற்சி நெறி நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள மிலேனியம் விடுதியில் நடைபெறவுள்ளது.

(ற-253)


## தவறிவிட்டது

100/2 மவுண்ட்காமல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த எலியாஸ் அலோசியஸ் என்பவரது தேசிய அடையாள அட்டை (503223279 V), மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் என்பன 15.01.2011 சனிக்கிழமை யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

T.P. 021 2224514, 0778037557



## ஆவணம் தவறிவிட்டது

இல.28 றக்கா லேன் எனும் முகவரியில் வசிக்கும் தேவசகாயம் சாள்ஸ் அழகரட்ணம் என்பவருடைய ஏழாலை முகவரியுடைய தேசிய அடையாள அட்டையுடன் மற்றும் சில முக்கிய ஆவணங்களும் கச்சேரிக்கும் இலந்தைக்குளம் பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் 16.01.2011 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 021 2223405



## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூச பெருமஞ்சத் திருவிழா



காலம்: 20.01.2011 வியாழக்கிழமை
மாலை 6.45 மணிக்கு ஆறுமுகப் பெருமான் உலகப் பெருமஞ்சத்தில் வீதிவலம் வரும் காட்சி இடம்பெறும்.
முருகன் அடியவர்கள் அனைவரும் வந்து பெருமானின் இஷ்டசித்திகளைப் பெறுவீராக.

அடியவர்கள்.



## அறிவித்தல்

**கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி மயான அபிவிருத்திச் சபை**

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் புதிய நிர்வாகசபைத் தெரிவுக்காக (23.01.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது.
எனவே மயானத்தைப் பயன்படுத்தும் எல்லைக்கு உட்பட்டோரைப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் அழைக்கின்றோம்.

லயன் கே.எம்.இராஜேந்திரன் J.P.
முன்னாள் செயலாளர்,
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.



# வரவேற்கின்றோம்



மக்கள் வங்கியின் சேவை நிலையம்
துணுக்காய் வீதி, மல்லாவி என்னும்
முகவரியில்
இன்று (17.01.2011) திங்கட்கிழமை
முற்பகல் 11 மணிக்கு

**திரு.P.M.தர்மபிரிய அவர்கள்**
(மக்கள் வங்கி வடமத்திய வலய-
உதவிப் பொது முகாமையாளர்)
வைபவரீதியாகத் திறந்து வைப்பதையிட்டு
மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் இதன் பணி
சிறக்க எமது வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

வணிகர் மன்றம்,
மல்லாவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study in CANADA & LONDON**

**புலமைப் பரிசில்கள்**

» ACCA + 100% MBA (Scholarship)
In Canada Only $7000
Duration 4 years, Minimum payment required

» ACCA + 100% MBA (Scholarship)
From Highly Trusted College in London Only £5480
Duration 4 years

» MBA - Only £4900

» BA (Hons) Business Administration -
Only £4900 per year (Two year fast track)
From Highly Trusted college in London
(MBA, BA awarded by University of Wales)

Courses are available from £2950
from Highly Trusted & 'A' rated colleges in London

NO IELTS Required
VISA GURANTEED

**BIBM**

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A.De Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital, Wellawatta.)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk Hot Line No. 0771553323
www.bibm.lk

## மரண அறிவித்தல்கள்

### கிட்டிணன் சின்னத்துரை



பலாலி தெற்கு, வயாவிளான், ஆவளையைப் பிறப்பிடமாகவும் வயாவிளான் தெற்கு, திடற்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் சின்னத்துரை நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லமுத்துவின் அன்புக் கணவரும் மனோகரன், சிவமலர், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரன், மலர்விழி மற்றும் புஸ்பமலர், உதயகுமார், அருள்மொழி, விஜயகுமார், தயாளன் (பிரதேச விற்பனைப் பிரதிநிதி, மல்ரிலக்), பிறேமா ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் பிள்ளையான் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திடற்புலம்,
வயாவிளான் தெற்கு. (109253)

தகவல் :
குடும்பத்தினர்.

### சண்முகநாதன் சத்தியநாதன் (நாதன்)
(மல்லாவி பிள்ளையார் களஞ்சிய கணக்காளர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இல. 143ஏ, ஸ்கந்தபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சத்தியநாதன் (15.01.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பாக்கியலட்சுமியின் (தேவி) அன்புக் கணவரும் தவச்செல்வன், காலஞ்சென்ற தமிழ்க்குமரன் (மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியல் மாணவன்), சத்தியப்பிரியா (குமரன் புத்தக சாலை, ஸ்கந்தபுரம்), தவசீலன் (பரிசோதகர், தேசிய தொழில் நுட்பக் கல்லூரி, முல்லை மாவட்டம்), காலஞ்சென்ற சத்தியவேணி, சர்மிளா (ஆசிரியை, அக்கராயன் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாமதி, காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகிர்தா, டினேசா, கிசாந்தன், யசிந்தா, தமிழ்நிலா ஆகியோரின் அன்புப் பேரனும் பத்மநாதன் (உரும்பிராய்), அருமைநாதன் (ஆசிரியர், உரும்பிராய்), நவமணி (கோண்டாவில்), சிறிதாம்பாள் (ஆசிரியர், உரும்பிராய்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை இல. 143ஏ, ஸ்கந்தபுரம் இல்லத்தில் நடைபெற்று ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 143ஏ, ஸ்கந்தபுரம். (109398)

தகவல் :
குடும்பத்தினர்.

## ஆலயக்கிணற்றில் மூதாட்டியின் சடலம்

நீர்வேலி, அரசகேசரி பிள்ளையார் கோயில் கிணற்றில் இருந்து மூதாட்டி ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகம்மா (வயது 71) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராஜா சடலத்தைப் பார்வையிட்டு பிரதே பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-ஐ-313-72)

## பயிற்சி வகுப்பு பெப்.5 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.17

பருத்தித்துறைப் பிரதேச செயலகமும் விதாத வள நிலையமும் இணைந்து நடத்தும் ஈ.மெயில், இன்ரநெற் பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களுக்கான பதிவுகள் அனைத்தும் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பருத்தித்துறைப் பிரதேச செயலர் எஸ். வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ற-319)

## வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் பிராந்திய முகாமையாளர் கே.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தச் சான்றிதழ்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சிச் சாலையில் வைத்து நாளைமறுதினம் புதன்கிழமையும், எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை வழங்கப்படவுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

**பால் விநியோகம்**

கண்டுக்குளி, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, கச்சேரி, கொழும்புத்துறை, அரியாலை ஆகிய பிரதேசங்களுக்கு தினமும் காலை 7.00 மணிக்கு முன்னரும் மாலை 4.30 மணிக்கு முன்னரும் வீடுகளுக்கும் உணவகங்களுக்கும் தரமான பசுப்பால் விநியோகிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு: T.P. 0778694274

**வீடு விற்பனைக்கு**

ஊரெழு கிழக்கு, முதலாம் ஒழுங்கையில் 3¾ பரப்பு காணியுடன் 3 அறை, சமையல் அறை கோல், போட்டிக்கோ கொண்ட அழகிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: T.P. 0770293801, 0779906064

**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.

A/L 2013

பொருளியல்: V.ஞானவேல் B.B.A
தமிழ்: S.சிவா B.A. (Hons.)
அரசியல்: S.S.செந்தூரன் B.A. (Hons)(Pol.Sc.spl)
புவியியல்: S.ஜீன்சியா B.A. (Geo.Spl)
கிறிஸ்தவ நாகரீகம்: S.K.யூட் B.A.(Hons)
அளவை: S.றொகேஷியன் B.A.(Hons)(Phi.Spl)
ENGLISH : G.RANGIT

**படிவம்**

01. இலங்கை தொழில் நுட்பக் கல்விச் சேவையின் வகுப்பு III (விசேட பதவியணி) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2011
02. மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா (NDT) கற்கை நெறிக்கான அனுமதி 2011/2012
03. தேசிய கல்வி நிறுவகம் பாடசாலை முகாமைத்துவ பின் டிப்ளோமா 2011/2012

ஆகியவற்றுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

Poobathy Pathippakam
130, K. K. S. Road, Jaffna.

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்



### மாணிக்கம் சிவஞானசுந்தரம்
(ஓய்வுபெற்ற நில அளவையாளர், J.P.)

*ஊரின் நடுவமைந்த*
*ஊருணியாய் நீரிருந்து*
*உதவி தந்த அனைத்தையுமே*
*உள்ளுதற்கு சாலாது.*

*எங்கு நாம் இனிச் செல்வோம்?*
*என்ன தேவை என்றாலும்*
*'ஐயா' விடம் சென்றால்*
*அத்தனைக்கும் வழிகாட்டி,*
*அனுப்பிவைப்பார் என்றிருந்தோம்.*

*தாயிழந்த கன்றாய் கதறியழுதபடி*
*அறியாத ஊருக்கு*
*அனுப்பி வைப்போமோ ? - மீண்டொருக்கால்*
*எம்மிடம் வாரீரோ என்றேங்குகிறோம்.*

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் ஆறுதலுக்காகவும் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

ஊர் மக்கள்,
இடைக்காடு.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை உமாபதி
(02ஆம் வட்டாரம், மண்டைதீவு)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை உமாபதி நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் கணபதிப்பிள்ளை -யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பலதாவின் பாசமிகு கணவரும் கல்யாணி (சுவிஸ்), சசிதரா (யா/நவக்கிரி அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் இளங்கோவின் (சுவிஸ்) அருமை மாமனாரும் காலஞ்சென்ற உலகேஸ்வரி, விஜயலெட்சுமி (கனடா), காந்தமலர் (கனடா), காலஞ்சென்ற கிஸ்ணபிள்ளை மற்றும் நடனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் காலஞ்சென்ற அருளானந்தம், தருமலிங்கம் (கனடா), விநாயகரெத்தினம் (கனடா), சுந்தரலிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, விஜயலெட்சுமி, அரங்கநாய்கி ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிரா (சுவிஸ்), அக்சயா (சுவிஸ்), அஸ்வர்யா (சுவிஸ்) ஆகியோரின் பிரியமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (109390)

தகவல் :
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
17 . 03 . 1928



ஆண்டவன் அடியில்
18 . 12 . 2010

### திருமதி பொன்னுத்துரை பாக்கியம் (அம்மம்மா)

கடந்த 18.12.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (தியாகி அறக்கொடை நிறுவனம்) இடம்பெறும் மதிய போசன நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

93, கோயில் வீதி,
(கைலாசப்பிள்ளையார் கோயிலடி),
நல்லூர், யாழ்ப்பாணம். (109397)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

வலி.வடக்கு, ஜன.17

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி இனிங்சினால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மாகாஜனாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய மாகாஜனாக் கல்லூரி 31.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன் 14, ஜெயபிரணவன் 11 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 27 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இராகுலன் 6.5 ஓவர்களில் 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 4 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ஜனுதாஸ் 8 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கார்த்திக் 7 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், சுஜிதரன் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 68.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றது.

ஆதித்தன் 3 ஆறுகள் 3 நான்குகளுடன் 64, பங்குஜன் 3 நான்குகளுடன் 51, ஜனுதாஸ் 46, உத்தமகுமாரன் 17, சங்கீத் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த ஜனந்தன் 9.1 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 18 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ரி.டிலக்சன் 10 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மதுசன், அஜித், எஸ்.டிலக்சன் முறையே 18, 34, 68 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி 45 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

ஜனந்தன் 27, கபிலன் 16, வைகுந்தன் 13, கோகுலன் 12, டிலக்சன் 11 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜனுதாஸ் 16 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 8 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், உத்தமகுமரன், சாம்பவன் முறையே 3, 13 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி னார்கள். (ஐ-86-23)

# தேசியமட்ட மேசைப்பந்தாட்டம் மார்ச்சில் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஜன.17

அகில இலங்கை ரீதியிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி எதிர் வரும் பங்குனி மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர் ஜெ.மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:-

35 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இந்த போட்டியில் பங்குகொள்ள முடியும். இந்த போட்டியில் பங்கு கொள்வதற்காக தேசியமட்டப் போட்டிகளில் பங்குகொண்ட 10 மேற்பட்ட வீர, வீரங்கனைகள் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர் - என்றார். (23)

# புனே அணியில் கம்ரான்

ஐ.பி.எல் தொடரில், இளம் இந்திய வேகப்பந்துவீச்சாளர் கம்ரான் கான், புனே வாரியர்ஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான வீரர்களின் ஏலம் பெங்களூரில் நடந்தது. இதில் சில முன்னணி வீரர்களை ஒவ்வொரு அணிகளும் தேர்வு செய்தன. தற்போது ரஞ்சி உள்ளிட்ட உள்ளூர் தொடர்களில் மட்டும் விளையாடி வரும் வீரர்களை, சம்பள ஒப்பந்த அடிப்படையில் ஒவ்வொரு அணிகளும் தேர்வு செய்து வருகின்றன. இதில் கடந்த 2009இல் நடந்த 2ஆவது ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தான் ரோயல் அணிக்காக விளையாடிய இளம் வேகப்பந்துவீச்சாளர் கம்ரான் கானை, இம்முறை புனே வாரியர்ஸ் அணி ஒப்பந்தம் செய்துள்ளது. கடந்த 2009இல் இவர், முதல் தர போட்டியில் விளையாடிய அனுபவம் இல்லாமலேயே, ஐ.பி.எல் தொடரில் விளையாட தேர்வு செய்யப்பட்டார். கடந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல் தொடரில் மூன்று போட்டியில் மட்டுமே விளையாடிய இவர், முழங்கால் காயம் காரணமாக பாதியில் வெளியேறினார். (த)

## வெற்றி ஓட்டம்...



வெற்றிப் பயணம்: யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற கிராமங்களை குறுக்கறுத்து ஓடும் போட்டியின் ஆண்கள் பிரிவில் முதலாமிடம் பெற்ற வீரன் எல்லைக்கோட்டைத் தாண்டுகிறார். (86)

## வீரம் செறிந்தவர்கள்...



தொடரட்டும்: வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் கடந்த டிசெம்பர் மாதம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் ஒன்றையர் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்ற பிரதுஷாவுக்கு மேசைப் பந்தாட்டச் சம்மேளன செயலாளர் சந்தன பெரேரா சன்றிதழ் வழங்குகின்றார். (23)

# பிரதேச செயலகங்களுக்கு இடையில் நவாலியில் குறுக்கறுத்தோடும் போட்டி

வலி.வடக்கு, ஜன.17

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணிகளுக்கு இடையே நேற்று காலை 8.30 மணியளவில் இடம் பெற்ற கிராமங்களை குறுக்கறுத்தோடும் போட்டி நவாலி மகாவித்தியால முன்றலில் இருந்து ஆரம்பமாகியது.

ஆண்களுக்கான 12 கிலோ மீற்றர் தூரமும் பெண்களுக்கு எட்டுக் கிலோ மீற்றர் தூரமும் இப் போட்டிகளில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை மருங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த ரவி ரஜீகரன் பெற்றுக் கொண்டார்.

சிவரூபிகாந்தன் ஞானேஸ்வரன் (நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு), மாயான் தினே (வேலனை பிரதேச செயலகம்), சதாசிவம் விஜயகுமார் (சங்கானை பிரதேச செயலகம்), செல்வரெட்ணம் ஜெனகன் (வேலனை பிரதேச செயலகம்), செல்வரெட்ணம் ஜெயந்தன் (வேலனை பிரதேச செயலகம்), ஜெகநாதன் வியாசன் (நல்லூர் பிரதேச செயலகம்), சிவலிங்க மூர்த்தி கோகுலராஜ் (உடுவில் பிரதேச செயலகம்), கதிர்காம சோதி அமலன் (உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோர் அடுத்த இடங்களை வென்றனர்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடை பெற்ற கிராமங்களை குறுக்கறுத்தோடும் போட்டியில் வெற்றி பெற்றவாகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் நேற்று பகல் 9.45 மணியளவில் நவாலி மகா வித்தியாலய மண்டபத்தில் யாழ் மாவட்ட விளையாட்டு அலுவலர் திருமதி ஜே.எப.எ.ரூபசிங்கம் தலைமையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா.வசந்தகுமார் கலந்து கொண்டார்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி, நவாலி படை முகாமின் பொறுப்பதி காரி, கிராம அலுவலாளரான நித்தியானந்தன், தனபாலரத்தினம், நிசாந்தன் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்

வெற்றிபெற்றவாகளுக்கான பரிசில்கள் பிரதம விருந்தினர் மற்றும் படைத்தரப்பினராலும் வழங்கி வீர வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டார்கள். (ஐ-86)

# கரம் பயிற்சி முகாம் பெப்ரவரியில்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். மாவட்ட கரம் வீர, வீரங்கனைகளுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் அடுத்த மாதம் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்த இரு நாள் பயிற்சி முகாமில் சர்வதேச கரம் சம்மேளனத்தின் உப தலைவர் லன்லி மத்தயஸ் கலந்து கொள்ளவுள்ளார் என ஏற்பாட்டாளர் ஜெ.மோகன் தெரிவித்துள்ளார். (ஐ-23)

# இன்றைய ஆட்டம்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9 மணிக்கு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதவுள்ளன. (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 356; பதிலுக்குத் துப்பெடுத்தாடும் பாகிஸ்தான் 134/2



வெலிங்டன், ஜன. 17

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி, முதல் இன்னிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 356 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, நேற்று ஆட்ட நேரம் முடியும்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்று சிறப்பான தளம் அமைத்துக் கொண்டுள்ளது.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றுவருகிறது.

முன்னர் நடந்து முடிந்த முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரண்டாவது ஆட்டம் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 246 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸை ஆடிய நியூஸிலாந்து அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 356 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் வெற்றோரி (110), றெய்லர் (78), ஜங் (57) ஆகியோர் சிறப்பாக ஆடி அதிகளவான ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்துவீச்சில், உமர் குல் 4 விக்கெட்டுகளையும், தன்வீர் அஹமட் 3 விக்கெட்டுகளையும், அப்துல் ரஹ்மான் 2 விக்கெட்டுகளையும், ரியாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, ஆரம்பத்தில் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. ஆரம்ப வீரரான மொஹமட் ஹபீஸ் (1) வந்த வேகத்திலேயே 'பெவிலியன்' திரும்பினார். எனினும், பின்னர் வந்த அஷார் அலி, மறுமுனையில் நின்ற தௌபீக் உமருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

நிதானமாக நின்று ஆடிக்கொண்டிருந்த உமர், 70 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து நேற்றைய ஆட்டமும் முடிவுக்கு வந்தது.

நேற்று ஆட்ட நேரம் முடியும்போது பாகிஸ்தான் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 134 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அஷார் அலி 62 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

நியூஸிலாந்த அணி சார்பாக பந்துவீச்சில், சௌத்தீ, வெற்றோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்றைய நிலவரப்படி பாகிஸ்தான் அணி, 222 ஓட்டங்களால் பின்னிலை வகிக்கிறது.

இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

## எஞ்சிய ஆட்டங்களில் சச்சின் இல்லை

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது காயமடைந்த இந்திய நட்சத்திர வீரரான சச்சின் டெண்டுல்கர், அடுத்த போட்டிக்ளிலிருந்து விலகியுள்ளார்.

இது குறித்து அணித்தலைவர் டோனி கூறியவை வருமாறு:-



சச்சினுக்குக் காயம் ஏற்பட்டுள்ளமையால் அவரது இடத்தை நிரப்ப, இந்தியாவிலிருந்து இன்னொரு துடுப்பாட்ட வீரர் வரவேண்டுமென்றால் விசா எடுக்கவே 3 நாட்களாகி விடும். எனவே, அவர் வரும்போது ஒரேயொரு போட்டி மட்டுமே மீதமிருக்கும். இதனால் விஜயுடன் யார் களமிறங்குவார் என்பது குறித்து குழப்பமாகவே உள்ளது.

அதேபோல் உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கும்போது வீரர்களின் ஆட்டத்திறனை விட அவர்களின் உடல் தகுதிதான் முக்கியம். உலகக் கிண்ணம் ஒரு பெரிய விடயம். அதே வேளை, இந்தத் தொடரும் முக்கியமானது. -என்றார்.

## எதியோப்பியர் முதலாமிடம்



மும்பை, ஜன. 17

மும்பையில் நேற்று நடைபெற்ற 42 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டியில் எதியோப்பிய வீரரான கிறிமா அசிவா முதலாவது இடத்தைப் பிடித்தார்.

இவர் 2 மணி 9 நிமிடங்கள் 54 செக்கன்களில் ஓட்ட தூரத்தை ஓடி முடித்துள்ளார். இது இந்தப் போட்டியில் நிகழ்த்தப்பட்ட புதிய சாதனையாகவும் பதிவாகியுள்ளது.

வருடம் தோறும் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இம்முறை 38 ஆயிரம் வீரர்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# வோட்ஷனின் அதிரடி கைகொடுக்க இங்கிலாந்தை துரத்தி அடித்தது ஆஸி.!

மெல்பேர்ண், ஜன. 17

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், வோட்ஷனின் அதிரடி கைகொடுக்க இங்கிலாந்து விதித்த வெற்றியிலக்கைத் துரத்திய ஆஸ்திரேலிய அணி, 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, 7 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடிவருகிறது.

இதன் முதலாவது போட்டி மெல்பேர்ணில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமைந்தது.

ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய ஸ்டிரஸ்-டேவியஸ் ஜோடி பலமான அடித்தளம் அமைத்துக்கொடுத்தது.

டேவியஸ் 42 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த டிராட் (6) ஏமாற்றிச் சென்றார்.

பின்னர் வந்த பீற்றர்சன் நிலைத்து நின்று ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். மறுமுனையில் நின்ற ஸ்டிரஸ் 63 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து வந்த வீரர்களுள் பெல் (23), பிரெஸ்னன் (28) ஆகியோர் ஓரளவு சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். பீற்றர்சன் 78 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி, 49.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 294 ஓட்டங்களைக் குவித்தது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில், லீ, ஹஸி, ஜோன்ஷன், ஸ்மித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், போலிஞ்சர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 295 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, வலுவான ஆரம்பத்தைக் கண்டது.

களமிறங்கியது முதல் ஆரம்ப வீரரான வோட்ஷன் அதிரடியைக்காட்டினார். மறுமுனையில் ஆடிய ஹெடின் தனது பங்குக்கு 39 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது அணி 110 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

அவரைத் தொடர்ந்து வந்த கிளார்க் (36), ஸ்மித் (5), ஹஸி (21) ஆகியோர் தம்மாலான பங்களிப்பை வழங்கிச் சென்றனர்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சரிந்தாலும் மறுமுனையில் நின்ற வோட்ஷன் தனது அதிரடியைக் காட்டிக்கொண்டே இருந்தார். இவர் 110 பந்துகளில் சதமடித்தார்.

இறுதியில் ஆஸ்திரேலிய அணி, 49.1 ஓவரில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றது.

இதனடிப்படையில் ஆஸ்திரேலிய அணி, 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

வோட்ஷன் 161 ஓட்டங்களுடனும், வைட் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், பிரெஸ்னன் 2 விக்கெட்டுகளையும், ஷாக்லட், ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ஆஸ்திரேலிய வீரரான வோட்ஷன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் ஆஸ்திரேலிய அணி, 7 போட்டிகளைக் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.


## யூசுப் பதானுக்கு திருமணம்

இந்தியக் கிரிக்கெட் வீரரான யூசுப் பதானுக்கு விரைவில் திருமணம் நடக்கவுள்ளது என அவரது சகோதரரான இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

விரைவில் இந்திய அணியில் இடம்பிடிக்க வேண்டும் என்பதுதான் இப்போதைக்கு என் முன்னால் உள்ள ஒரே லட்சியம். மற்றவை எல்லாம் பின்னர்தான். அதன்பின்னர், நேரம் வரும்போது எனது திருமணம் நடக்கும். அதற்கு முன்பாக எனது சகோதரர் யூசுப் பதானின் திருமணம் நடக்கவுள்ளது. இதற்காக தற்போது மணப்பெண் தேட ஆரம்பித்திருக்கிறோம். விரைவில் அவரது திருமணம் நடக்கும். - இவ்வாறு இர்பான் பதான் கூறினார்.

## ஆஸ்திரேலிய டெனிஸ் தொடர் இன்று ஆரம்பம்!



மெல்பேர்ண், ஜன. 17

டென்னிஸ் போட்டிகளின் மிகப் பெரிய தொடர்களில் ஒன்றான கிரண்ஸ்லாம் ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் இன்று மெல்பேர்ண் நகரில் ஆரம்பமாகிறது.

இப்போட்டித் தொடர் இன்று (17ஆம் திகதி) முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சுமார் 275 கோடி ரூபா பரிசுத்தொகைக்கான இந்தப் போட்டித் தொடரில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு தலா 25 கோடி ரூபா வீதம் பரிசாகக் கிடைக்கும்.

இத்தொடருக்குரிய போட்டி அட்டவணை நேற்று முடிவு செய்யப்பட்டது.

இதன்படி ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீரரான [illegible] பிரேஸிலின் மார்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் கடமைபுரியும்

### அந்தோனி வேதநாயகம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அவசர சிகிச்சைப் பிரிவு (E.U),**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

**வைத்தியர்கள்,**
**தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும்**
**சிற்றூழியர்கள்.**

## கண்ணீர் அஞ்சலி



### இராசையா கோபாலகிருஷ்ணன்

மாலி சந்தி, அல்வாய் தெற்கைச் சேர்ந்த இராசையா கோபால கிருஷ்ணன் நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

**ஊழியர்கள்,**
**வைஷ்ணவி நகைப் பூங்கா.**

**நெல்லியடி.**

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சித்தர் கணேசு



(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)

எமது வங்கியின் சக உத்தியோகத்தர் திருமதி பாமினி சாந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தை இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இலங்கை வங்கி,**
**திருநெல்வேலி.**

பிரிவால் துயருறும்,
**முகாமையாளரும்,**
**ஊழியர்களும்.**

## கண்ணீர் அஞ்சலி



மல்லாவி, பிள்ளையார் ஸ்ரோர்ஸ் ஸ்தாபனத்தில் பல வருடங்கள் கணக்காளராகக் கடமையாற்றிய

### சண்முகநாதன் சத்தியநாதன்

(நாதன் ஐயா)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்.**
**மல்லாவி.**

**உரிமையாளரும், ஊழியர்களும்.**

## மரண அறிவித்தல்கள்

### கதிரிப்பிள்ளை திருநாவுக்கரசு

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மந்துவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை திருநாவுக்கரசு நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரிப்பிள்ளை – பூபாத்தபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் பறுவதபத்தினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திர மோகன் மற்றும் சந்திரகலா, சந்திரலீலா, சந்திரலைலா ஆகியோரின் தந்தையும் கந்தசாமி, ஜெயக்குமார், ரங்கன் ஆகியோரின் மாமனும் துஜிதா, அஜிந்தா, கோபிகிருஷ்ணா, பவானந்தன், அஸ்மிதா, கஜேந்தினி, கஜேந்திரன், கஜேந்திகா, கஜவதனா, கஜவதனி, அபர்ணன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் புனிதவதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 11 மணியளவில் இலுவன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மந்துவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### சின்னத்தம்பி தில்லையம்பலம்

நீமசிட்டி, கோப்பாய் மத்தி, கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தில்லையம்பலம் நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் சின்னத்தம்பி – தங்கம் தம்பதியாரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக்கணவரும் உமாதேவி (ஆசிரியை, வவுனியா, மஹாரம்பைக்குளம்), பாமதேவன், மகேஸ்வரன், காலஞ்சென்றவர்களான மகாதேவன், லதீஸ்வரன் மற்றும் சுசிலாதேவி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், வலி.கிழக்குப் பிரதேச சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவலிங்கரத்தினம் (தபாலதிபர், மாங்குளம்), செல்வக்குமார் (ஊடகவியலாளர்) ஆகியோரின் மாமனும் பௌசிகா, மயூரிக்கா, பிறைவாணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிளவில் உரும்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி.**
**கோப்பாய்.**

**தகவல்:**
**பாமதேவன்**
**(அப்பன் - மகன்).**

## முகவர்களின் பெயர்களை இன்றும் சமர்ப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.17

கட்சிகளின் செயலாளர்களினால் நியமனப் பத்திரம் தாக்கல் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அவருக்குப் பதிலாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் பெயர்களை தேர்தல் திணைக்களத்தில் இன்று திங்கட்கிழமை கையளிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கையளிப்பதற்கான இறுதித் தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைந்த போதிலும் முகவர்களின் பெயர்களை இன்று கையளிக்கும் பட்சத்திலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விடுமுறைதினம். நேற்றையதினம் ஞாயிற்றுக்கிழமை. ஆகையால் தபால் சேவையில் தாமதங்கள் ஏற்படும். அதன் காரணமாகவே இன்று அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் பெயர்களைச் சமர்ப்பித்தால் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்றார் ஆணையாளர். (ஒ-15)

## எரிபொருள் விலை மேலும் உயரலாம்?

கொழும்பு, ஜன.17

உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 அமெரிக்க டொலர்கள் வரையில் உயர்ந்துள்ளதன் காரணமாக எரிபொருள்களின் விலை மட்டங்கள் அதிகரிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாகப் பெற்றோலிய வள அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:

தற்போது நிலவும் எரிபொருள் விலை மட்டங்கள் உயர்வதைத் தடுக்கும் வகையில் தமது அமைச்சு முயற்சித்து வருகிறது என்றும் எனினும் அது சாத்தியப்படும் என்பதில் பல சிரமங்கள் காணப்படுகின்றன என்றும் கூறினார்.

கடந்த 2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் இம்முறையே உலக சந்தையில் எரிபொருள் விலைகள் உச்சமடைந்துள்ளதாகவும் அப்பேச்சாளர் குறிப்பிட்டார். (ஒ-22)

## பிராமண சமாசத்தின் அங்குரார்ப்பண விழா

கெருடாவில், ஜன.17

வடமராட்சி இந்து பிராமண சமாசத்தின் வருடாந்த அங்குரார்ப்பண விழா வெகுவிமரிசையாக நடைபெற இருப்பதாக சமாசத்தின் அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-253)

## ஊரிக்காட்டில் கரையொதுங்கிய இந்தியரின் சடலம்?

யாழ்ப்பாணம், ஜன.17

வல்வெட்டித்துறை, ஊரிக்காடு இராணுவ முகாமுக்குப் பின்புறமாகவுள்ள கடற்கரையில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கிய இந்தியர் ஒருவரின் சடலம் குறித்து இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சடலத்தின் பல இடங்களிலும் மஞ்சம் குத்தப்பட்ட அடையாளம் காணப்படுவதால் இந்தியர் ஒருவரின் சடலமாகவே இருக்கலாம் எனக் கருதி, இது தொடர்பாக இந்தியத் தூதரகத்துக்கு அறிவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ-ஐ)

## வேலை வாய்ப்பு

★எழுதுநர், ★புத்தகம் கட்டுநர்
★விற்பனையாளர்
தேவை. நேரில் வரவும்.

... 021 222 7442

உ குருமயம்

ஈழத்து காசி லிங்கேஸ்வரப் பெருமான் அருள் ஞானமிகு

## மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

ஸ்ரீ சச்சிதானந்தா ஆசிரமம் - கைதடி

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் (தை - புநர்பூசம்)
தவத்திரு ஸ்ரீ திருப்புகழ் சுவாமிகள் (தை - ரோகிணி)
தவத்திரு சுவாமி செல்லம்மா மாதாஜி (தை - கார்த்திகை)

### குருபூசை

இடம்: அருள்ஞானமிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

காலம்: 19.01.2011 புதன்கிழமை காலை 9 மணி

காலை 9 மணிக்கு அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| திருமுறை ஓதுதல் : | திரு சு.ஜெயவிக்கினேஸ்வரன் |
| வரவேற்புரை : | திரு சு.செல்வராசா (G.S.) |
| தலைவர் : | திரு இ.குழந்தைவடிவேலு (J.P) |
| பிரதம விருந்தினர்: | உயர்திரு அ.பிறேம்சங்கர் (மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்) |
| சிறப்பு விருந்தினர் : | உயர்திரு ச.சந்திரகுமார் (முகாமையாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி) |
| "திருப்புகழ்" சுவாமிகள் : | வைத்திய கலாநிதி வ.சின்னப்பு (ஆனந்தயோதி வைத்தியசாலை, சாவகச்சேரி) |
| "ஸ்ரீ சச்சிதானந்த" சுவாமிகள் : | வைத்திய கலாநிதி K.T.S சபாநாதன் (சாக்கோ வைத்தியசாலை, யாழ்ப்பாணம்). |
| "சுவாமி செல்லம்மா" மாதாஜி: | திரு க.பார்த்தீபன் |
| நன்றியுரை : | திரு பொ.கந்தசாமி |

**பகல் 1 மணிக்கு அன்னதானம் நடைபெறும்.**

மாணவர் கவனத்துக்கு:
மூன்று ஞானிகள் பெருமைகள் இங்கு பேசப்படும். அதனூடாக வைத்திய கலாநிதி K.T.S சபாநாதன் அவர்கள் கேள்விகள் கேட்டுப் பிரதம விருந்தினரால் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

**அனைவரையும் கலந்து குருவருள் ஊடாக திருவருள் பெருமையை உணர்ந்து ஆனந்தப் பெருவாழ்வு வாழ அன்பாக அழைக்கின்றோம்**

**திரு குழந்தைவடிவேலு (J.P.)**
**தலைவர்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கெங்காதரன் கணேசலிங்கம்

திதி: திரயோதசி (17.01.2011)

அன்னை மடியில்
16.03.1967

ஆண்டவன் அடியில்
10.02.2006

தெய்வமாகி உங்கள் அன்பு நினைவு மட்டும்
எம்மனதை விட்டு அகலவில்லையே
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன அப்பா
உங்கள் அன்பைப் போல வருமா?
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் நித்தமும்
உங்கள் நினைவுகள் நிழலென
எங்களுடன் தொடர்ந்து வரும்.

**344. கே.கே.எஸ்.வீதி**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் சுந்தரராஜன்



மூள்ளானை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் தம்மளை, அளவெட்டி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சுந்தரராஜன் நேற்று (16.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் – ஆச்சிமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா தம்பதியரின் மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் சுதர்ஷனின் (வர்த்தகர்) தந்தையும் மகாலட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியை) சகோதரனும் அபிராமியின் (வலி.தெற்குப் பிரதேச சபை, சுன்னாகம்) மாமனும் கார்த்திகேசு சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் கணேசதாஸ் (கிராம அலுவலர், ஜே/215, அளவெட்டி வடக்கு), ஜெகசோதி (இத்தாலி), ஸ்ரீதரன் (கனடா), ஜெயரூபி (சமுர்த்தி உத்தியோகத்தர், கட்டுவன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தம்மளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தம்மளை.**
**அளவெட்டி மேற்கு.**
தொ.பே.:0213213492. 0750414028

**தகவல்:**
**சுதர்ஷன்**
**(மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு அபிவிருத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் 232 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கேரதீவு-சங்குப்பிட்டிப் பாலத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று திறந்துவைத்து தமிழில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் சங்குப்பிட்டியில் வந்திறங்கிய ஜனாதிபதி பாலத் திறப்புவிழா மேடைக்கு மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்பட்டார். பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வரவேற்புரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் சுமார் 10 நிமிடம் உரையாற்றினார்.

ஜனாதிபதி தொடர்ந்து கூறியவை வருமாறு:-

உங்கள் பகுதிக்கு நேரடியாக வந்து உங்களை சந்தித்திருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய நாள் ஒரு சந்தோஷமான நாள். உங்கள் நீண்டகால கனவுகள் நிறைவேறியுள்ள புனிதமான நாளாகும்.

இந்த பாலத்தைப் புனரமைக்க எத்தனை பேர் முயற்சித்தார்கள். அடிக்கல்லையும் நட்டார்கள். ஆனால், அது நடக்கவில்லை. நாங்கள் ஏதாவது ஒன்றைச் சொன்னால் அதனை செய்தே முடிப்போம்.

அரசியல்வாதிகள் பலர் வாக்குறுதிகளை மட்டும் தான் கொடுப்பார்கள். ஆனால் நாங்கள் செய்வதைச் சொல்வோம். சொல்வதைச் செய்வோம்.

நீங்கள் வன்னிக்குச் சென்று வருவதற்கு சுலபமான பாதையொன்றினை திறந்து வைத்துள்ளோம். வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்ய நாம் கூடிய கவனமெடுத்து வருகின்றோம்.

உங்கள் பிள்ளைகள் எல்லோரும் இந்த நாட்டில் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வளர வேண்டும். அதற்காக ஒன்றுபட்டு எமது நாட்டை சிறந்த நாடாக உருவாக்குவோம்.

வசதிகள் குறைந்த மக்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டும். அதற்கான வசதிகள் தற்போது இருக்கின்றன. உங்களது பிரதேசம் இப்போது அபிவிருத்தி அடைந்து வருகிறது.

வடக்கு வசந்தத்தால் எழுச்சிபெறும் யாழ். குடா நாட்டையும், நாட்டின் ஏனைய பிரதேசங்களையும் இணைக்கும் யாழ்-மன்னார் ஏ-32 நெடுஞ்சாலை மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்த நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்து மக்கள் அச்சம், சந்தேகமற்று வாழும் நிலையை ஏற்படுத்துவோம் என்று வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்போது உங்களது பிரதேசம் படிப்படியாக அபிவிருத்தியடைந்து வருகிறது.

பல வருடங்களாக முன்னெடுக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்கள் இப்போது உங்களது பிரதேசங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் அனைவரும் ஒன்றுபடுவோம், ஆசியாவின் ஆச்சரியம் மிக்க நாடாக மாற்றுவோம். சௌபாக்கியமிக்க எதிர்காலம் உங்களுக்கு நிச்சயமாக உருவாகும் - என்றார் அவர்.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் டபிள்யூ. பிரேமசிறி நன்றியுரை நிகழ்த்தினார்.

இதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்டின் உட்பட கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களின் அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர் ஆ.சிவசுவாமி எனப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய நிதியுதவியில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் இந்த நிகழ்வில் பிரிட்டிஷ் தூதுவர் கலந்துகொண்டார். அத்துடன் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மக்களும் நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுமாக மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (ஒ-9-14-131)

# கால்கோள் விழாக்கள்

வடமராட்சி, ஜன.17

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா, நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு ஓய்வு பெற்ற அதிபர் வ.கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். (ற-236)

***

வடமராட்சி, ஜன.17

வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தியாலயத்தின் கால்கோள் விழா, நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற வுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி. தேவராணி நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவிற்குப் பிரதம விருந்தினராக கிராம சேவையாளர் சி.சிவபாலசிங்கம் கலந்துகொள்வார். (ற-236)

***

தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கல வன் பாடசாலையின் கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.இராமஜெயம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ற-236)

***

வதிரி வடக்கு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடை பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் த.கலாமணி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ற-236)

***

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் கால்கோள் விழா, நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு நெடுந்தீவு பாடசாலைகளின் கனடா பழைய மாணவர் மன்றத் தலைவர் எ.அருந்தவசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ற-236)

***

வடமராட்சி, ஜன.17

பருத்தித்துறை, சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்குப் பாடசாலை அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்கு வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப் பாளர் சி.புஸ்பலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொளவார். (ற-236)

***

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் கனிஷ்ட பிரிவு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

பாடசாலை அதிபர் தி.சோமசேக ரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குக் காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ் வரன் பிரதமவிருந் தினராகக் கலந்து கொள்வார். (ற-250)

***

யாழ்.கலட்டி றோ.க.த.க. பாடசாலையின் கால்கோள்விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் பொ.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதமவிருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையின் முன்பள்ளிக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ற)

## சங்குப்பிட்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறினார்.

யாழ். சங்குப்பிட்டிப் பாலம் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எவரும் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தனக்கு அழைப்புக் கிடைத்திருக்கவில்லை என சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களுக்கு அழைப்பிதழ் கிடைத்ததா என்பது குறித்துத் தனக்கு எதுவும் தெரியாது என்றார் சுரேஷ் எம்.பி. (சி)

## அரசு - தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றை நிய மித்திருந்தார். முன்னாள் பிரதமரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோர் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் பேச்சுகளில் மீள் குடியமர்த்தல், அரசியல் கைதி களை விடுவித்தல், கடத்தல் ஆகியவை தொடர்பாகவும் பேசப்படும் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேட்புமனு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை நடைபெறும் என்று தேர்தல் செயலகத்திலுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டும், இடம் பெயர்ந்தும் உள்ளனர். இந்நிலையில், உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுத்தாக்கலுக்கான திகதியை பிற்போடுமாறு பல்வேறு அரசியற்கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு, இன்று நடைபெறும் விசேட பேச்சில், வேட்பு மனுத்திகதி பிற்போடல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

## யாழ்.ஆஸ்பத்திரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரே வந்த தனியார் பஸ் வலம் மாறிச்செல்ல முற்பட்ட போது இவரை மோதியது என் றும் -

அதில் பிரஸ்தாப நபர் அந்த இடத்திலேயே மரணமானார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று இடம்பெற்ற மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ஒ-ஐ-9-15-313-288)

## வடக்கு , கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்வம் காட்டப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக கட்சிகளுக்கிடையே பேச்சுக்கள் இடம்பெற்றன. இம்மாதம் 14ஆம் திகதி ஆனந்தசங்கரி, சித்தார்த்தன் ஆகியோர் மாவை சேனாதிராஜாவுடன் பேச்சு நடத்தினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்துள்ள மூன்று கட்சிகளும் எமது கட்சி உள்ளிட்ட நான்கு கட்சிகளும் சேர்ந்து மொத்தமாக ஏழு கட்சிகள் கூட்டமைப்பாகப் போட்டியிடுவது என்று கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

இறுதி முடிவு எட்டப்படும் பட்சத்தில் ஏழு கட்சிகளும் கையொப்பமிட்டு இந்தத் தீர்மானத்தை அறிவிப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது கூட்டணிக் கட்சிகளுடன் பேசிவிட்டு இம்மாதம் 19ஆம் திகதி தமது தீர்மானத்தை அறிவிக்கும் என்று மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

ஆகவே, தமிழ்க் கட்சிகள் அனைத்தும் கூட்டமைப்பில் போட்டியிடுவதா இல்லையா என்று 19ஆம் திகதி புதன் கிழமைக்குப் பின்னரே தெரியவரும் - என்றார். (ஒ-சி)

SCC

2010 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம் 19,23.01.2011

Dip. In MS Office
Dip. In Desktop Publishing
Dip. In Eng. Drawing & Auto CAD
Dip. In Computerized Accounting
Dip. In Audio & Video Editing
Dip. In Visual Basic
Dip. In Web Designing

Dip. In Hardware Engineering
Dip. In Internet e-mail

ONLINE CLASSESக்கும் மாணவர் அனுமதிக்கப்படுவர்

மேலதிக விபரங்களுக்கு

Softview Computer College
43, Arasady Rd, Thaddatheru Junction, Jaffna.
T.P: 021 2225170

VACANCIES

யாழ் முன்னணி கணினி நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- கணினிப் போதனாசிரியர். முழுநேரம்.
  பரீல விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் தேவையில்லை.
- வரவேற்பாளர் (Receptionist)
- முகாமைத்துவ உதவியாளர் - Clerk

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கம்.

விளம்பர இலக்கம். 4109
உதயன் பப்ளிகேசன் No.361 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### அந்தோனி வேதநாயகம்

(சிற்றூழியர், அவசர சிகிச்சைப் பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை)



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவு சிற்றூழியராகிய அந்தோனி வேதநாயகம் நேற்று (16.01.2011) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பிலோமினாவின் அன்புக் கணவரும் ரஜனி, தர்சினி, யாழினி, லெனின் (மலேசியா), அலன் (ஹலோ டிரஸ்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஹென்றி, ரஜீவன் (கொலின்ஸ்), அருந்தவராசன் ஆகியோரின் மாமனும் வேதநாயகத்தின் மைத்துனரும் விதுசன், கிசான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.01.2011) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஆனைக் கோட்டை புனித அடைக்கல மாதா தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பி.ப. 2.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி வீதி,
ஆனைக்கோட்டை.

(109255)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்நகரில் முதல்முறையாக AMI முறையிலான Nurserry............

Trillium MONTESSORI "Our Students Bloom"

2011 தை 20 முதல் ஆரம்பம்

- Dr Montessori ஆல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்விமுறை
- சிறுவர்களுக்கான சிறந்த வகுப்பறை வசதி (Special Material Avilable)
- அனுபவம் மிக்க AMI Diploma holder ஆசிரியரினால் வகுப்புக்கள் நடத்தப்படும்
- ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழி மூலமான கற்கைநெறி

2 ½ வயது முதல் 5 வயது வரையான குழந்தைகளுக்கானது.

அனுமதிகளுக்கு முந்துங்கள்

மேலதிக விபரங்களுக்கு....

திருமதி பி பிரதாயினி AMI (Dip),BSc (Teaching Tech)
இல 45, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
☎ 077 6078580

# வெளிநாடுகளில் அரசுக்கு எதிராக புலி ஆதரவாளர்கள்

## சாடுகிறார் பீரிஸ்

கொழும்பு, ஜன.17

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான சிலர் இன்னமும் வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து விட்டாலும், அதன் தாக்கங்கள் இன்னும் தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளியல்
N.B.கஜீதரன்
A/L DAY CLASS
Tue, Thur 2 - 4 pm
Sat, Sun 7 - 8 am
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.நகர்.

தேவை
யாழ்.நகரில் உள்ள பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு Clerk தேவை. (இருபாலரும்) யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.
0774598440

விற்பனையாகிறது
* பாட முன்னாயத்தம் 5 E கற்றல் கற்பித்தற் குரிய ஆசிரியர் செயற்பாட்டுப் படிவப் புத் தகம்
* பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டம் - SBA
ஆக்கம்: N.B.ரஜீந்திரன் B.A
மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
021 222 9881 சாவகச்சேரி. 021 227 0003

KALAI VANI INSTITUTE - KOPAY
English Medium Classes => Grade - 6
தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பம்.
இடம்: கலைவாணி கல்வி நிறுவனம், கோப்பாய்.
ஆரம்பம்: 20.01.2011 தைப்பூச தினத்தன்று
நேரம்: 4.00 pm
ஆங்கில மொழிமூலம் பயில விரும்பும் தரம் 6 மாணவர்களே தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

KALAI VANI KIDS PARK - KOPAY
துள்ளித் திரியும் மழலைகளுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
* Spoken English
* Writing Skills
குறிப்பு: பரிசளிப்பு விழா, வாணிவிழா மற்றும் ஆங்கில தின நிகழ்வுகள் மேடை நிகழ்வுகளுடன் நடைபெறுகின்றன.
பதிவுகளுக்கு: கலைவாணி கல்வி நிறுவனம், கோப்பாய்.
நேரம்: 4.00 pm
ஆரம்பம்: 22.01.2011

STUDY and WORK IN UK
அனைத்து மாணவர்களிற்கும் எம் நிறுவனத்தின் ஊடாக இனியதைத்திருநாள் வாழ்த்துக்கள்
VISA WITHIN 4 WEEKS
★ G.C.E. O/L உடன், உயர்கல்வியை London இல் தொடர இறுதிச் சந்தர்ப்பம்
★ IELTS கட்டாயம் தேவையில்லை.
★ மிகக்குறைந்த கல்லூரிக்கட்டணங்களுடன் UKBA இனால், அங்கீகாரம் பெற்ற சிறந்த கல்லூரிகளில் சென்று - உங்கள் பட்டப்படிப்பை தொடரலாம்
★ ஆங்கிலம் பேசக்கூடியவர்களுக்கு - மிகவும் இலகுவாக London செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
★ London இல் ஆங்கிலக்கல்வியை (Advance English) தொடர விரும்புபவர்களுக்கு நாம் 100% விசாவை உறுதிப்படுத்தி தருவோம் என்பதை தெரிவித்து நிற்கின்றோம்.
★ விசாவை 100% உறுதிப்படுத்துவதற்கு முன்னர் எவ்விதக்கட்டணங்களும் அறவிடப்படமாட்டாது
★ UK உயர்ஸ்தானிகர் நிலையம் (UKBA) மிகவிரைவாக புதிய நடைமுறையை கொண்டுவருவதன் விளைவாக- இன்றே இணையுங்கள்....
★ எம் நிறுவனத்தின் மேலுமொரு சேவை.
London இற்கான Student Visitor / January 10, 2011 இலிருந்து.
★ ஒரு வருடத்திற்கான Visit visaவை சிறந்த சட்ட நிபுணர்களின் வழிகாட்டலிற்கமைய- பெற்றுத்தருவோம் என்பதை- தெரிவித்து நிற்கின்றோம்...
U.SISIL REMINDAS
Contact Now: 077 9265447 (Jaffna)
COLOMBO HIGHER EDUCATION CONSULTACY
UK Office: Mr.Haris,
28, College Road, Harrow, HA11 BE, London.

அறிவித்தல்
NEW SCIENCE HALL
KANNATHIDDY JAFFNA
PHYSICS - MR.KUMARAN
19.01.2011 WED
2013 A/L - BIO BATCH - 8.30 - 10.00
2011 A/L - LIGHT - 10.30 - 1.00
2013 A/L - MAT. BATCH - 1.30 - 3.00

வடபகுதி நெற் செய்கையாளரே...!
"நெல் எரிபந்தம்"
நோய்க்கு BAYER இன் ஒரே தீர்வு




பொலிகர்
EW 250
HAYLEYS AGRO
ஹேலீஸ் அக்ரோ காட்சியறை
72, ராஜா பிளாஸா, கோண்டாவில்.
0777 594992 / 0777 288337
The World Of Hayleys Since 1878
ஹேலீஸ் காட்சியறை
47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292
பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாக கையாளவும்.

வினோ நகைப் பூங்கா
Vino Nakai Poonka
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர் - சடாச்சரம் புவிச்சந்திரன்
T.P. 222 5394 / 021 222 9494 Fax- 021 2222824



எழில்மிகு தங்க ஆபரணங்களை
தரத்தினுள் தவறாது
நம்பிக்கையில் நழுவாது
நாணயத்தில் நாணயமாக
விநயமுடன் விந்தையுற
விளங்கிடும் பூங்கா!!!... ஆம்
அது தான்
வினோ நகைப் பூங்கா.

கடந்த இருபது வருடங்களாக தங்க நகை வியாபாரத்தில் இனிதே நடைபயின்று இருபத்தோராம் ஆண்டில் காலடி பதிக்கும் வேளையிலே...
எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கும், புகழுக்கும் உறுதுணையாக விளங்கிய அன்புறு வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் மனங் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வு கொள்கின்றோம்.
உலகத் தரம் வாய்ந்த அதி நவீன Digital கருவி மூலம் உங்கள் தங்க நகைகளின் தரத்தை நம்பிக்கையுடன் பரிசோதித்து தரநிர்ணய சான்றிதழ் வழங்கப்படுகின்றது என்பதனையும் அறியத்தருகின்றோம்.
எமது நிறுவனத்துக்கு நாட்டின் எப்பகுதியிலும் வேறு கிளைகளோ, ஸ்தாபனங்களோ, முகவர்களோ இல்லை என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

வினோ நகைப்பூங்கா, உரிமையாளர்,
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ஊழியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் கண்ணீருக்கு மத்தியில் தைப்பொங்கல்



தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் இன்று இடம்பெறுகின்ற இந்தத் தைப்பொங்கல் பல பெண்களின் கண்ணீர்களுக்கு மத்தியில்தான் இடம்பெற்றது.

வாழ்க்கையில் எத்தனையோ கனவுகளுக்கும் மத்தியில் வா்ழ்ந்த ஆயிரக்கணக்கான பெண்கள் இன்றைய நாளில் மூலையில் முடங்கியிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கெல்லாம் என்ன காரணம் என்று எவரும் கேள்வி கேட்க முன்வர மாட்டார்கள். உண்மைதான். இதற்கான பதில் இன்று எல்லோர் மனங்களிலும் தெளிவாக உள்ளன.

கடந்துபோன யுத்தமும் நடந்துபோன பிரிவுகளும் எத்தனையோ பெண்களை இன்றும் கண்ணீருக்குள் மூழ்கடித்துள்ளது என்பது உண்மைதான்.

**குட்டி**

திருமணமான ஒரு பெண்ணுக்கு, என்னதான் ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும் அவளது கணவனுக்கு அத்தனை சொந்தங்களும் ஈடாகுமா?. இதை உணராத உள்ளங்கள் நிச்சயம் இந்த உலகில் இருக்க நியாயமில்லை.

பொட்டோடும் பூவோடும் மங்களகரமாகப் பொங்கி கணவன் பிள்ளைகளுடன் உண்டு மகிழ்ந்த காலம் இவர்கள் மனங்களில் இன்று உறுத்தும் போது அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை கூற எவரும் அருகில் இருப்பார்கள்? இல்லையே. எத்தனையோ பெண்கள் கணவனை இழந்தது மட்டுமல்லாது தனது உறவுகள் அத்தனையையும் இழந்து நிர்க்கதியான நிலையில் இருப்பது எத்தனை போருக்குத் தெரியும்.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத வடுவாகப் பதிந்து போயுள்ளது தான் நடந்து முடிந்த யுத்தம்.

கண்ணுக்கு முன்னே கணவன் துடிதுடித்து இறந்ததைக் கண்டும், கணவன் காணாமல் போனதை அறிந்தும், தடுப்பு முகாம்களில் கணவன் படும் அவஸ்த்தைகளைக் கேள்வியுற்றும் பெண்கள் படும் வேதனைகள் எத்தனை எத்தனை. தனது கணவனுக்காகத் தன்னால் எதையும் செய்ய முடியாதுள்ளதே என்று இன்று எத்தனையோ பெண்கள் உள்ளுக்குள்ளேயே அழுது அழுது தமது வேதனைகளைத் தீர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தீர்மானம் எடுக்கக் கூட எங்களால் முடியாது. அவர்களது துன்பம் தீர்வில்லாத ஒன்றுதான்.

இவ்வாறான துன்பங்கள் ஒருபுறம் இருக்க, ஒன்றுமே அறியாத பச்சைக் குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதில் கூறமுடியாதவர்களாக எத்தனையோ விதவைத் தாய்மார்கள் இன்று கண்ணீர் சிந்துவார்கள்: கண்ணீர் சிந்திக்கொண்டு இருக்கிறார்கள். ஏன் அம்மா எங்கள் வீட்டில் மட்டும் பொங்கேல்லை? ஏன் அம்மா எங்கடை அப்பா எங்கை அம்மா? என்று இப்படி எத்தனையோ உயிரை உருக்கும் கேள்விகள்.

அயல் வீடுகளில் பெற்றோருடன் சிறார்கள் பொங்கி பட்டாசுகள் கொழுத்தி மகிழ்வது இந்தச் சிறார்களின் உள்ளங்களில் எவ்வாறு தாக்கத்தை உண்டு பண்ணும். இவர்களின் சந்தோசத்துக்கு ஏற்றவகையில் அவர்களுக்கான பட்டாசுகளை வாங்கிக் கொடுக்கக் கூட முடியாதவளாக ஒரு தாய் படும் வேதனை இங்கு சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

யார் என்னதான் வேதனை அடைந்தாலும் என்னதான் துன்பம் அடைந்தாலும் இன்று நாம் பொங்கல் பொங்கத்தான் செய்தோம்.

இந்த விடயத்தில் பெண்கள் சிறுவர் தொடர்பான அமைப்புகள் கவனம் எடுத்துச் செயற்பட்டால் உளவியல் ரீதியாக இவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஓரளவாவது தீர்வு காணமுடியும். அவர்களின் இழப்புகளை எவராலும் ஈடுசெய்ய முடியாது. இது உண்மை தான். எனினும் ஆறுதல் வழங்க முடியும்.



# வாழ்வின் வசந்தம்

**நமஸ்காரம்:**
பொங்கல் தினத்தன்று
காலை எழுந்தவுடன்
எல்லோரும் சூரியனை
நமஸ்காரம் செய்கின்றனர்.
ஆனால் சூரியன் மட்டும்
உன்னையும் உன்
கோலத்தையும் நமஸ்காரம்
செய்கிறது.

**பெண்:**
தரையில் போட்ட
கோலத்தை ரசிக்கின்றாள்
அன்றைய பெண். திரையில்
போடும் கோலத்தை
ரசிக்கிறாள் இன்றைய பெண்

**பூமி:**
அவள் விரலே அழகு
நிரூபித்துவிடும் வாசல்
கோலம் அங்கே அரிசிமா
கோலம் போட்டாள் அம்மா
அவளுக்கு பரிசில்.
நீட்டினான்- பகலவன்

**வாசல் பெருக்கி:**
நீர்தெளித்துக் கோலமிட்டுச்
செல்கிறாய்! ஏதோ மொத்த
உலகையும் அலங்கரித்துக்
கொண்டது போல்
பெருமிதம் கொள்கிறாய்.

**வாழ்க்கை:**
உன்னையும் தாண்டி
பணயப்படும் உனது
வாழ்க்கையில் குற்ற உணர்
வுகளை இனியாவது
தொலைத்து விடட்டும்.

பிருந்தா

## உறைந்து போகும் மனம்

தலை நரைத்த மலையின் உச்சியில்
நடுங்கி வாழ்ந்த போதும்,
அடர்ந்த காடுகளின் இருளில்
வாழும் விலங்குகளுக் கிடையில்
வசிக்க நேர்ந்த போதும்,
பனி உருகி ஓடும் ஆற்றின்
கரையில் கூழாங்கற்களின் மேல்
அமர்ந்து குளித்த போதும்,
நில நடுக்கத்தில் உருண்டு வந்த
மலைப் பாறைகளை ஓடிக் கடந்ததும்,
ஆற்றின் மேல் தொங்கும்
பாம்புப் பாலத்தைக் கடந்து
கரை சேர்ந்ததும்
பெரிதாக எனக்குத் தோன்றவில்லை,
ஆனாலும் மனம்
உறைந்து தான் போகிறது
மனிதன் மறைத்து வைத்து
எடுக்கும் வீச்சரிவாளால்.

சாந்தி




## பொங்கல்

அதிகாலை வேளையில்
கதிரவன் வருகை கண்டு
இல்லத்தின் முற்றத்தில்
வண்ணக்கோலமிட்டு

மகிழ்ச்சிவெள்ளத்தில் மகிழ்ந்த
அந்த பொங்கல் நாளும்
மறப்போமா என்றும்....
இனி என்று காண்போம் அத்திருநாள்.

நினைக்கையில் நெஞ்சம் கொஞ்சம்
வேதனை தருகிறது
நிலையற்ற வாழ்வால் நித்தமும் பொங்கல்
முற்றத்தில் நிலையாகின்றது..

என்று தணியும் இந்த நிலை
அன்று காண்போம்
எமது ஊர்களில் அலையென
மக்கள் பொங்கும் நிலை.

காயத்திரி

# பொங்கல் பொங்கி வழிவது போல் வாழ்வில் இன்பங்கள் நிறையட்டும்

தை பிறந்தால் வழிபிறக்கும் என்பது பழமொழி. தை மாதம் புதிய விடயங்கள் ஆரம்பிக்கும் மாதமாகும். உழவுத் தொழிலாளர்களின் அறுவடை முடித்து அதனைப் பொங்கல் பெங்கிக் கொண்டாடுவதே தைப்பொங்கல் ஆகும். இது தமிழர்களின் முதன்நாள் அதுவே திருநாள்.

தையில்தான் நெல் அறுவடை செய்து வேறு பயிர்கள் செய்ய ஆரம்பிப்பார்கள். அதே போல் வாழ்க்கையில் சுபகாரியங்களைத் தொடங்குவதும் இந்த மாதத்தில்தான். உழவர்களின் திருநாளான இந் நாளில் சூரியனுக்கு பொங்கல் பொங்கிப் படைத்து உண்டு மகிழ்கின்றனர்.

ஆனால் இன்று காலம்மாறி பொங்கற் திருநாளைக் கொண்டாட நேரமில்லாது சிலர் பொங்கல் கொண்டாடுவதில்லை. இதற்குக் காரணம் போர்ச் சூழல். கணவனை/ குடும்பத் தலைவரை இழந்த பெண்கள் தான் இன்று அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர் குடும்பச் சுமை, கவலை காரணமாகப் பெண்கள் துன்பகரமான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இதனால் சில குடும்பங்களில் பொங்கல் பொங்குவதில்லை.

இன்றைய யுகத்தில் நாகரிகம் வளர்ந்து பாரம்பரிய முறைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிவடைந்து வருவது கவலைக்குரிய விடயம். இருந்தும் இப்போது பெண்கள் படித்து தொழில் புரிவதனாலும் பாரம்பரிய பழக்க வழக்கங்களைக்



கைவிட்டு வருகின்றனர்.

ஆனால் சூரியனையும் உழவுத் தொழிலையும் மையமாக வைத்துக் கொண்டாடும் ஒரு சிறப்பு வாய்ந்த பண்டிகையாகத் தைத்திருநாள் அமைந்து விடுகிறது. இதனால் இயற்கையை வணங்குதலும் உழவைப் போற்றுதலுமாக இத்திருநாளைக் கொண்டாடி பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கூற்றுக் கேற்றவகையில் பழைய பொருள்களை தீயிலிட்டு அழிப்பது போல கவலை, துன்பங்களை தேவையற்ற விடயங்களையும் நம் மனதில் இருந்து தூக்கி எறிய வேண்டும். இதன் மூலம் ஓர் உத்வேகம் பிறக்கும் புதிய ஆண்டையும் புதுவாழ்வையும் வாழ ஏற்புடையதாக எம்மை மாற்றிக் கொள்ளவும் உதவும். இதனால் நம்மை நாம் வழக்கப்படுத்தி பொங்கல் பொங்கி வழிவது போல எமது வாழ்க்கையிலும் துன்பங்கள் மறைந்து இன்பங்கள் நிறைந்து வாழ்வை இனிமையாக வாழ வழிவகுப்போம்.

-நிலா

# மின்னுவது எல்லாம் பொன்னல்ல...



தொலைவிலிருந்து தொ(ல்)லை பேசியில், 'Chatting'......
சந்திப்பது தியேட்டரில்; படம் பார்க்க அல்ல......
கையில் 'Notes' கொப்பியுடன், போவது 'Lodge'க்கு;
'Class'க்கு அல்ல......
'Phone'ல் பார்ப்பது ஆபாசம்.......
'Flash drive'ல் 'Blue print' (நீலப்படம்)....
'Net cafe' ல் கும்மாளம்.....
உனக்குப் புரியவில்லையா.........?
உன் மனசு என்ன குருடா........?
மானத்தைப் புதைத்து......வெறி பிடித்து அலையும் காமுகரிடம்
உன் கற்பைப் பறி கொடுக்காதே....... பெண்ணே!
உன் அழகும், கற்பும் இறைவன் கொடுத்த கொடையடி....
அதில் மண் தூவாதே......
கற்பென்றால் அற்பமா?
பார்க்க, பேச அமுதம் போல இனிக்குமடி......
உள்ளே மறைந்திருக்குது நஞ்சு.....
உனக்கு இறுதியில் அவர்கள் வைக்கும் "பட்டப்பெயர்"
"ஒருநாள் பெண்டாட்டி........"
பெண்ணெ... உன்னை நீயே பாதுகாத்துக் கொள்....
சீரழியும் கலாசாரத்திற்கு எண்ணெய் ஊற்றாதே
உன்னை நீயே மாற்றிக் கொள், மாறி விடு, பெண்ணே..!
உன் இளமையைச் சாக்டிக்காதே.....
வேண்டாம் பெண்ணே, இந்தச் சீர்குலைவு....
மின்னுவதெல்லாம் பொன்னல்லடி...
மயங்கி விடாதே.....
காமத்தின் முக(ம்) வரியை ஒழிக்க, மகளிரே
திரண்டு வாருங்கள்......
குரல் கொடுப்போம்!
பெற்றவர் மனம் குளிர,
நெஞ்சில் நிறைந்த மணவாளனுக்கு,
மணவாட்டியாய் வரப் பாடுபடு.....
உன் பெண்மை உனக்கு அழகு இப்போது.........
உன் எதிர்காலத்தை இருள்மயம் ஆக்கிவிடாதே!

உனக்காக நான்,
நானும் உன்னைப் போல நொந்த ஒரு பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org